YARL OSAI

# யாழ் ஓசை

வார இதழ்

Regested No. QD/130/News/2011

ஓசை : 01 நாதம் : 44 வெள்ளிக்கிழமை 02.09.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# மர்ம மனிதன் வேட்டையில் பொது மக்கள் மீது கடும் தாக்குதல்

### இருவர் கடுங்காயம்; கொக்குவில் பகுதியில் சம்பவம்

வண்ணார்பண்ணை,

தென்னிலங்கையைச் சேர்ந்த பஸ் வண்டிக்குள் மர்ம நபர் ஒருவர் புகுந்ததையடுத்து பொது மக்கள் பஸ் வண்டியை தாக்கியதன் எதிரொலியாக அப்பகுதிக்கு விரைந்த சீருடையினர் வீடுகளில் இருந்த ஆண்களை அழைத்து வந்து கண்மூடித்தனமாக தாக்கிய சம்பவம் கொக்குவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)



## கடைக்குள் வைத்து வர்த்தகர் குத்திக் கொலை

### ஆட்காட்டிவெளியில் சம்பவம்

(தலைமன்னார் நிருபர்)

மன்னார் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபா் பிரிவில் ஆண்டான்குளம் ஆட்காட்டிவெளி பகுதியில் வர்த்தகர் ஒருவர் புதன் இரவு கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன். இக்கொலை சம்பந்தமாக பொலிசாரும் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இது பற்றி ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவருவதாவது

கனகரட்ணம் மகேந்திரன்(வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளவராவார்.

இவர் ஆட்காட்டிவெளி கிராமத்தில் ஒரு பலசரக்கு கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊருக்குள் புகுந்த மர்ம மனிதர்களில் ஒருவர் மடக்கிப் பிடிப்பு; மற்றையவர் தப்பியோட்டம்

### கோண்டாவிலில் சம்பவம்

வண்ணார்பண்ணை,

மர்ம மனிதனாக நடமாடிய இருவரில் ஒருவரை மடக்கிப் பிடித்த ஊர் மக்கள் இராணுவம் முன்னிலையில் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயப் பகுதிக்குள் துவிச்சக்கர வண்டியில் வந்த இருவர் துவிச்சக்கர வண்டியை பஞ்சர் பண்ண வேண்டுமென தெரிவித்து அப்பகுதியில் இருந்த துவிச்சக்கர வண்டி திருத்துமிடத்தில் விட்டு நடந்து சென்றுள்ளனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் சுதுமலை பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டம்

### மக்கள் பயப்பீதியில்

யாழ்ப்பாணம்,

மானிப்பாய், சுதுமலை, மடத்தடி ஆகிய பகுதிகளில் மர்ம நபர்களின் நடமாட்டம் அடுத்தடுத்து இடம் பெறுவதால் இப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளதுடன் இரவு நேரங்களில் தூக்கமின்றி விழித்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மானிப்பாய் எரிபொருள் நிலையத்திற்குப் பின்புறமாகவுள்ள ஒரு வீட்டிற்கு இரவு ஒருமணி போல் சென்ற மர்ம மனிதர்கள் வீட்டுக் கதவைத் தட்டினார்களாம்.

(6ஆம் பக்கம் பார்க்க)



ஜெயசந்திரன்ஸ் பட்டாடைகளால் உங்கள் திருமண விழாவை அலங்கரித்திடுங்கள்

JEYECHANDRANS
The Art of Fashion

No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com



# இன்றைய நேர்முகப் பரீட்சையை ரத்துசெய்துவிட்டு தகுதிகாண் அடிப்படையில் தேர்வு நடத்த வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் வேண்டுகோள்

அச்சுவேலி,

மன்னாரில் செயற்படவுள்ள ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் பதவி மற்றும் பதில் அதிபர் பதவிகளுக்கு இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையை இரத்துச்செய்து பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமான முறையில் விளம்பரம் செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சையை நடத்த வேண்டும். இல்லாவிடில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்டாலின் ஆசிரியர் கலாசாலைகளின் ஆணையாளர் மற்றும் மத்திய கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் ஆசிரிய கலாசாலை நேர்முகப் பரீட்சை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்டாலின் மேலும் தகவல் தெரிவிக்கையில்-

ஆசிரியர் கலாசாலைகளின் ஆளணி நியமனம் மற்றும் நிர்வாகம் மத்திய கல்வி அமைச்சின் பரிபாலனத்துக்கு உட்பட்டது. அந்த வகையில் பொருத்தமான கால இடைவெளியில் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரி அதனடிப்படையில் பொருத்தமான தகுதி உடையவர்களைக் குறிப்பிட்ட பதவி ஆளணிக்கு நியமனம் செய்ய வேண்டும் என்றார்.

மன்னார் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் மற்றும் பதில் அதிபர் ஆளணிக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கு உரிய முறையில் விளம்பரம் செய்யாமல் வடக்கு மாகாண நிர்வாகம் நேர்முகப் பரீட்சையை இன்று வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

# ஆலய சுற்றாடல் எப்பொழுதும் மனத்திற்கு அமைதிதரும் இடமாக அமைய வேண்டும்

## சொற்பொழிவாளர் இரா. செல்வவடிவேல்

(வட்டுக்கோட்டை நிருபர்)

ஆலய சுற்றாடல் மனதிற்கு அமைதி தருவதாகவும் மன மாயையைக் களையும் இடமாகவும் அமைய வேண்டும். சைவத் தமிழ் மக்களுடைய அடையாளத்தை இழந்துவிடும் வகையில் ஆலயச் சூழலைக் களியாட்ட மையமாக மாற்றக்கூடாது. எமது சமய பண்பாட்டுக்கு அமைவான நிகழ்வுகள் மட்டுமே ஆலயச் சூழலில் நடைபெற வேண்டும்.

இவ்வாறு நல்லூர் 63 நாயன்மார் திருமடத்தில் உற்சவகால சொற்பொழிவுத் தொடரில் குதிரை வாகனத் திருவிழா வன்று ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்திய சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது -

வழிபாடு என்பது உடல்ரீதியாக அன்றி உளரீதியாக அமைய வேண்டும். மனதில் இறைவனை நிறுத்துவதே உண்மையான பக்தியாக அமையும். நாம் எமது மனதில் பல்வேறு வகையான அழுக்குகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு துன்பமடைகின்றோம். இந்த மன அழுக்கை அகற்றுவது தான் பக்தியின் நோக்கமாக அமைய வேண்டும். ஆலயங்களில் நடைபெறும் நிகழ்வுகள் அதற்கு உதவ வேண்டும்.

ஔவையாரிடம் முருகன் அரியது எது என்று கேட்டான். அரிது அரிது மானிடராதல் அரிது அதனினும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது என்பார் ஔவையார். இதனை நேரடியாக முதுகுக்கூன், கண்பார்வை இழப்பு, காது கேளாமை, பெண்ணாகப் பிறத்தல் என்று பொருள் கொள்வதை விடுத்து வஞ்சக எண்ணம், வன்முறைச் சிந்தனை, பஞ்ச மாபாதகம் செய்வோர் இவர்களே கூன் விழுந்த மனிதர்கள். தர்மத்தை மறந்து அதர்ம நெறி நின்று பொருளீட்டுவதற்கு எதையும் செய்யலாமென நினைத்து நடப்பது சமூக அநியாயங்களைக் கண்டும் காணாமல் இருப்பவர்கள். இவர்கள்தான் கண்ணிருந்தும் குருடர்களானவர்கள்.

நல்ல விடயங்களைக் கேட்காது, உடல் உள்ளத்திற்கு தீங்கிழைக்கும் செய்திகளைச் செவிமடுத்தும் ஏழை அழுவதைக் கேட்காதிருப்பவர்களே மனிதச் செவிடர்களாவர்.

ஔவையார் பேடு எனக் குறிப்பதை பெண் என்று பொருள் கொள்ளக்கூடாது. ஏனெனில் ஔவையும் பெண் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆணா? பெண்ணா? என்று புரியாத திருநங்கையர் நிலையில் சில ஆண்கள் செய்யும் செயல்களும் சில பெண்கள் செய்யும் செயல்களும் சமூகத்தில் காணப்படுகின்றன. இவர்களையே ஔவையார் பேடு என்று குறிப்பிடுகிறார். இத்தகைய குறைபாடுகள் இல்லாத செம்மையான மானிடப் பிறப்பையே ஔவையார் குறிப்பிட்டார்.

மானிடப் பிறவி எடுத்த நாம் எமது சைவசமய விழுமியங்களைப் பின்பற்றி தர்மநெறி நின்று பொருளீட்டி ஏழைகளுக்கு உதவி இறை அர்ப்பணமாக நற்பணி பல செய்து நல்வாழ்வு வாழப் பழகிக்கொள்ளவேண்டும் என்றார்.

# யாழ். குடாநாட்டில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொக்குவில் நிருபர்)

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. தற்போது கோடைகால விடுமுறை என்பதால் தென்னிந்தியாவிலிருந்தும் மேற்குலக நாடுகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வடபகுதியை நோக்கி வந்த வண்ணமுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மட்டும் நயினாதீவுக்கு 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் சென்றுள்ளனர் என்று வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். வாகனங்களுக்கு தரிப்பிட வரி மதிப்பிடும் மேற்படி உத்தியோகத்தர் கூறியதாவது, திங்கட்கிழமை மட்டும் தான் பெருமளவான தென்னிலங்கை வாகனங்களுக்கு தரிப்பிட வரி அறவிட்டதாக தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக பெருமளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

# ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நோன்புப்பெருநாள் தொழுகை

(ஐந்துசந்தி நிருபர்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை நடைபெற்றது. மீள்குடியேறி வசிக்கும் பெருந்தொகையான முஸ்லிம் மக்கள் அனைவரும்இப்பெருநாள் தொழுகைக்காக ஒன்று கூடினார்கள்.

யாழ்ப்பாண வரலாற்றில் முதற்தடவையாக பொது மைதானத்தில் நோன்புப்பெருநாள் நடைபெற்றுள்ளது. இதுவரை காலமும் அவ்வப்பகுதி பள்ளிவாசலில் நடைபெற்று வந்தன.

இவ்வருட நோன்புப் பெருநாள் தொழுகையையும் ஜும்மாவையும் பொதுவான இடத்தில் நடைபெறுவதற்கான முயற்சியை யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் அனைத்து ஜும்மா பள்ளிவாசல்களின் பரிபாலன சபையினருடன் மேற்கொள்ளும்படி தீர்மானத்திற்கமைய நடைபெற்றுள்ளன. பெருநாள் தினத்தன்று 31 ஆம் திகதி காலை 7.45 மணிக்கு மௌலவி அப்துல் அஸிஸ் (காஸிமி) தொழுகையை நடத்த மௌலவி மஹ்மூத் (பலாஹ்) குத்பா பேருரை நிகழ்த்தினார்.

இவர்களுடன் யாழ். உலமா சபை உறுப்பினர்களான மௌலவி மார்களும் கலந்து கொண்டனர். நாலு ஜும்மா பள்ளித் தலைவர்களும் மற்றும் பள்ளிவாசல் உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் பெருநாள் தொழுகையை நடத்தினார்கள்.

இறுதியில் மஹ்மூத் மௌலவியின் துவாப் பிரார்த்தனையுடன் முடிவுற்றதுடன் வருகை தந்தவர்களுக்கு சிற்றுண்டியும் குளிர்பானமும் வழங்கப்பட்டன.

பெருநாள் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் முகமாக ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்து மனமகிழ்ந்தனர். மீள்குடியேறியுள்ள மக்களின் வாழ்வுக்காக பிரார்த்தனையும்நடைபெற்றது.

# அராலி தரவை நிலங்களில் புற்கள் வளர்க்கப் பணிப்பு

நெடுந்தீவு,

வேலணை அராலியிலுள்ள தரவை நிலங்களை உழுது பண்படுத்தி மாடுகளுக்கான புற்களை வளர்க்க வேண்டுமென வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி உத்தரவிட்டுள்ளார்.

அராலிப் பகுதியில் வீதி திருத்தம் மற்றும் தேவைகளுக்கென அப்பகுதி மக்கள் மண் எடுப்பதால் தரவைப் பகுதி மேடு பள்ளம் நிறைந்து காணப்படுவதுடன் அப்பகுதியில் மேயும் மாடுகளுக்கான புல்லும் அருகி வருவதாக வேலணை. பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியைச் சமப்படுத்தி மாடுகளுக்கான புல் வகைகளை வளர்க்க வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டதையடுத்து ஆளுநர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

# கோவிலில் களவாடப்பட்ட பொருட்கள் மீட்பு

சங்கானை,

சித்தன்கேணி சிவன் கோவிலில் அண்மையில் களவாடப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான பித்தளைப் பொருட்கள் சுன்னாகம் பொலிஸாரால் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக ஆலய குருக்கள் தெரிவித்துள்ளார்.

இணுவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற களவின்போது பிடிக்கப்பட்டவர்கள் மூலம் இப் பொருட்கள் சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இப்பொருட்களை ஐந்து சந்தியிலுள்ள பித்தளைப் பொருட்கள் உருக்கி வார்க்கும் ஒருவருக்கு திருடர்கள் விற்றுள்ளார்கள்.

மீட்கப்பட்ட பொருட்களைப் பார்வையிட்ட ஆலய குருக்கள் அவற்றை அடையாளம் காட்டியுள்ளார்.

# சமூக அலுவல்கள் அமைச்சு நடத்தும் இவ்வாண்டுக்கான சிற்ப ஓவிய விழா

அச்சுவேலி,

கலாசார மற்றும் சமூக அனுபவங்கள் அமைச்சு நடத்தவுள்ள 'சிற்ப ஓவிய விழா -2011சு க்குப் படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன, இவ்விழா தேசிய ரீதியில் நடைபெறவுள்ளது.

கலாசார மற்றும் சமூக அலுவல்கள் அமைச்சும் கலாசார திணைக்களமும் இலங்கை கலைக் கழகத்தின் அரச ஓவிய சிற்ப சபையும் இணைந்து தேசிய ரீதியில் சிற்ப ஓவிய விழாவை நடத்தவுள்ளன.

நாடளாவிய ரீதியில் சிற்ப ஓவிய ஆக்கங்களின் மதிப்பீடு மற்றும் கலைத்துறையில் மறைந்திருப்போரை யும் தனியாக இருப்போரையும் வெளியுலகுக்குக்கொண்டு வருதல் அவர்களின் ஆக்கங்களை அறிந்து வலுப்படுத்தல், நாட்டிலுள்ள சிற்ப ஓவிய கலைகளில் ஆர்வமுள்ள ரசிகப் பெருமக்களின் ரசனைக்கு இடமளித்தார். ரசிகர்களின் அளவை அதிகரித்தல் என்பனவற்றை நோக்காகக்கொண்டு சிற்ப ஓவிய விழா நடத்தப்படவுள்ளது.

படைப்பாக்கங்கள் உருவப்படம், வர்ணம் தீட்டுதல், சுவரோவியங்களைப் பிரதிமைப் படுத்தல், பூமிக்காட்சிகள், அச்சுப்படுத்தல், சிற்பங்கள், பொருத்தல் என்ற வகையில் ஆக்கங்களைச் சமர்ப்பிக்கலாம்.

படைப்புக்களை இலங்கை பிரசையாகவுள்ள 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் சமர்ப்பிக்கலாம். அவை அண்மைக்காலத்தில் (2010-2011) காலப்பகுதியில் உருவாக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். முன்வைக்கப்படும் ஆக்கங்களுக்கு பரிமாணம் பற்றிய கட்டுப்பாடுகள் இல்லை. ஒவ்வொரு ஆக்கத்துக்கும் விபரங்களை உள்ளடக்கிய தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 011 - 3188873 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியலாம்.




# ஆளுநரின் செயலாளராக இளங்கோவன் நியமனம்

அச்சுவேலி,

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக இ. இளங்கோவன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆளுநரின் செயலாளராக கடமையாற்றி வந்த எஸ். ரங்கராஜன் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது என்ற தீர்மானத்துக்கு அமைய கடந்த 15ஆம் திகதியுடன் அவரின் சேவை முடிவுக்கு வந்ததையடுத்து இ. இளங்கோவன் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இளங்கோவன் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராகக் கடமை புரிவதோடு ஆளுநரின் செயலாளராகவும் பதவியையும் வகிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் தற்பொழுது சேவை நீடிப்புப் பெற்று ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரிபவர்கள் என்ற வகையில் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் கடமை புரிகின்றனர். இவர்களில் மேலும் பலரின் சேவை முடிவுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# செல்வச் சந்நிதி ஆலயத்தில் வருடாந்த திருவிழா ஆரம்பம்

வடமராட்சி,

யாழ். குடாநாட்டில் பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களில் ஒன்றான தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

முக்கிய திருவிழாக்களான பூங்காவனத் திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் கைலாச வாகனத் திருவிழா 7 ஆம் திகதி புதன்கிழமையும் சப்பறத்திருவிழா 10 ஆம் திகதி சனிக்கிழமையும் தேர்த் திருவிழா 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெறும்.

தீர்த்தத் திருவிழா 12 ஆம் திகதி திங்கட்கிழமையும் அன்று மாலை மௌனத் திருவிழாவும் நடைபெறுவதுடன் வருடாந்தப் பெருந்திருவிழா நிறைவடையும்.

## சித்தன்கேணி சிவன் கோவிலில் களவாடப்பட்ட பொருட்கள் மீட்பு

சங்கானை,

சித்தன்கேணி சிவன் கோவிலில் அண்மையில் களவாடப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான பித்தளைப் பொருட்கள் சுன்னாகம் பொலிஸாரால் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக ஆலய குருக்கள் தெரிவித்துள்ளார்.

இணுவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற களவின்போது பிடிக்கப்பட்டவர்கள் மூலம் இப் பொருட்கள் சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் ஏறக்குறைய 29 ஆலயங்களில் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. இப்பொருட்களை ஐந்து சந்திலுள்ள பித்தளைப் பொருட்கள் உருக்கி வார்க்கும் ஒருவருக்கு திருடர்கள் விற்றுள்ளார்கள். மீட்கப்பட்ட பொருட்களைப் பார்வையிட்ட ஆலய குருக்கள் அவற்றை அடையாளம் காட்டியுள்ளார்.

# சங்கானைப் பகுதியில் அதிகரிக்கும் மர்ம மனிதர்களின் நடமாட்டங்கள்

சங்கானை,

சங்கானைப் பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டங்கள் அதிகரித்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீட்டில் நித்திரையில் மூழ்கியிருந்த இளம்குடும்பப் பெண்ணின் கையை இழுத்த மர்ம மனிதன் பெண் கூக்குரலிட்டுச் சத்தமிட தப்பியோடிய சம்பவம் ஒன்று சங்கானையில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது-

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து ஓடக்கரை வீதி சங்கானையில் அமைந்துள்ள நீதிவான் முகாமில் வசித்துவரும் இராசதுரை திருநாவுக்கரசின் மனைவிக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

ஓலைக்குடிசை, கிடுகினால் வேயப்பட்ட தட்டி மறைப்புக்கள். இத் தட்டியின் உட்புறமுள்ள விறாந்தையில் அவர் நித்திரையில் இருந்தபோது இத் தட்டி ஊடாக ஓட்டை ஏற்படுத்தி அதனூடாக மர்ம மனிதன் கையை விட்டு இப் பெண்ணின் கையை இழுத்துள்ளார். அந் நேரம் பயத்தினால் பெண் ஓலமிட கணவன் மற்றும் அயலிலுள்ளோர் எழுந்து வந்துள்ளனர். இவர்கள் வருவதை அவதானித்த அம் மனிதன் ஓடித் தப்பிவிட்டான். அவனைக் கலைத்துக் கொண்டு சென்றவர்கள் அவனது கையில் ஓர் சிகப்பு நிற ஒளிவீசும் றேசர் ரக ரோஜ் லைற் இருந்ததையும் அவதானித்துள்ளனர். அவன் ஓடிய திசையில் மேலும் அதே மாதிரியான மூன்று சிகப்பு நிற ஒளி தெரிந்ததாகவும் மூன்று பேர் தென்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இருட்டினுள் ஓடிச் சென்றவர்கள் அராலி வீதி சங்கானையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம்ஒன்றில் ஏறிச் சென்றதாகவும் வாகன இரைச்சல் மூலம் தெரிந்து கொண்டதாகவும் கூறினர்.

இதேவேளை பட்டின சபை வீதியிலுள்ள ஒரு வீட்டின் வெறும் காணிக்குள் இரவு 11.30 மணியளவில் ஒருவர் கைத்தொலைபேசி மூலம் கதைத்துக் கொண்டிருந்ததை வீட்டிற்கு வெளியே வந்த குடும்பப் பெண் அவதானித்துக் கூக்குரலிடவே அவன் இருட்டில் மறைந்து தப்பியோடியுள்ளான். தற்போதைய மர்ம மனிதன் பீதியால் நிம்மதி

## இரவில் மக்கள் விழித்திருப்பு

யின்றி பதற்றத்துடன் இரவைக் கழிக்க வேண்டிய நிலையிலுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## புனராவர்த்தன கும்பாபிஷேகம்

வடமராட்சி,

பளை நகர் மத்தி இரட்டைக் கேணி திருவருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.35 மணி முதல் 8.35 மணிவரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபத்தில் விசேட அலங்காரப் பூஜை இடம் பெற்று அம்பாள் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருட்கடாட்சம் வழங்குவார்.

இக் கும்பாபிஷேகத்தை உசன் கந்த சுவாமி கோவில் பிரதம குரு 'அருள் வாக்குச் சித்தர் பிரம்மஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார்.

Yaal Osai
யாழ் ஓசை
2011 செப்டெம்பர் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# குடாவையும் குழப்பும் மர்ம மனிதன்

குண்டு வெடிப்புகள், துப்பாக்கிப் பிரயோகங்கள், சுற்றிவளைப்புகள், சோதனை கெடுபிடிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்ற நிலையில் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கான பயணத்தை ஆரம்பித்திருக்கின்றனர். இந்நிலையில் மர்ம மனிதனின் விவகாரமோ தமிழர் பகுதிகளில் பெரும் தலையிடியாய் இருக்கின்றது.

தென்பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்தில் தனது சேஷ்டையை ஆரம்பித்த மர்ம மனிதன் மெதுவாக மலையகத்திற்குள் ஊடுருவி அங்கிருந்து கிழக்கிற்கு தாவி தற்போது குடாநாட்டில் தலைவிரித்தாடுகின்றான். இந்த விவகாரத்தினால் முப்பது வருடங்களுக்கு பின்னர் சுதந்திர பாதைக்குள் மெதுவாக காலடி எடுத்துவைத்துள்ள குடாநாட்டு மக்களிடத்தில் அச்சம்,பயம்,பீதி மற்றும் சந்தேகம் மீண்டும் குடிகொள்ள ஆரம்பித்துவிட்டது.

மலையகத்திற்குள் ஊடுருவிய மர்ம மனிதனை பிடிப்பதற்காக விசேட அதிரடிப்படையினர் அவசர அவசரமாக வரவழைக்கப்பட்டனர். அவர்களால் மர்ம மனிதனையல்ல அவனது நிழலைகூட நெருங்கமுடியவில்லை. இந்நிலையில் மர்மனிதனை பிடிப்பதற்காக சென்றவர்கள் ஆங்காங்கே நிலைகொண்டுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் பல ஆண்டுகளாக நூறு அடிக்கு ஒரு படையினர் அதுவும் ஆயுதங்களுடன் இரவு பகலாக காவல் காத்துக் கொண்டிருக்கின்ற வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மர்ம மனிதன் படையினரின் கண்களில் மண்ணை தூவி செல்கின்றான் என்றால் அது பெரும் சந்தேகத்தையே ஏற்படுத்தியிருக்கின்றது.

மக்களிடத்தில் மர்மமனிதன் பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதால் குடும்பம் குடும்பமாக இரவிரவாக ஓர் இடத்தில் குழுமியிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தின் போது ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமையினால் வீடுகளுக்குளே முடங்கிப்போயிருந்த மக்கள் தற்போது வீதிகள் தோறும் உறக்கமின்றி விழித்து நிற்கின்றனர்.

யுத்தம் முடிந்து விட்டாலும் நிம்மதியாய் வாழமுடியாத நிலைமையே குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய படையினர் மர்மனிதன் விவகாரத்தில் மௌனம் காத்துவருகின்றமையினால் மக்கள் அவ்வப்போது சட்டங்களை கையிலெடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பாவி உயிர்கள் பலியானமையும் குறிப்பிடத்தக்கது. சட்டத்தை பொதுமக்கள் கையிலெடுக்கமுடியாது எனினும் மர்ம மனிதனை பொதுமக்கள் துரத்திச் செல்கின்ற வேளையில் அவன் படைத்தளங்களுக்குள் புகலிடம் தேடிக் கொள்வதாக பிரதேசவாசிகளும் மக்கள் பிரதிநிதிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே மர்மனிதனினால் நாவாந்துறை பகுதியில் பெரும் களேபரமே ஏற்பட்டது. இதன்போது மர்ம மனிதனை பிடிக்காத படைத்தரப்பு வீடுகளுக்குள் புகுந்து அப்பாவிப்பொதுமக்கள் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியது.

இறுதியில் இவ்விடயத்தில் அப்பாவி பொதுமக்களே பெரும் துன்பத்திற்கு உள்ளானார்கள். இவ்வாறான நிலையில் சட்டத்தை பொதுமக்கள் கையிலெடுத்தால் நாவாந்துறையில் இடம்பெற்றதை போலவே இடம்பெறும் என்று படைத்தரப்பு அதிகாயொருவர் அண்மையில் தெரிவித்திருந்தமை மக்களிடத்தில் மேலும் அச்சத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை அவசரகாலச்சட்டதை நீடிப்பதற்காக அரசாங்கம் மர்ம மனிதனை ஏவிவிட்டிருப்பதாக எதிரணியினர் குற்றஞ்சாட்டியிருக்கின்ற நிலையில் அதற்கான தேவையில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்திருந்ததுடன் அவசாகாலச் சட்டத்தை நீக்குவதற்கான அறிவிப்பை விடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிறீஸ் மனிதன் ஒரு மாயை என்றார்.

மர்ம மனிதன் மாயை என்றாலும் அவனது சேஷ்டையினால் மக்களே பெரும் துன்பப்படுகின்றனர் என்பதனால் மக்களின் நிம்மதியை சீர்குலைக்கும் இத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது அதிகார தரப்பின் கடப்பாடாகும்.

# அராஜகதந்திரிகளின் இராஜதந்திரத் தோல்வி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

2

தமிழ் மக்கள் தொடர்பாக, தமிழக அழுத்தத்தினை சமாளிப்பதற்காக இலங்கை அரசிற்கு அரசியல் தீர்வு காணுமாறு காலத்திற்கு காலம் வற்புறுத்தல்களை இந்திய அரசு வலியுறுத்தும். அடுத்து தமிழ் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை இலங்கை அரசின் ஊடாக நிகழ்த்தும். மறுதலையாக இலங்கையின் சீன, பாகிஸ்தான் ஆதிக்கத்தினை குறைப்பதற்கு பொருளாதார் ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள், இராணுவ ஒத்துழைப்பு ஒத்திகைகளை நடத்தும். அடுத்து உலக ஒழுங்கில் நிகழும் மாற்றங்களாக அமெரிக்க அரசினால் கையாளப்படும் மனித உரிமை ஆயுதம் இலங்கை மீது தாக்காது இருப்பதற்கான கவசத்தினையும் இந்தியா இலங்கைக்கு வழங்கும். இதன் மூலம் இலங்கையுடனான வெளியுறவை இறுக்கி வைக்க முனையும்.

பாகிஸ்தான் அல்லது இஸ்லாமிய தீவிரவாதிகளின் மையமாக இலங்கை உருவாவதை தடுப்பதற்காக இலங்கை இஸ்லாமியக்கட்சிகளிலும் தனது செல்வாக்கினைச் செலுத்தும். அடுத்து தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாகக் கையாள இந்தியா விரும்புகின்றது.

புகையிரதப்பாதையில் தண்டவாளங்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று சேராமல் குறித்த இடைவெளியில் சமாந்திரமாகச் செல்கின்றதோ அவ்வாறே பாரதத்தின் இலங்கை தொடர்பான அணுகுமுறையும் அமைகின்றது.

இந்நிலையில் சிறுபான்மைத் தமிழினம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இனநல்லினக்கத்தினை அடையமுடியாது சமாந்தர அணுகுமுறையில் இருந்து விலகமுடியாதவாறு தொடர்ந்து இன அழிவினை பொருளாதார, கலாசார பாரம்பரிய ரீதியாக எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

தமிழர்களிற்கு என ஒரு அரசியல் மையம் இலங்கையில் உருவாகுவதனை இந்தியா விரும்பவில்லை. அவ்வாறு உருவாகின் இந்து சமுத்திரத்தின் வலுச் சமநிலையினை தான் இழக்க நேரிடும் என அஞ்சுகின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியப்பாதுகாப்பு, மூலவளங்களை கையகப்படுத்தல் என்பன மூலம் உலக வல்லரசாகும் எண்ணம் இந்தியாவிற்கு உள்ளது இதனை தமிழ் மக்கள் எதிர்கொள்ளவே அமெரிக்க அரசு நாடு கடந்த தமிழீழ இராஜதந்திரத்தினை நகர்த்துகின்றது.

தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் தற்போது இலங்கை, இந்திய, சீனா, அமெரிக்கா போன்ற இராஜதந்திர பொறிக்குள் அகப்பட்ட நிலையில் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் மிகவும் சாமர்த்தியமான செயல்திட்டங்கள் மூலமும் வன்முறைகளை விலத்துவதன் மூலமும் 'பூமறங்' போல் எறிந்த விடத்தே மீளும் உபாயத்தை ஏற்படுத்தல் வேண்டும். இனப்பேரிடர் ஏற்பட்டு 3 (2009, 2010, 2011) வருடங்கள் கடக்கும் நிலையில் ஐ.நா கூட்டத்தொடரிலோ மனித உரிமைகள் அமைப்பினாலோ அழுத்தமான முடிவுகள் ஏற்படவில்லை. இந்நிலையில் எமது வைரிகள் யாவர் என்ற கேள்விக்கு முதலாவதாக சில தமிழ் அரசியல் பிழைப்பாளர்களும் இந்திய மத்திய அரசம், சர்வதேசமும் ஒரு வகையில் சிங்களத்துடன் கைகோர்த்த படியே யுத்த அழிவு சார்பாக செய்வடு, மறைவடு, திரிபுவடு என்பனவற்றை நிகழ்த்தி வருகின்றன.

மாறிய பொருளாதார ஒழுங்கில் பொருளாதாரத் தழம்பல் உள்ள நிலையில் பொருளாதாரத்தடை இலகுவில் ஏற்படுத்த முடியாது. ஆனால் தனி மனித நீதி, சமூக, நீதி என்பனவற்றிற்கு ஒருங்கமைந்த விடை பகிரப்படல் வேண்டும்.

மாறாக அநீதியினால் விறைப்படையும் இனம் தன்னிருப்பை நிலை நிறுத்த தனக்கு என நீதியை உருவாக்கத் துடிக்கப்போவதனை எவராலும் தடுத்து விட முடியாது என்பதற்கு எதிர்காலம் தனது பதிலை வைத்துக்கொண்டுதான் உள்ளது. ஐ.நா நிபுணத்துவக்குழுவின் அறிக்கைக்கு இலங்கையராகிய தமிழ் மக்களது பிரதிபலிப்பு என்ன?

2009ஆண்டு யுத்த அழிவுகள் தமிழ் சமூகத்தினை பொறுத்தவரை வெள்ளிடைமலை. இது தமிழ் சிங்கள மக்களிற்கு இடையிலான உறவில் மற்றுமொரு தீர்க்கப்படாத விரிசலாகும்.

ஆனால் இவ்வறிக்கையானது இலங்கையின் நீடித்த அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் மிகவும் இன்றியமையாதது. நாம் தமிழர், நாம் சிங்களவர் என்ற வேறுபாடு இன்றி ஒன்றுபட்ட இலங்கையர்களாக இவ்வறிக்கையில் உள்ளவற்றினை ஆராய்தல் வேண்டும்.

2. ஐ.நா அறிக்கை தொடர்பாக, தமிழர்களது கருத்தினை எவ்வாறு அறிதல் வேண்டும்?

தமிழர் தரப்பினை பொறுத்தவரையில் குறைந்தது 1000 தமிழ் கல்வியியளாளர்களது கருத்தினை இலங்கை வெளிவிவகார அமைச்சர் கேட்டறிதல் வேண்டும். இதில் 200 வைத்தியர்கள், 200 சட்ட அறிஞர்கள், 200 பல்கலைக் கழக ஆசிரியர்கள், 200 பாடசாலை அதிபர்கள், 200 மதத்தலைவர்கள் அடங்கின் சிறப்பானது.

3. அரசியல் ரீதியில் தீர்வு காணப் படவேண்டியதை இராஜதந்திரமற்ற ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது நல்லதா?

வெறுமனே ஆர்ப்பாட்டம் நடத்துவது அறிவியல் பூர்வமானது அல்ல. நடந்தன எல்லாம் நடந்து விட்டன. இனி நடப்பவை நல்லதாக அமைய நாம் ஒற்றுமையாக செயல்படல் வேண்டும். தமிழ் அரசியல் கட்சிகள் இத்தருணத்தில் சாமர்த்தியமாகச் செயல்பட்டு இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்தல் வேண்டும்.

*(தொடரும்)*

டாக்டர். சி. யமுனாநந்தா

# தூக்கை ஆயுளாக குறைக்க தீர்மானம் நிறைவேற்றினாலும் இவ்விவகாரத்தில் தனது அதிகாரத்தை தட்டிக்கழிக்கிறார்

## தமிழக முதல்வரை சாடும் தி.மு.க. தலைவர்



**சென்னை:**

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மூவருக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினாலும், அந்த விடயத்தில் தனக்கு அதிகாரம் இல்லை என்று முதல்வர் ஜெயலலிதா தட்டிக்கழிக்கத்தான் எண்ணுகிறார். இந்நிலையில், தனக்கு அதிகாரம் இல்லை என்று யாரோ சொன்னதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு காலம் கடத்தாமல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரையும் காப்பாற்ற ஜெயலலிதா முன்வரவேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சாந்தன், முருகன், பேரறிவாளனின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 161 இன் கீழ் மாநில முதல்வருக்கும், ஆளுநருக்கும் அதிகாரம் இல்லை என்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஆனால் தூக்குத் தண்டனைக் கைதிகளுக்காக மேல்நீதிமன்றத்தில் ராம்ஜெத் மலானியோடு இணைந்து வாதாடிய மூத்த வழக்கறிஞர், தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதற்கான அதிகாரம் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 161 இன்படி முதல்வருக்கு இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் காப்பாற்றப்பட்ட இடதுசாரி தோழர்களில் ஒருவர் தியாகு. இது பற்றி அவர் கூறுகையில், ''ஒரத்தநாடு பகுதியைச் சேர்ந்த முத்து தங்கப்பா படுகொலையில் நான் உட்பட மூன்று பேருக்கு 1972இல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, மேல்நீதிமன்றமும் அதையுறுதி செய்தது. தண்டனையைக் குறைக்குமாறு ஆளுநரிடம் விண்ணப்பித்தோம். தமிழக அரசிடம் ஆளுநர் கருத்து கேட்டார். அப்போது கருணாநிதி, அமைச்சரவையைக் கூட்டி ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்று பரிந்துரைத்தார். அதன்படி எங்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது'' என்றார்.

அதேபோல், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு அதிலிருந்து காப்பாற்றப்பட்டவர் பெண்ணாடம் புலவர் கலியபெருமாள் (2007இல் அவர் மறைந்து விட்டார்). இது குறித்து அவரது இளைய மகன் சோழநம்பியார், ''தமிழ்நாடு நக்சல்பாரி இயக்கமான மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மாநிலச் செயலாளராக இருந்தவர் என் தந்தை கலியபெருமாள். பொலிஸ் தகவலாளி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் என் அப்பாவுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதை ரத்து செய்யக் கோரி ஒரு இலட்சம் பேரிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி 1974 ஆம் ஆண்டு தமிழக ஆளுநருக்கு மனு அனுப்பப்பட்டது.

அதை அப்போது முதல்வராக இருந்த கருணாநிதிக்கு ஆளுநர் அனுப்பினார். அது குறித்து, அமைச்சரவையில் விவாதித்த கருணாநிதி, தண்டனையைக் குறைக்கலாம் என்று ஆளுநருக்குப் பரிந்துரைத்தார். அதையடுத்து என் அப்பா வின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது'' என்று தெரிவித்தார் என குறிப்பிட்டுள்ளார்.

**'தி.மு.க.தான் காரணம்'**

இதற்கு முன்பதாக ராஜீவ் கொலை வழக்கில் ஒரு குற்றவாளியான நளினிக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை மட்டும் ஆயுள் தண்டனையாக குறைக்கலாம் என்றும் மற்ற மூவரின் கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் 2000 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில்தான் முடிவெடுக்கப்பட்டது என்று முதல்வர் ஜெயலலிதா பேரவையில் குற்றஞ்சாட்டியிருக்கிறாரே என்ற கேள்விக்கு கருணாநிதி பதிலளிக்கையில்,

நளினியின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக்க் குறைத்தற்குத் தி.மு.க.தான் காரணம் என்பதை முதல்வர் ஜெயலலிதா தன்னை அறியாமலேயே ஒப்புக்கொண்டிருக்கிறார். மேலும் மற்ற மூவரின் கருணை மனுக்களையும் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பி வைத்தது என்றும் சொல்லியிருக்கிறார்.

மத்திய அரசுக்கு அந்தக் கருணை மனுக்களை அனுப்பி வைத்ததன் காரணமாகத்தான் 11 ஆண்டுகளாக அவர்களது தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பதை இதன் மூலம் முதல்வர் ஜெயலலிதா வெளிப்படுத்தியிருக்கிறார்.

11 ஆண்டு காலமாக குடியரசுத் தலைவர் அலுவலகம் முடிவெடுக்காமல் இருந்ததால் அதையே ஒரு காரணமாக வழக்கறிஞர்கள் எடுத்துக் கூற, நீதிமன்றம் தூக்குத் தண்டனையை தற்போது ஒத்தி வைத்திருக்கிறது என்று தெரிவித்தார்.

## தூக்குத் தண்டனை நிறைவேற்றவும்

### பா.ஜ. வலியுறுத்தல்

**புதுடில்லி:**

ராஜீவ் கொலையாளிகள் தூக்கு தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்பதே பா.ஜ.வின் நிலைப்பாடு என அதன் செய்தி தொடர்பாளர் ரவி சங்கர்பிரசாத் கூறியுள்ளார்.

மேலும், நாட்டின் இறையாண்மையை குறைக்கும் யாராக இருந்தாலும் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற அவர், உச்ச நீதிமன்றில் குற்றம் நிரூபிக்கப்பட்டு, ஜனாதிபதி கருணை மனுவை தள்ளுபடி செய்த பின்னர் தண்டனை நிறைவேற்றாமல் தடுக்க முயற்சிக்க கூடாது என்றும் கூறியுள்ளார்.

## ராஜீவ் கொலையாளிகளின் கண்காணிப்பு விதிகள் தளர்வு

**வேலூர்:**

வேலூர் சிறையில் உள்ள ராஜீவ் கொலையாளிகளின் கண்காணிப்பு விதிகள் நேற்றுமுன்தினம் காலை முதல் தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களது கருணை மனுவை ஜனாதிபதி நிராகரித்ததை அடுத்து, எதிர்வரும் 9 ஆம் திகதி மூவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்ற சிறைத்துறை நிர்வாகம் முடிவு செய்தது.

சிறை விதிகளின் படி, தூக்கு தண்டனை கைதிகள் தனி அறையில் அடைக்கப்பட்டனர். சிறை வளாகத்தில் அவர்கள் சுதந்திரமாக நடமாட தடை விதிக்கப்பட்டது. 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டனர். சிறப்பு உணவுகள் வழங்கப்பட்டன. இதற்கிடையில் கருணை மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை மேல்நீதிமன்றத்தில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் சார்பில் கடந்த திங்கட்கிழமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் நாகப்பன், சத்யநாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு, ராஜீவ் கொலையாளிகளின் தூக்குத் தண்டனையை எட்டு வார காலத்துக்கு நிறுத்திவைக்க வேண்டும் என இடைக்கால தடை விதித்தது. அத்துடன் இதற்கான உத்தரவையும் வேலூர் சிறை கண்காணிப்பாளருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தது.

இந்நிலையில், ராஜீவ் கொலையாளிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள், கண்காணிப்புகள் அனைத்தும் நேற்று முன்தினம் காலை முதல் விலக்கிக் கொள்ளப்பட்டன. அதன்படி அவர்கள் மூவரும் தனிமை சிறையிலிருந்து ஏற்கெனவே அடைக்கப்பட்டிருந்த அறைக்கு மாற்றப்பட்டதோடு ஏனைய கைதிகளை போல நடத்தப்பட்டு வருகிறார்கள்.

மேற்கு வங்க மாநிலம் சிலிகுரியில் கொண்டாடப்பட்டு வரும் தீஜ் பண்டிகையை யொட்டி திருமணமான பெண்கள் தங்களது கணவர்களின் நலனிற்காக பிரார்த்தித்து ஆடிப்பாடி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.



## தெரிவுப் பரீட்சை

ஏழாலை,

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படவுள்ள முதுகல்விமாணி கற்கைக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் உரிய நேரத்திற்கு முன்பாகப் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### கடைக்குள்...(தொடர்ச்சி)

சம்பதினமன்று இரவு கடையை மூடிவிட்டு வீட்டுக்குச்சென்று சாப்பிட்டபின் இரவில் கடையில் தங்குவதற்காக சென்றுள்ளார்.

அந்த நேரம் கடையை பின்பக்கத்தால் உடைத்து உள்ளே ஒளிந்திருந்த நபர் கூரிய கத்தியால் இவரை குத்தி கொலைசெய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் தலை, கழுத்து, நெஞ்சு ஆகிய பகுதிகளில் பாரிய குத்து காயங்கள் காணப்படுகின்றன.

நேற்று அதிகாலை இவர் வீட்டிற்கு வழமை போன்று தேநீர் அருந்துவதற்கு வராததையிட்டு இவரது உறவினர் கடைக்கு சென்று பார்த்த போது முன்கதவு திறக்கப்படாத நிலையிலும், பின்பக்கம் அடைக்கப்பட்டிருந்த தகரம் உடைக்கப்பட்ட நிலையிலும், மேற்படி வர்த்தகர் வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்ததை கண்டு விடத்தல்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

விடத்தல்தீவு பொலிஸ் அதிகாரி தயாநந்தா தலைமையில் பொலிசார் விசாரணையை மேற்கொண்டு வருவதுடன் வவுனியாவில் இருந்து குற்ற புலனாய்வு அதிகாரிகளும் கொலை செய்யப்பட்ட இடத்தை பரிசோதனை செய்ததுடன் இவர்களும் விசாரனையை முடுக்கிவிட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து இறந்தவரின் வீடு சுமார் 50 யார் தூரத்திலுள்ளது. இராணுவ முகாம் சுமார் 100யார்தூரத்திலும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு மன்னார் பதில் நீதிவான் எம்.எம். சபூர்தீன் சென்று மரண விசாரணையை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும் படியும் உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

### ஊருக்குள்...(தொடர்ச்சி)

இருவரும் வெவ்வேறு பகுதிக்கு சென்றதுடன் அவர்களுள் ஒருவர்

அப்பகுதியிலுள்ள வீடொன்றின் பின்பக்கமாக நுழைந்தபோது அங்கிருந்தவர்கள் கூக்குரலிடவே தப்பியோடியபோது அங்கு திரண்ட இளைஞர்களால் குறித்த நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

பிடித்த அந்த நபரை மரத்தில் கட்ட முற்பட்டபோது மற்றைய நபர் அப்பகுதிக்கு வரவே குறித்த நபர் தப்பியோட முயற்சித்தபோது அந் நபரை பிடித்த அப்பகுதி மக்கள் கிராம அபிவிருத்தி சனசமூக நிலையத்திற்குள் பூட்டிவைத்தனர். மற்றைய நபர் தப்பியோடிவிட்டார். குறித்த நபர் பிடிபட்ட வேகத்தில் அதிகளவர்ன பொதுமக்கள் கூடிய அதே வேளை இராணுவத்தினர் குறித்த நபரை அழைத்து செல்ல முற்பட்டனர். எனினும் பொதுமக்கள் ஒன்றிணைந்து எதிர்த்ததுடன் கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்தனர். பொலிஸார் அவ்விடத்திற்கு வந்து பொதுமக்களிடம் நடந்த சம்பவத்தை கேட்டறிந்து கொண்டதுடன் குறித்த நபரை கைது செய்ததுடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

காவத்தையைச் சேர்ந்த ரி.டி. தனஞ்சே (வயது 20) என்ற மேற்படி நபரை யாழ். நீதிவான் அ. ஆனந்தராஜா எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவர் ஒரு மனநோயாளி என பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். இதனையடுத்து நீதிவான் அது தொடர்பான மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இத்தகைய சம்பவத்தையடுத்து மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு கத்திக்குளறி துவிச்சக்கரவண்டி மோட்டார் வண்டிகளை தள்ளி விழுத்தி செருப்புக்களையும் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

---

### மானிப்பாய்... (தொடர்ச்சி)

அச்சமடைந்த இவர்கள் அவலக்குரல் எழுப்பியதும் மர்ம நபர்கள் ஓடி மறைந்து விட்டார்களாம்.

இதேபோல் சுதுமலை மாப்பியன் வீதியிலுள்ள வீட்டிற்கு இரவு 12 மணிபோல் சென்ற மர்ம மனிதர்கள் அங்கிருந்தவர்களைக் கதவைத் திறக்கும்படி அழைத்துள்ளனர். இதுகுறித்து வீட்டில் இருந்தவர்கள் தொலைபேசி மூலம் அருகாமையில் வசிக்கும் உறவினர்களுக்கு அறிவித்ததும் மர்ம நபர்கள் ஓடி மறைந்து விட்டார்கள்.

சுதுமலை வடக்கில் மடத்தடி என்னும் இடத்தில் இரவு நேரம் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியவர்களை அப்பகுதியிலுள்ள இளைஞர்கள் துரத்திச்சென்றபோது அவர்கள் ஓடி மறைந்து விட்டார்களாம்.

கிராமங்கள் தோறும் அடுத்தடுத்து நடைபெற்று வரும் இச் சம்பவங்களால் மக்கள் நிம்மதி இழந்ததுடன் தூக்கமின்றித்திண்டாடுகின்றார்கள்.

---

### மர்ம மனிதன்...(தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் கடுமையாக காயமடைந்த இருவரை அங்கேயே விட்டுச் சென்ற சீருடையினர் பொது மக்கள் 26 பேரை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற பின்னர் அவர்களில் ஆறுபேரை தடுத்து வைத்துவிட்டு 20பேரை விடுதலை செய்துள்ளனர்.

யாழ். கொக்குவிலில் புதன்கிழமை இரவு 7.30 அளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

கொக்குவில் புகையிரத நிலைய வீதியை அண்மித்த கல்வாரி ஆலயப் பகுதியில் மர்ம மனிதர் இருவர் நடமாடுவதாகப் பெண்கள் கூக்குரலிட்டதை அடுத்து அங்கு திரண்ட மக்கள் அவர்களை துரத்திச் சென்றபோது அவர்கள் அப்பகுதிக்குள் நின்றிருந்த தென்னிலங்கை பஸ் வண்டியில் ஏறி ஒளித்துக் கொண்டுள்ளார்கள்.

இதேவேளை அங்கு குழுமிய பொது மக்கள் பஸ்வண்டிக்குள் தான் மர்ம மனிதர்கள் ஒளிந்துள்ளனர் எனக் கூறி பஸ் வண்டியின் சாரதியை பஸ்ஸை எடுக்குமாறு தாக்கியுள்ளனர். இதனையடுத்து பஸ் வண்டி யாழ். நகரை நோக்கிச் சென்றதுடன் மக்களும் வீடுகளுக்கு திரும்பினர்.

அதன்பின்னர் மக்கள் அப்பகுதியில் இடம்பெற்ற விழாவொன்றில் பங்கு பற்றிவிட்டு அச்சத்தின் காரணமாக நான்கு ஐந்து குடும்பங்களாகத் தங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவம் இடம்பெற்று மூன்று மணித்தியாலங்களின் பின்னர் அங்கு வந்த சீருடையினரும் பொலிஸாரும் இணைந்து சம்பவம் இடம்பெற்ற பகுதியில் அருகில் உள்ள வீடுகளுக்குள் கதவுகளை உடைத்து அத்துமீறி நுழைந்து வலுக்கட்டாயமாக ஆண்களை அழைத்துச் சென்று கல்வாரி ஆலய பிரதான வீதியில் வைத்து தடிகள், பொல்லுகளால் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இத் தாக்குதலின்போது பஸ் வண்டியின் கண்ணாடிகளை உடைத்தது யாரெனக் கேட்டே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை அழைத்துச் செல்லப்பட்டவர்களில் இருவரை சிவில் உடையில் இருந்தவர்களும் சீருடையினரும் அழைத்து அவர்கள் அணிந்திருந்த ரீசேட்டினைக் கழற்றுமாறு கூறியதுடன் தாம் அணிந்திருந்த தலைக்கவசத்தினை அணியுமாறு வற்புறுத்தியுள்ளனர். பின்னர் நிலத்தில் படுக்குமாறு தள்ளி வீழ்த்தி விட்டு கை மற்றும் கால்களை நான்குபேர் அழுத்திப் பிடிக்க ஒருவர் சப்பாத்துக் காலால் முகத்தை அழுத்திக் கொண்டுள்ளார். இதேவேளை மேலும் இருவர் கொட்டன் பொல்லுகளால் கால், முழங்கால், தொடைப்பகுதிகளில் கடுமையாகத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இந்நிலையில் இருவரும் இறந்து விட்டார்களென நினைத்து அப்பகுதி பற்றைக்குள் தூக்கி எறிந்துள்ளனர்.

மேலும் அங்கு அழைத்துச் சென்ற 26 பேர் மீதும் கண்மூடித்தனமாகத் தாக்கிவிட்டு பொலிஸாரின் வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு வைத்து அணிந்திருந்த உடைகளைக் களையுமாறு கூறி விட்டு சீருடையில் இருந்தோரும் தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன் பெயர் விபரங்களையும் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை இரவு 11 மணிக்கு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றவர்கள் மீது அதிகாலை 3 மணிவரை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதென கைது செய்யப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸார் காலை 8 மணியளவில் விடுதலை செய்துள்ளதுடன் அவர்களில் இருவரை நீதிமன்றில் பாரப்படுத்தப் போவதாக தெரிவித்துள்ளனர். மேலும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான கணபதிப்பிள்ளை சுபாஸ்கரன் (வயது 24) (இவர் அண்மையிலேயே வெளி நாடு ஒன்றிலிருந்து மீளத் திரும்பியராவார்) தாக்குதலால் எழுந்து நடக்க முடியாத நிலையில் உள்ளார்.

இவர் கை விலங்கு போடப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று 11.45 மணியளவில் சிகிச்சைக்காக பொலிஸ் காவலுடன்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த நபரிடம் முறைப்பாட்டைச் செய்யும்போது கிறிஸ் மனிதனுடன் தாக்குதல் மேற்கொண்டதால் தன் மீது பதில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுமாறு தெரிவித்தே முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை பற்றைக்குள் தூக்கி வீசப்பட்ட இருவருள் ஒருவரான எஸ். இரத்தினராசா (வயது 34) நான்கு பிள்ளைகளின் தந்தை இவர் படுகாயமடைந்து பற்றைக்குள் இருந்த மற்றைய நபரை கண்டு உறவினர்களின் உதவியுடன் நள்ளிரவு 1 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இவரின் நெஞ்சு, கைகளிலும் அடிகாயங்கள் காணப்படுவதுடன் ஒரு கால் முறிவடைந்துள்ளதுடன் முழங்கால் சிரட்டையும் உடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தின்போது சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் நாவாந்துறை சம்பவத்திற்கு பழி வாங்க வேண்டுமெனக் கூறியே கைது செய்தவர்களைத்தாக்குமாறு உத்தரவிட்டதாக சம்பந்தப்பட்ட பொது மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்கள் பஸ் வண்டியின் மீது தாக்குல் மேற்கொண்டவர்கள் யார் எனவும் அவரைக் காட்டுமாறும்கேட்டபோது 16 வயதுச்சிறுவனையும் கைது செய்யப்பட்டவர்களில் சிங்கள மொழி தெரிந்த ஒருவரையும் பொலிஸார் தமது வாகனத்தில் சம்பவ நடைபெற்ற இடத்திற்குக் கொண்டு வந்தபோது வாகனத்தில் இருந்த நபரை அங்கு நின்ற சீருடையினர் தாக்கியுமுள்ளனர்.

பின்னர் மீளவும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இச் சம்பவங்களையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் இரவு பகலாக அப்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# கருப்பையை பாதுகாக்க எளிய வழிமுறைகள்



கருப்பையை எடுத்தவர்கள் ஒரு நாளைக்கு 1200 கலோரி அளவுக்கான உணவு மட்டுமே எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் கருப்பை எடுத்த உடன் பெண்களின் எடை அதிகரிக்கும். மேலும் சாதத்துக்கு பதிலாக பழங்கள், கீரைகள் அதிகம் சாப்பிடுவது அவசியம். இத்துடன் பிறப்புறுப்பு, கருப்பை வாய்ப்பகுதியில் நோய்த் தொற்று ஏற்படாதவாறு சுத்தத்தை கடைபிடிக்க வேண்டியதும் அவசியம் என்கிறார் உணவு ஆலோசகர் சங்கீதா.

**பாட்டி வைத்தியம்**

வெள்ளரி விதையை அரைத்து பாலில் கலந்து குடித்தால் சிறுநீர் தொடர்பான பிரச்னைகள் தீரும்.

வெந்தயக் கீரையுடன் பூண்டு, உப்பு சேர்த்து அரைத்து சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.

மாதவிலக்கு குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படாதவர்கள் வெங்காயத் தாள், காயவைத்த கறுப்பு எள், கருஞ்சீரகம் ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்துக் கொள் ளவும். மாதவிலக்கு தடைபடும் காலங்களில் காலை, மாலை இரு வேளையும் ஒரு ஸ்பூன் அளவுக்கு மூன்று நாட்கள் சாப்பிட்டால் மாதவிலக்கு ஏற்படும்.

விளா மரத்தின் பிசினை மஞ்சள் சேர்த்து ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் வெள்ளைப்படுதல் குணமாகும்.

வாழைப்பூவை இடித்து சாறு எடுத்து அதில் பனங்கற்கண்டு சேர்த்து குடித்து வந்தால் வெள்ளைப்படுதல் குணமாகும். வல்லாரைக் கீரை சாற்றில் பெருஞ்சீரகத்தை ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் இரண்டு கிராம் அளவுக்கு சாப்பிட்டால் மாதவிலக்கு கோளாறு சரியாகும்.

லவங்கப் பட்டையை பொடி செய்து தினமும் இரண்டு கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் மாதவிலக்கின் போது அதிக ரத்தப்போக்கு நிற்கும்.

முள் இலவம்பட்டையை 200 கிராம் அளவுக்கு எடுத்து பொடி செய்து தினமும் காலை, மாலை இரு வேளையும் ஐந்து கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் வெள்ளைப்படுதல் பிரச்னை குணமாகும்.

முருங்கை கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் கருப்பை பலப்படும்.

## லிப் லைனர்



லிப்ஸ்டிக்குக்கு ஏற்ற வகையில் லிப் லைனர் மற்றும் பென்சிலை தேர்ந்தெடுக்க வேண்டும். லைனர் போட்ட பிறகு, லிப் பிரஷ் பயன்படுத்தி லிப்ஸ்டிக்கை போட்டு கொண்டால், திட்டு திட்டாக இல்லாமல், ஒரே சீராக அழகாக இருக்கும்.

லிப் லைனர் பயன்படுத்தும் போது, பெரிய உதடு உள்ளவர்கள், உதடுக்கு உள்ளே வரைந்தால், உதடுகள் சிறியதாக தெரியும்.

உதடுகள் பெரிதாக தெரிய வேண்டுமெனில், முதலில் தேவையான நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டு கொள்ள வேண்டும்.

பிறகு வெள்ளை நிற லிப்ஸ்டிக்கை உதட்டின் நடுவில் தடவினால், உதடுகள் பெரிதாக பளிச்சென்று தெரியும்.

# முட்டை பொடிமாஸ்



இன்று பூரி செய்யலாமா என்று நினைப்போம். ஆனால், பூரிக்குத் தொட்டுக்கொள்ள கிழங்கைத் தவிர வேறு எதுவும் இல்லையே என்று அலுப்பும் கூடவே பின்னால் வரும். அப்படி சலிப்பாக கருதுபவர்கள் இந்த முட்டை பொடிமாஸை ட்ரை பண்ணி பார்க்கலாமே...!

தேவையான பொருட்கள் :-

பெரிய வெங்காயம் - 2
தக்காளி - 3
இஞ்சி, பூண்டு விழுது - சிறிதளவு
முட்டை - 4
உப்பு - தேவைக்கேற்ப
எண்ணெய் - தேவைக்கேற்ப
மிளகாய் தூள் - தேவைக்கேற்ப

செய்முறை:

★ வெங்காயம், தக்காளியை சிறு துண்டுகளாக நறுக்கி வைத்துக்கொள்ளவும்.

★ அடுப்பில் கடாயை வைத்து, அதில் எண்ணெய் ஊற்றவும்.

★ எண்ணெய் காய்ந்தவுடன் நறுக்கி வைத்த வொங்காயத்தை அதில் போட்டு வதக்கவும்.

★ வெங்காயம் லேசாக வதங்கியவுடன் தக்காளி, உப்பு, இஞ்சி, பூண்டு விழுது மற்றும் மிளகாய் தூள் சேர்க்கவும்.

★ இவை நன்றாக வதங்கிய பிறகு 4 முட்டையை அதில் உடைத்து ஊற்றவும்.

★ அடுப்பை சிம்மில் வைத்துவிட்டு முட்டை அடிபிடிக்காமல் தொடர்ந்து கிளறவும்.

★ முட்டைய நன்றாக வெந்தவுடன், அடுப்பில் இருந்து இறக்கவும்.

★ சூடான, சுவையான முட்டை கறி தயார்.

குறிப்பு : இதை பூரி மட்டுமல்ல, சப்பாத்தியுடனும் சேர்த்து சாப்பிடலாம். செம டேஸ்டாக இருக்கும், சாப்பிட்டுட்டுச் சொல்லுங்க.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117,புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

## சமூக சேவையாளர் தம்பு சுவாமிநாதன் இவரைப் பற்றி 25

& கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை கிராம மட்டத்திற்கு கொண்டு சென்றவர் என்ற பெருமைக்குரியவர் கோப்பாய் தம்பு சுவாமிநாதன். பங்கீட்டு அடிப்படையில் பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பதை கிராமத்தில் இவரே அறிமுகப்படுத்தினார். இவரைப்பற்றி சில வரிகள்.....

& கோப்பாய் பிரதேசத்தில் முருகு உடையார் வழித்தோன்றிய தம்பு ஆச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு இரண்டாவது பிள்ளையாக 1924 ஆம் ஆண்டு தை மாதம் 16 ஆம் திகதி பிறந்தார் தம்பு சுவாமி நாதன்.

& இவர் ஐந்து சகோதர சகோதரிகளை உடன்பிறப்பாக கொண்ட பெருமையுடையவர்.

& தனது கல்வியினை கோப்பாய் நாவலர் பாடசாலையில் கற்று, கல்வியினூடாக நேர்மை, உண்மை,பெரியோரை மதித்தல் போன்ற நற்பண்புகளை வளர்த்துக்கொண்டார்.

& 1943 ஆம் ஆண்டு தொடக்கம் ஓவசியராக மன்னார் பூவரசங்குளம் பகுதியில் பணிபுரிந்தார்.

& 1949 ஆம் ஆண்டு உடுவிலில் ஐக்கிய பண்டகசாலையில் முகாமையாளராக பணிபுரிந்தார்.

& முகாமையாளர் பதவியில் அதிக ஈடுபாடு இல்லாமையால் 1956 ஆம் ஆண்டு கூட்டுறவு அடிப்படையிலான தனிவியாபார முயற்சி ஒன்றினை உடுவில் டச்சு வீதியில் ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி அம்பலவாணர் வீதியில் சொந்தமாக புதிய கடைத்தொகுதியை ஆரம்பித்து பலவழிகளிலும் முன்னேற்றம் கண்டு வந்தார்.

& 1944 ஆம் ஆண்டு கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது மகளாகிய சோதிப்பிள்ளை என்ற மங்கையை திருமணம்புரிந்து இல்லற வாழ்வில் ஈடுபடலானார்.

& இருவருக்கு புதல்வர்களாக தவேந்திரன் தவராசா ஆகியோரும் புதல்வியாக சறோஜினிதேவியும் கிடைக்கப்பெற்றனர்.


& இவருடைய பேரப்பிள்ளைகளாக செந்தில்நாதன், பகீரதன், ஜனனி, ஜனகன், ஜெயந்தன், துவாரகன் ஹெரப்பிரியன், துளசி ஆகியோர் சிறப்புடன் மிளிர்கின்றனர்.

& இறைபணிக்கு அள்ளிக்கொடுத்து அறம் வளர்த்த செம்மல் பிதாவாக வெள்ளெருவைப் பிள்ளையரின் தோற்றத்திருப்பணியின் உதவிகரமாக அதற்கென சபை அமைத்த உதவியவர்.

& ஏழைகளுக்கு அன்னதானப்பணி செய்து மகிழ்ந்ததுடன் அந்தணர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து வந்தார்.

& இடம்பெயர்ந்த காலங்களில் அல்லல்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை உடன்நிறைவேற்றி அவர்களுடைய பசிப்பிணி போக்கி வந்தார்.

& நேர்மை, முயற்சி, எடுத்த பணியைச் சிறப்புற செய்யும் ஆற்றல், நாடி வருவோரை முடிந்தவரை திருப்தியுடன் அனுப்பும் உயரிய குணம் கொண்டவர் இவர்.



& சிறந்த கடவுள் பக்தி உள்ளவராகவும் உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்தில் வருடம் தோறும் நடைபெறும் கொடியேற்ற திருவிழா பொறுப்பாளராக இருந்து கோவிலுக்கு பல உதவிகளை புரிந்தார்.

& எல்லோராலும் கடைக்கார சுவாமிநாதன் என அன்பாக அழைக்கப்பட்டு அக்காலத்தில் பெரிய வியாபார முதல்வராகத் திகழ்ந்தவர்.

& பல இன்னல்கள் வந்த போதும் மக்களுக்கு தமது கடை மூலம் வேண்டிய பொருளுதவிகளைச் செய்த நல்ல உள்ளம் படைத்தவர்.

& கடமை, கன்னியம், கட்டுப்பாடு, தானதர்மம் என்பவற்றை இலட்சியமாக கொண்டு வாழ்ந்தார்.

& சுவாமிநாதன் முகத்தில் புன்முறுவல் கலகலப்பான பேச்சு , இனிமையான சுபாவம், அசைக்கமுடியாத மனோதிடம் இவற்றின் மொத்த வடிவமாக வாழ்ந்தவர்.

& மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் கடினமாக உழைக்கும் திறனும் கொண்ட இவர். சமாதான நீதவானாகவும் பதவி வகித்தவர்.

& வங்கியில் பண நெருக்கடி ஏற்பட்ட சமயங்களில் துணிந்து காசோலைகளை பெற்று அவற்றுக்குரிய பணத்தை வழங்கியுள்ளார்.

& யாழ்ப்பாணத்தில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட வேளையில் தன்னிடம் இருப்பில் இருந்தவற்றை மக்களுக்கு பங்கிட்டு கட்டுப்பாட்டு விலையில் வழங்கி உதவியுள்ளார்.

& பாடசாலையில் பொதுநிறுவனங்கள் என்பன உதவி கோரிவரும் போது விளம்பரமற்ற முறையில் அவர்களுக்கு உதவிகளை வழங்கி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தவர்.

& அனுமதி பெற்ற விநியோகத்தராக முற்காலங்களில் இருந்தமையால் பங்கீட்டு அட்டைகளுக்கு பொருட்களை வழங்கியதன் காரணாக உடுவில் கிராம மக்கள் 'மனேச்சர் ஐயா' என்று அன்பாக இவரை அழைத்தனர்.

& இவரது பணியை இளைய மகன் தவராசா சிறப்புடன் செய்து வரும் நிலையில் அவரும் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

& ஆயிரம் பிறைகண்டு நிறை வாழ்வு பெற்று 2007 ஆம் ஆண்டு தனது 83 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

# மாணவர் மலர்

## கல்விதான் முன்னேற்றம்



நாட்டில் மனித வளம் அதிகம் காணப்படுகிறது. அதாவது 18 - 55 வயது உள்ளவர்கள் 60 கோடி பேர் உள்ளனர். ஆனால் அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்கும் நிலையில் இல்லை. நாட்டில் 31 ஆயிரத்து 329 கல்லூரிகள் உள்ளன.

இதில் 537 பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் பட்டங்கள் வழங்குகின்றன. இருந்தாலும் மாணவர்களின் சேர்க்கை15.61 மில்லியன் மட்டுமே உள்ளது. இதற்குக் காரணம் நாடின் வறுமை க்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளதுதான். நகர்ப்புறங்களில் 27.30 சதவீதம் பேரும் கிராமப்புறங்களில் 27.48 சதவீதம் பேரும் வறுமைக்கேட்டிற்கு கீழ் உள்ளனர்.

உயர்கல்விவளர்ச்சிக்கு அரசு தேவையான நிதி ஒதுக்க வேண்டும். அனைவருக்கும் கல்வி சமநிலையில் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். கல்வி மூலமே வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள முடியும். அதே நேரம் கற்ற கல்வியால் மற்றையவர்களையும் பலன் அடையச் செய்யவேண்டும் கல்வி கற்கும் மாணவர்கள் சமுதாய பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு தீர்வு காண முயல வேண்டும்!

கல்வி கற்காதவரே இல்லை என்பதுதான் ஒரு சுதந்திர நாட்டின் அடையாளமாகும்.



த.தருன்ராஜ்
தரம் 1
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்.



ம.சுவேதன்
தரம் 6F
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# தவறான பதில்!



ஓர் ஊரில் அறிஞன் ஒருவர் இருந்தார். அறிவு நிரம்பிய அவர் யார் எப்படிப்பட்ட கேள்வி கேட்டாலும் அதற்குச் சரியான பதிலைச் சொல்வார். வாதத்திறமை மிகுந்திருந்த அவர் பல நாடுகளிக்குச் சென்றார். யாராலும் அவரை வாதிட்டு வெல்ல முடியவில்லை. அவர் புகழ் உலகெங்கும் பரவியது. தற்பெருமை மிகுந்த அவர் ஒரு நாட்டுக்கு வந்தார். அரசவைக்கு வந்த அவரை அரசன் சிறப்பாக வரவேற்றார்.

''உலகம் போற்றும் அறிஞரே! விலை உயர்ந்த இந்த முத்து மாலையை என் அன்புப் பரிசாக ஏற்றுக்கொள்ளுங்கள்!'' என்று கொடுத்தான்.

பரிசை பெற்றுக்கொண்ட அவர் ''இங்கு என் அறிவுத் திறமையைக் காட்டவே வந்தேன். என்னுடன் போட்டியிட்டு வெல்லும் அறிஞருக்கு இந்த முத்துமாலையை பரிசாகத் தருகின்றேன். இங்கே என்னுடன் போட்டியிடுபவர் யார்?'' என்று கேட்டார்.

அந்த அவையே அமைதியில் ஆழ்ந்து இருந்தது. ''என்னுடன் போட்டியிட இங்கு யாரும் இல்லையா? அறிஞர் நிறைந்த நாடு என்று கேள்விப்பட்டுத்தனே இங்கு வந்தேன்.!'' என்று கேலி பொங்கக் கேட்டார் அவர்.

தன் நாட்டில் பெருமை குறைவதை விரும்பாத அரசன் எழுந்தான். அவையில் இருந்த அறிஞர்களைப் பார்த்து.''உங்களில் யார் போட்டியில் கலந்து கொள்கிறீர்கள்?'' என்று கேட்டான்

எல்லாரும் தலை கவிழ்ந்தபடி இருந்தனர். அவமானத்தால் அரசனின் முகம் சிவந்தது. ''அரசனே நான் இந்த அறிஞருடன் போட்டி இடுகின்றேன!'' என்று எழுந்தான் அரண்மனைக் கோமாளி.

''என்ன நீயா?'' என்று வியப்புடன் கேட்டான் அரசன்.

''ஆம் அரசே ! நான் இந்த அறிஞரை ஆறு கேள்விகள் கேட்பேன். எல்லாவற்றிக்கும் இவர் தவறான பதிலையே சொல்லவேண்டும். சரியான பதிலைச் சொன்னால் தோற்றவர் ஆவார் இந்தப் போட்டிக்கு இவர் உடன்படுகின்றரா? கேளுங்கள்'' என்றான் கோமாளி.

''நீ கேட்கும் ஆறு கேள்விகளுக்குத் தவறான பதில் சொல்ல வேண்டும். அவ்வளவு தானே எவ்வளவு எளிமையான போட்டி இப்படிப்பட்ட போட்டியை நான் இங்கே எதிர்பார்க்வில்லை!'' என்றார் அவர்.

''போட்டி தொடங்கலாம்!'' என்றான் அரசன்.

''நாம் அரசவையில் இருக்கிறோம்!''

''இல்லை''

''அரியணையில் அமைச்சர் அமர்ந்து இருக்கிறார்!''

''ஆமாம்''

''உம் புகழ் பல நாடுகளிலும் பரவி உள்ளது''

''இல்லை''

''அரசர் உமக்குப் பரிசாக கொடுத்து வெள்ளி நகை''

''ஆமாம்''

''இதுதானே நமக்கிடையே நடக்கும் போட்டி எதற்கும் தவறான பதிலையே சொல்லவேண்டும்!''

''இல்லை''

''ஆ! எவ்வளவு பெரிய அறிஞர் நீர் நான் எப்படிப்பட்ட கேள்வி கேட்டாலும் நீர் தவறான பதிலையே சொல்கிறீர் நான் உம்மை எத்தனை கேள்விகள் கேட்டேன்!''

''ஐந்து கேள்விதான் முடிந்து உள்ளது. நான் வெற்றி பெற இன்னும் ஒரு கேள்வி கேட்க வேண்டும்!'' என்று ஆவணத்துடன் சொன்னார் அவர்.

''வெற்றி உமக்கா? எனது கடைசிக் கேள்விக்குச் சரியான பதில் தந்து தோல்வி அடைந்துவிட்டீரே''என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

''ஆ! எவ்வளவு எளிதில் ஏமாந்துவிட்டோம் என் தற்பெருமையே எனக்குத் தோல்வியைத் தந்தது என்று வருந்தினார் அவர்

விலை உயர்ந்த முத்து மாலையைக் கழற்றி கோமாளியிடம் கொடுத்துவிட்டு அவர் பின்னர் தலை கவிழ்ந்தபடி அங்கிருந்து வெளியேறினார்.

**சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்புங்கள்**
**அனுப்பவேண்டிய முகவரி**
**'யாழ் ஒசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.**
**117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

# பிரிட்டனின் வீரம் மிக்க சிறுவனாக இளவரசர் ஹரியால் கௌரவிப்பு

ஆறு வயது சிறுவனான ஹார்லிலேனேவுக்கு கைவிரல்கள் எதுவுமில்லை. இருப்பினும் அந்த சிறுவன் வாழ்க்கையை தைரியமாக எதிர்கொண்டுள்ளான்.

இதற்காக இந்த சிறுவனுக்கு பிரிட்டனின் வீரம் மிக்க சிறுவன் என்ற விருது வழங்கி இளவரசர் ஹரி கௌரவித்தார்.

தொற்று பாதிப்பு காரணமாக கைவிரல்களை இழந்த சிறுவன் ஹார்லிலேனே கிரேட்டர் மான்செஸ்டரின் ஸ்டாக்போர்ட் பகுதியில் வசிக்கிறான்.அந்த சிறுவன் தினமும் ஆடை அணிவது, பல் தேய்ப்பது போன்றவை பெரும் சவாலாகவே உள்ளன. தனது குறைபாடு உள்ள கைகள் மூலம் அன்றாட வேலைகளை செய்வதில் ஹார்லிலேனே நிபுணத்துவம் பெற்றுள்ளான்.

2009ஆம் ஆண்டு மே மாதம் சிறுவன் தொற்று நோய் பாதித்து கைவிரல்களை இழந்தான். அதன் பின்னர் அவன் மிக சிறப்பாக தனது பணிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




யாழ்ப்பாண வாழ்வியல்

வரலாற்றுத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

தொலைபேசி : 021 2227419

## யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி

யாழ்ப்பாணத்தின் பூர்வீக குடிகள், குடிசனப் பரம்பல், வரலாறு, தொல்லியல், கலாச்சாரம், பண்பாடு, மரபுரிமைச் சின்னங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் பொருட்காட்சி கலைக்கேசரியின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையினரால் எதிர்வரும் 24.09.2011 இல் இருந்து 27.09.2011 வரை நடாத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டதும் இதுவரை மக்கள் அறிந்திராததுமான யாழ்ப்பாணத்து தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் குடாநாட்டு மக்களினால் பயன்படுத்தப்பட்டு காலமாற்றம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சி ஆகிய காரணங்களினால் பாவனையின்றி அருகிப்போய்விட்ட பல பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

அத்துடன் வரலாற்றுப் பழமைவாய்ந்த நூல்கள், ஓலைச்சுவடிகள், வீட்டுப்பாவனைப் பொருட்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், பாரம்பரிய விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், மருத்துவம், சடங்குகள், தொடர்பாடல்கள் முதலான கருவிகள், உபகரணங்கள் என்பனவற்றையும் காட்சிப்படுத்த எண்ணியுள்ளோம். இவை பொது மக்களாகிய உங்களிடமிருந்தால் அவை குறித்த தகவல்களை பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு வழங்க முடியும். அல்லது அவற்றை நன்கொடையாகவோ கடனாகவோ தந்துதவி கண்காட்சி சிறப்புற உங்கள் விலைமதிக்க முடியாத பங்களிப்பை நல்கலாம். கடனாகத் தரப்படும் பொருள்கள் திருப்பி ஒப்படைக்கப்படும் என்ற உறுதிப்பாடு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்.

நாங்கள் எப்படி வாழ்ந்தோம்? எங்கள் வரலாறு எது? எங்கள் மூதாதையர் யார்? போன்ற வினாக்களுக்கு விடைதேடி, எமது பாரம்பரியங்களையும் வாழ்வியல் விழுமியங்களையும் இன்றைய இளைய சமுதாயத்தினர் அறிந்திட இந்தக் கண்காட்சி வழிசமைக்கும்.

**ஆகவே, இப்பொருட்காட்சிக்கு ஒத்துழைக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :**

**பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்**
**யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி**
**வரலாற்றுத் துறை**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**தொலைபேசி: 077 6006402, 021 2227419**



'வரலாற்றில் யாழ்ப்பாண வாழ்வும் பண்பாடும்'

கலைக்கேசரி


# அழகுக்காக ஆண்டுக்கு 50 பில்லியன் லீற்றர் தண்ணீரை வீணாக்கும் பெண்கள்

தற்போது பெண்களுக்கும் தண்ணீருக்கும் இடையிலான தொடர்பை வைத்து புதிய ஆராய்ச்சி ஒன்று வெளியாகி உள்ளது. அழகுக்கு அழகூட்ட பெண்கள் ஆண்டொன்றுக்கு 50 பில்லியன் லிற்றர் தண்ணீரை வீணாக்குகின்றனர் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

லண்டன் நகரவாசிகளுக்கு 4 வாரத்துக்கு விநியோகிக்கப்படும் நீரின் அளவு இது. பிரித்தானியாவின் தோமஸ் வோட்டர் என்ற குடிநீர் வழங்கும் நிறுவனம், தண்ணீரின் பயன்பாடுகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டது.

பொதுமக்களிடம் கருத்துக்கணிப்பும் நடத்தியது. அதில் தெரிய வந்த தகவல்கள்: தண்ணீரை எப்போதும் சிக்கனமாக செலவு செய்ய வேண்டும். ஆனால், பெருமளவு தண்ணீர் வீணடிக்கப்படுகிறது. இதனால் கடும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும்.

பெண்கள் தங்கள் அழகை பராமரிக்க ஆண்டொன்றுக்கு 50 பில்லியன் லிற்றர் நீரை வீணடிக்கின்றனர். இது லண்டன் மக்களின் 4 நாள் தேவையை பூர்த்தி செய்யும் நீரின் அளவு. குளிக்கும் போது ஷவரை பயன்படுத்துபவர்களாலும் பெருமளவு நீர் வீணாகிறது.

இந்த அளவு லண்டன் முழுவதும் 25 நாட்களுக்கு விநியோகிக்கப்படும் நீரின் அளவாக உள்ளது. நான்கு பேரில் ஒருவர் பல் துலக்கும் போது குழாயை மூடாமலேயே இருப்பதால் வீணாகும் நீரின் அளவு ஆண்டொன்றுக்கு 120 பில்லியன் லீற்றர்.

90 சதவீதம் பேர் தண்ணீரை வீணடிப்பது தங்களுக்கு பிடிக்காது என்று தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. தினமும் மழை பெய்தால் மட்டுமே இத்தகைய நிலையை வரட்சியின்றி சமாளிக்க முடியும். ஆனால் அது சாத்தியமில்லை. எனவே, ஒவ்வொருவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த பழகிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உயிருக்கு போராடும் கொலைக் குற்றவாளி அமைதியான முறையில் இறக்க வேண்டும்

## மக்கள் விருப்பம்



ஸ்கொட்லாந்தை சேர்ந்த வெடி குண்டு மனிதர் மெக்ரகி புற்று நோயால் அவதிப்படுகிறார். மரணத்துடன் போராடும் அந்த மனிதர் அமைதியாக இறக்க வேண்டும் என பொது மக்கள் விரும்புகிறார்கள்.

இத்தகவலை ஸ்கொட்லாந்தின் முதல் அமைச்சர் அலெக்ஸ் சல்மான்ட் தெரிவித்தார். திரிபோலியில் உள்ள மெக்ரகியின் குடும்பத்தினர் கூறுகையில்,

'அவர் புற்று நோயில் உயிருக்கு போராடுவதாக தெரிவித்தனர். மெக்ரகியை சொந்த நாட்டுக்கு கொண்டு வருவது குறித்து தாம் பரிசீலிக்கவில்லை' என்றும் அவர் தெரிவித்தார்.

மெக்ரகி புற்றுநோயால் இறக்கும் நிலையில் இல்லை என சிலர் கூறுகிறார்கள். லாக்கர் நகரத்திற்கு மேலே 1988ஆம் ஆண்டு பறந்து சென்ற அமெரிக்க விமானத்தை வெடிகுண்டு வைத்து மெக்ரகி தகர்த்தார். இந்த கொடூரத்தாக்குதலில் 270 பேர் உயிரிழந்தனர்.

இந்த கொலை தொடர்பாக மெக்ரகி 2001ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு புற்றுநோய் பாதிப்பு இருப்பதை தொடர்ந்து 2009ஆம் ஆண்டு கருணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

# வலி. மேற்குப் பிரதேச சபை கூட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களுக்கான தீர்மானங்கள் முன்மொழிவு

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தை புறக்கணிப்பு

சங்கானை

வலிகாமம் மேற்கு, பிரதேச சபைக்குச் சொந்தமான 'பிக் அப்சு வாகனம் பழுதடைந்த நிலையில் பாவனை செய்யப்படாமல் சபை வளவினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் திருத்தி பாவனை செய்ய வேண்டும் என்ற தீர்மானம் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச் சபையின் முதலாவது அமர்வில் சபை உறுப்பினர் ஒருவரால் கொண்டு வரப்பட்டது.

உறுப்பினர் த.பி. ராஜ்குமார் என்பவரால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இச் சபைக்குச் சொந்தமான சோலைவரி அறவிடப்படாமல் நிலுவையிலுள்ளதாகவும் இவற்றை அறவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பயத்துடனும் பத்தற்றத்துடனும் உள்ள இப்பகுதி மக்கள் தெருவில் மின் விளக்குகள் இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதால் குறைந்தது ஆயிரம் தெரு மின் விளக்குகளாவது பொருத்தப்படவேண்டும் எனவும்கொண்டுவந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஏனைய உறுப்பினர்கள் பலரும் பல தீர்மானங்களை முன்மொழிந்து சமர்ப்பித்தனர்.

அவற்றுள் இச் சபைக்குரிய எல்லைக்குள் விளம்பரங்கள் வைப்பதற்கு விரும்புபவர்கள் அதற்கான முன் அனுமதியை சபையிடம் பெற்றுக் கொள்ளல், பொன்னாலைச் சந்தியில் ஓர் எரிபொருள் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுத்தல், குடிநீர்க் குழாய்கள் மூலம் விநியோகித்தல் போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சபையின் தவிசாளர் திருமதி ஐ. நாகரஞ்சினி தலைமையில் நடைபெற்ற இக்கூட்ட அமர்வில் தவிசாளர் உரையாற்றுகையில் -

தமிழ் மக்கள் தமது உணர்வுகளைக் காட்டி தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களித்து எம்மைத் தெரிவு செய்துள்ளனர். எம்மால்இயன்ற வரை சபையின் சட்ட திட்டங்களுக்கேற்ப மக்கள் நலன்சார் அபிவிருத்திகளை முன்னெடுத்து நேர்மையான முறையில் இச் சபையைக்கொண்டு செல்வோம் எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 11 பேரில் ஒருவரைத் தவிர ஏனைய 10 பேர் இக்கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தனர். ஐ.ம.ச. கூட்டணியின் மிகுதி 3 உறுப்பினர்களும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்க வில்லை என்பது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் வலி. மேற்கு பிரதேச சபையின் முதலாவது கூட்டத்தில் பங்கு பற்றாத ஐ.ம.சு. கூட்டமைப்பைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள், கூட்டம் முடிவடைந்த பின்னர் 3.45 மணி போல் சபைக்கு சமுகமளித்துள்ளனர். சபைச் செயலாளர் சு. புத்திரசிகாமணி முன் தமது வருகையைப்பதிந்து சென்றுள்ளனர்.

# புங்குடுதீவில் கமநல சேவை நிலைய கட்டடம் அமைப்பு

ஏழாலை

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் புங்குடுதீவில் கமநல சேவை நிலைய கட்டடம் அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகின்றன.

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புங்குடுதீவு பகுதி விவசாயிகளின் நன்மை கருதியும் அவர்களுக்கு வேண்டிய சேவைகளை வழங்குமுகமாக கமநல சேவை நிலையத்தில் கட்டடம் அமைக்கும்பணி துரிதமாக நடைபெறுகின்றன.

இக் கமநல சேவை நிலையம் அமைப்பதற்கு வடக்கின் துரித மீட்சித் திட்டத்தினால் இரண்டு மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

ஏழாலை

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தினால் வெளிவாரிப் பட்டப்படிப்புப் பரீட்சைகளுக்கான பரீட்சார்த்திகளாகப் பதிவு செய்யத் தகுதியானவர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

கலைமாணி, வியாபார நிர்வாக மாணி மற்றும் வணிக மாணி ஆகிய பட்டங்களுக்காக வெளிவாரிப் பரீட்சார்த்திகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இப்பட்டப் படிப்புக்குப் பதிவு செய்வதற்கு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களிலும் குறைந்தது சாதாரண சித்தி பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு வருடங்களுக்குக் குறையாத கற்கை நெறிக் காலத்தையுடைய டிப்ளோமா சான்றிதழ் அல்லது க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீரிக்கப்பட்ட இரண்டு பாடங்களில் குறைந்தது சாதாரண சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற்குக் குறையாத கற்கைக் காலத்தையுடைய டிப்ளோமா சான்றிதழ் என்பன உள்ளவர்கள் தகுதியுடையவர்களாக இருப்பதுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பட்டப்படிப்பைத் தொடரமுடியும்.

இப்பட்டப் படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் அக்டோபர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறும் விண்ணப்பப் படிவங்களை ஒலுவில் இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்ட படிப்புப் பிரிவில் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# கேட்டியளே சங்கதி



கடவுள் வந்து என்னிடம் 'இந்த உலகதில் உனக்கு கஷ்டமாக இருக்கும் விடயம் என்ன? எண்டு கேட்டால் நான் சொல்லுவேன் 'பகவானே இந்த உலகத்தில் மனிஷனா வாழுறது தான் மிகக் கஷ்டம்' எண்டு உண்மைதான் பாருங்கோ... இந்த உலகத்தில் மனிஷனா வாழுறது தான் சரியான கஷ்டம்.

எங்க திரும்பினாலும் , எதைப்பார்த்தாலும் மனித வாழ்வுக்கு அச்சுறுத்தும் காரியங்கள் தானே தலை தூக்கி நிக்குது. இருண்டால் வெளியில வெளிக்கிட முடியாது. கிறீஸ் பூதம் என்ற ஒரு மாயையினூடாக சனத்தை பயப்படுத்தி வைச்சிருக்கினம் சில வேண்டாத விசமிகள். இந்த யாழ்ப்பாண சனம் அரசாங்கத்தின்ர கட்டுப்பாட்டுக்க வந்த பிறகு நீண்ட இரவைத்தான் சந்தித்து வருகின்றது. இரவில் வெளியில் செல்வதற்கும், கூட்டம் கூடுவதற்கும் பல விதத்தில தடைச்சட்டம் போட்டிருக்கு இரவு. 6 மணியோட ஊரடங்குச்சட்டம், அவசரகாலசட்டம், வீதிசோதனை எண்டு காலத்துக்கும் காலம் மாறி மாறி தடையளைப் போட்டு எல்லாரையும் வீட்டுக்க முடக்கியே வைத்திருக்கினம். அப்ப பயங்கரவாதிகளின் நடமாட்டம் அதனால யாரையும் நம்பமுடியாது எண்டு சொல்லிச்சினம். சரி, இப்ப தானே எல்லாம் ஒழுச்சு கட்டி நாட்டில் சமாதானம் நிலவுது எண்டும் யாரும் பயமில்லாமல் நடமாட்டம் எண்டுமெல்லே உலக நாடுகளுக்கெல்லாம் சொல்லுகினம். சனமும் அதை நம்பித்தானே இப்ப இரவில விழாக்கள், கோயில் திருவிழாக்கள் எண்டு திரிய வெளிக்கிடுதுகள். இப்படி இருக்க முதல்ல வந்திச்சினம் இனந்தெரியாத புதுப்புது கள்ளர்கள். ஓட்டைப்பிரிச்சு வீடுகளுக்குள் இறங்கியும், திருவிழாக்களுக்க சனத்தோட நுழைஞ்சு நகைகள், பணங்கள் எண்டு திருடிச்சினம். ஆனாலும் இவயளின்ட திருட்டுக்களுக்கு எங்கட யாழ்ப்பாண பொம்பிளயள் பயப்பிடேல்ல பாருங்கோ... எத்தனை ஆயிரம்கள் போனாலும் காது, கழுத்து அறுபட்டாலும் நகை நட்டை உடம்பில அடுக்கிறதை விடவில்லைத்தானே? சரி, கள்வர் சிலரும் பிடிபட்டு அடங்கிப் போக , இப்ப புதுசா கிறிஸ் பூதம் எண்டு ஒன்றை உருவாக்கி வைச்சிருக்கினம்.பாருங்கோவேன்.... பூதமா வாறவையை கண்டு பிடிச்சு சனம் பொலிஸ்ஸிடம் கொடுத்தாலும் அவயள் விடியப்புறத்தில வெளியவந்து ஜெண்டில்மன் மாதிரி ஊருக்குள்ள உலாவியல்லே திரியினம்.... இப்படி எண்டால் எப்படி சனம் நிம்மதியாக இருக்கிறது. இப்ப கிறீஸ் பூதமா வாறவையள் தான் சுதந்திரமான ஆக்கள் பாருங்கோ... அரசுக்கு எதிராக யாரும் கிளர்ந்தெழக் கூடாது, கேள்விகேட்கக் கூடாது என்பதற்காக தான் இப்படியான நாடகங்களை எல்லாம் அரங்கேற்றுகினம் பாருங்கோ.... இந்த கிறிஸ் மனிதனால் யாழ்ப்பாண சனமே அல்லோலகல்லோலப்படுகுது. ஆம்பிளயள் கண்விழித்து கொட்டன் பொல்லகளோட 'சென்றி' பார்க்கினம். இதனால் பல வீடுகளில் ஆம்பிளயள் பகலில் வேலைக்கு போகாமல் நித்திரை கொள்கினமாம். இப்படி தொடர்ந்து நடக்கிறதால அன்றாடம் உழைச்சு சாப்பிடுகிற வீடுகளில் மனைவி பிள்ளைகள் பட்டினியாம். இப்படி போனால் நாடு எப்படி தம்பி உருப்படும். கிறிஸ் பூதத்தை உருவாக்கி விட்டவையள் தாங்கள் என்ன நோக்கத்துக்காக உருவாக்கினவையோ அந்த நோக்கத்தில இலக்கை அடைந்து விட்டினம். எண்டுதான் சொல்லவேணும். இராவானால் யாழ்ப்பாணமே முந்தி வீட்டுக்குள்ள முடுங்கிப்போகுது பாருங்கோ...

# மட்டு. மாவட்டத்தில் 800 இலட்சம் ரூபா செலவில் விவசாய துறைசார் புனரமைப்பு

**- கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்**

மண்டூர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 800 இலட்சம் ரூபா செலவில் விவசாய துறை சார்ந்த அவசர புனரமைப்பு வேலைகள் இவ்வருட இறுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மட்டக் களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வைத்திய கலாநிதி இரா.நூசாந்தன் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து இதற்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 19 கிராமியக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. கொக்கொட்டிச்சோலை கமநல பிரிவில் 2 குளங்களும் ஏறாவூர் பிரிவில் 2 குளங்களும் வாகரை பிரிவில் ஒரு குளமும் மண்டூரில் 2 குளமும் களுவாஞ்சிக்குடி பிரிவில் 2 குளமும் கிரான் பிரிவில் 2 குளமும், வந்தாறுமூலை பிரிவில் 2 குளமும் கல்லடி பிரிவில் ஒரு குளமும், வாழைச்சேனை பிரிவில் 2 குளமும் மண்டபத்தடி பிரிவில் ஒரு குளமும் கரடியனாறு பிரிவில் ஒரு குளமும் இந்தத் திட்டத்தின் கீழ் அவசரமாக புனரமைக்கப்படவுள்ளன. மேலும் 19 புதிய விவசாயக் கிணறுகள் அமைக்கப்படுவதுடன் 20 வாய்க்கால்கள் 6 அணைக்கட்டுகள் 14 விவசாய வீதிகள் என்பனவும் புனரமைக்கப்படவுள்ளன.

இதேவேளை இவற்றை விட மேலும் 45 கிராமியக் குளங்கள் புனரமைக்கப்படுவதாகவும் உதவி ஆணையாளர் இரா. நூசாந்தன் தெரிவித்தார்.

உலக உணவு விவசாய திட்டத்தினால் புனரமைக்கப்படும் 25 குளங்களும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் புனரமைக்கப்படும் 4 குளங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் புனரமைக்கப்படும் 9 குளங்களும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் புனரமைக்கப்படும் 7 குளங்களும் இதிலடங்கும்.

# சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய முதியவர் கைது

பதுளை,

கடையொன்றிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த 12 வயது நிரம்பிய சிறுமியை பாலியல் வல்லுறவிற்குட்படுத்திய 75 வயது நிரம்பிய வயோதிபரை வெலிமடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் வெலிமடை பகுதியின் டயரபா பெருந்தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பெனடோல் வில்லைகள் மற்றும் பிஸ்கட் வகைகளை கடையில் வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி திரும்பிக் கொண்டிருந்த சிறுமியை வயோதிபர் ஒருவர் இழுத்துச் சென்று, பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்தியுள்ளார்.

சிறுமி கடைக்குச் சென்று வீடு திரும்ப தாமதமாகியதையடுத்து, சிறுமியின் தாய் தனது மகளைத் தேடி வரும் போது மகள் எதிர்பட்டு தனக்கேற்பட்ட அனர்த்தத்தை தாயிடம் கூறினார்.

இது சம்பந்தமாக தாய் தனது மகளைக் கூட்டிச் சென்று வெலிமடை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்த பின், சிறுமி, வெலிமடை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்புகாரின் பேரில் 75 வயது நிரம்பிய வயோதிபரொருவரை வெலிமடைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# 34 வருடகால அவசரகால சட்டத்தை நீக்கியிருப்பது ஜனநாயகத்தின் பால் மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கிறது

**- கிழக்கு மாகாண சபை உறுப்பினர் செல்வராசா மகிழ்ச்சி**

அரசியல் வரலாற்றில் 34 வருடங்கள் ஆட்சி நடாத்திய அவசரகால சட்டத்தை ஒரேநாளில் ஜனாதிபதி நீக்கியிருப்பது ஜனநாயகத்தின் பால் மக்களுக்குள்ள நம்பிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இவ்வாறு அவசரகாலச்சட்ட நீக்கம் தொடர்பில் கருத்து வெளியிட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சீனித்தம்பி செல்வராசா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

அவசரகாலச் சட்டத்தின் தேவை தற்போதைக்குத் தேவையில்லை என ஜனாதிபதி கூறி இன்றைய ஜனநாயகத்திற்கு அர்த்தம் சேர்த்துள்ளார்.

கூடவே பயங்கரவாத தடைச்சட்டமும் நீக்கப்பட வேண்டுமென்று எமது தயவான கோரிக்கையாகும். நாட்டில் புரையோடிப் போயிருந்த பிரச்சினையை தீர்த்து வைத்த ஜனாதிபதி நாட்டில் உள்ள தமிழர் பிரச்சினைக்கும் தீர்வு காண்பார் என்பது இதிலிருந்து புரிகிறது.

எனவே, எடுத்ததற்கெல்லாம் குறை குற்றம் சாட்டாது இணக்க அரசியல் மூலமாக எமது தேவைகளை உரிமைகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். ஜனநாயக விழுமியங்களை பாதுகாக்கும் நோக்குடன் அரசு முன்வைத்த காலை பின் வாங்காது முன்னேற வேண்டும் என்றார்.

# மட்டு. மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கிளைகளை புனரமைக்க நடவடிக்கை

காங்கேயனோடை,

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் கிளைகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம அமைப்பாளர் இராஜன் மயில்வாகனம் தலைமையில் மட்டக்களப்பு டேர்பா மண்டபத்தில் செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் பிரிவு அமைப்பாளர் ருத்மலர், ஞானபாஸ்கரன் கட்சியின் கல்குடா தொகுதி அமைப்பாளர் வசந்தி சந்திரபால உட்பட கிராம மட்ட அமைப்பாளர்கள், கிளைக்குழுக்களின் தலைவர்கள், பிரதியமைச்சர் முரளிதரனின் இணைப்புச் செயலாளர் ரவி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் அதன் கிளைகளை புனரமைப்பது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பிரதேச மட்டத்தில் நியமிக்கப்பட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் கிராமங்கள் தோறும் இக்கிளைகளை புனரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# பாசிக்குடா தென்னம் தோட்டத்தின் நிருவாகம் பொலனறுவை சபையினால் பொறுப்பேற்பு

**பலதரப்பினரும் கண்டனம்**

மண்டூர்,

மட்டக்களப்பு மாவட்ட தென்னை அபிவிருத்தி பிராந்திய அலுவலர்களினால் நிருவகிக்கப்பட்டு வந்த பாசிக்குடா தென்னம் தோட்டத்தின் நிருவாகத்தை பொலனறுவை மாவட்ட தென்னை அபிவிருத்தி சபை பிராந்திய அலுவலகம் பொறுப்பேற்றுள்ளது. ஒரு மாவட்டத்தின் நிருவாகத்தை இன்னொரு மாவட்டத்திடம் கையளித்த செயல் குறித்து பல தரப்பிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தி மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார அந்த நடவடிக்கையை நிறுத்துமாறு கோரியும் அதிகாரிகள் அதனைச் செயற்படுத்தாதது குறித்து அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது.

பாசிக்குடா தென்னம் தோட்டத்தை பொலனறுவை மாவட்டத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா அமைச்சர் ஜெகத் புஷ்பகுமாரவுக்கு ஆட்சேபனை கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதன் பின்னர் அமைச்சரை நேரில் சந்தித்து நிலைமையை எடுத்து விளக்கினார். இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு தனது அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவு இட்டுள்ளதாக இதன் போது அமைச்சர் பொன். செல்வராசா எம்.பி. யிடம் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் நிருவாகத்தை பொலனறுவை மாவட்ட அதிகாரிகள் கையேற்றுள்ளனர்.

# சிரமதானத்தின் போது அதிசக்தி வாய்ந்த கைக்குண்டு மீட்பு

பதுளை,

பாதை சீர்திருத்த சிரமதான வேலைகள் மேற்கொண்டிருந்த வேளையில் அதிசக்தி வாய்ந்த கைக்குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சிரமதான வேலைகளிலீடுபட்டிருந்தவர்கள் மெதகமை பொலிசாருக்கு அறிவித்துள்ளனர்.

இச்சம்பவம், புதன்கிழமை மாலை மெதகமைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்து விரைந்த பொலிசார், குறிப்பிட்ட கைக்குண்டினை மீட்டு, அம்பாறை இராணுவ முகாமின் குண்டுகள் செயலிழக்கும் பிரிவிற்கு அறிவித்தனர். இதையடுத்து விரைந்த, அப்பிரிவினர் கைக்குண்டை செயலிழக்கச் செய்தனர்.

இக் கைக்குண்டு குறித்து, மெதகமைப் பொலிசார் தீவிரப் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இது வரை, இக்கைக்குண்டு தொடர்பாக எது வித தகவலும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லையென பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# இயற்கையுடன் இணைந்த விவசாயத்தை வளர்ப்போம்



இரசாயன வகையான உரங்களால் நச்சுத்தன்மை கொண்ட உணவுப் பொருட்களின் அதிகரித்த உற்பத்திகள் மனிதனுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் இன்றைய சூழ்நிலையில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மனிதர்களைப் பாதுகாக்கவேண்டியது விவசாயிகளது கடமையாகும்.

உற்பத்தி தொடர்பாக பலதரப்பட்ட பிரச்சிசைகளை எதிர்கொள்ளும் விவசாயிகளுக்கு இயற்கை உரங்கள் மற்றும் நவீன விவசாய தொழில்நுட்ப அறிவுகள் அவசியம் என்பதை யாழ் திருநெல்வேலி விவசாய பயிற்சி பாடசாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள் இணைந்து திருநெல்வேலியில் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஐந்து நாள் கண்காட்சியில் எதிர்காலத்திற்கு விவசாயத்துறை சந்திக்கவுள்ள சவால்களுக்கு முகம் கொடுக்ககூடியதாக பயிர்ச் செய்கை முறைகள் ஆராய்ச்சித்தகவல்கள் விவசாய இயந்திர மயமாக்கல் விலங்கு வேளாண்மை போன்றவற்றுடன் மத்திய விவசாயத் திணைக்களத்தின் புதிய தொழில்நுட்ப உத்திகளையும் காட்சியைப் பார்வையிடும் அனைவரும் தெரிந்துகொள்ளவும் அறிந்துகொள்ளவும் கூடியதான வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற கண்காட்சிகளை விட இம்முறை மிகக்கூடுதலான அளப்பரிய காட்சி அறைகளும் விவசாய திணைக்களத்தினால் அமைக்கப்படவுள்ளன. பயிர் வகைகளுக்கான மாதிரித்துண்டங்களும் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. இத்துண்டங்கள் அனைத்தும் இயற்கையுடன் இணைந்த முறைமைகளாக காட்சிப்படுத்தப்படவுள்ளது. எதிர்கால விவசாய உற்பத்திகள் மக்களின் உடல் நலத்திற்கு ஊறுவிளைவிக்காத உற்பத்திகளாக மாற்ற தெளிந்த அறிவை விவசாயிகளுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் வழங்கும் என்பதில் கருத்து முரண்பாடு இருக்க முடியாது.

நகரப்பகுதிகளில் விவசாயம் செய்வதற்கு உகந்த அளவில் நிலங்களில் கிடைக்காது வருமானக்குறைவும் விலையுயர்வும் மக்களைத் திணறடித்துக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் சிறுமுயற்சிகளூடாக தமது வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக இடவசதிகளற்ற மக்கள் வெற்றி உரப்பைகளைப் பயன்படுத்தி தமது அன்றாட தேவைக்கு உபயோகப்படுத்தக்கூடியதாக காய்கறிப்பயிற்சிகளை எவ்வாறு உற்பத்தி செய்யமுடியும் கால்நடைகளின் வளர்ப்புக்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தவேண்டும். விவசாய உற்பத்தியில் பாடசாலை மாணவர்களின் ஈடுபாடுகள் என பல்வேறு முறைகளிலான காட்சிப்படுத்தல்கள் இடம்பெறவுள்ளன.



சேதனப்பசளைகளைத் தயாரிக்கும் முறைகள் மண்புழு உரம் பயிர்களைத் தாக்கும் கிருமி கொல்லிகள் என இயற்கையுடன் இணைந்து மனித வாழ்வை மேம்படுத்தக்கூடிதாக உறுதிப்பொருள்கள் பயன்பாடுகள் என எல்லாமே இற்கையுடன் இணைந்திருக்கும் செயல்முறைகள் விளக்கங்கள் பார்வையாளர்களுக்கு நல்ல முறையில் பயனளிக்கும் அம்சங்களாகும்.



மத்திய விவசாயத்திணைக்களம் யாழ்பல்கலைக்கழக விவசாயபீடம் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் வானிலை அவதான நிலையம் கொப்யே கடுவகமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் என சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொள்ளும் கண்காட்சி என்பதால் விவசாய தொழில்நுட்ப அறிவுகள் மட்டுமன்றி ஒரு விவசாயி தனக்கு ஒரு விவசாய உபகரணத்தை எங்கே இலகுவாகப் பெறமுடியும். எதிர்காலத்தில் எவ்வாறு உற்பத்தியை வங்கிகளின் உதவி என விவசாயிகளுடன் தொடர்புடைய பல்வேறு இக்கண்காட்சியில் குறித்தும் அறிந்து கொள்ளமுடியும்.



கடந்த காலங்களிலும் பார்க்க உற்பத்தித் திறன்கள் கூடுதலாக அமையவேண்டிய தேவை இன்று உள்ளது. மக்களுக்கு சுகாதாரகேடுகள் நோய்த்தாக்கங்களில் இருந்து விலக்கங்களின் கூடுதலான விவசாய நடைமுறைகளே இன்றைய தேவை. அதனால் 'இயற்கையுடன் இணைந்த விவசாயத்தை நோக்கி' என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் இக்கண்காட்சி எதிர்காலத்தில் விவசாய உற்பத்திகளுக்கு உகந்ததாக விவசாயிகளுக்கு கைகொடுக்கும் என நம்பும் மாகாண விவசாய பணிப்பாளர் ஆ. சுப்பிரமணியம் யாழ். விவசாய பணிப்பாளர் எஸ். சிவகுமார் ஆகியோரும் ஏனைய விவசாய உத்தியோகத்தர்களும் மாணவர்கள் உட்பட அனைத்து மக்களும் காட்சிக்கூடல்களில் நிறைவாளர்கள் என்ற எதிர்பார்ப்புடன் பயனுள்ள ஒன்றாக கண்காட்சி இடம் பெறவேண்டும் என்பதில் உறுதியோடு உள்ளனர்.

க.பொ.த. சாதாரண உயர்தர பரீட்சைகளில் திறமையான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களிடம் உங்களது எதிர்கால இலட்சியங்கள் என்ன எனக் கேட்டால் வைத்தியராக வரவேண்டும், என்ஜினியராக வரவேண்டும் என்று கூறுவதே வழமை. ஆனால், ஓர் சிறந்த விவசாயியாக, விவசாய நிபுணராக வர வேண்டும் என்று ஒருவர் கூட சொல்வது கிடையாது.

இந்தக் கண்காட்சியை யாழ்.குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி தென்பகுதியிலிருந்து வரும் பலரும் காணவரவுள்ளனர். விவசாயத்துறையின் அனைத்து அறிவுகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இக்கண்காட்சி அமையவுள்ளதால் விவசாயத்துறையின் முக்கியத்துவத்தை மாணவர்கள் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் ஒரு சிறந்த விவசாய நிபுணராக வர விரும்புகிறேன் என்று கூறும்பட்சத்தில்தான் கண்காட்சியின் வெற்றியும் உழைப்பும் தங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- துருந்தி

# சிங்களம் கற்போம்

**ஹிங்க வெட்டுப் சஹ விஜ்றாம வெடுப் லாபா கெனீம**

**நிலுவைத்தொகையும் ஒய்வூதியச் சம்பளமும் பெற்றுக்கொள்ளும் போது....**

*சில்வா மஹத்தயா:- மிஸ்ட பெரேரா, பலன்னகோ மகே விஸ்றாம வெடுப தவம லேபுனெ நேனெ.*
மிஸ்டர் பெரேரா, பாருங்கோ உங்கள் ஒய்வூதியச் சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை.

*பெரேறா மஹத்தயா:-ஆ...எத்தத? கொழம்ப கிஹல்லா பெலுவெ நெத்த?*
ஆ...உண்மையா? கொழும்புக்கு போய் பார்க்கவில்லையா?

*சில்வா மகத்தயா :-கியா...கியா... தெசெறயக்ம கியா.*
போனேன்... போனேன்... இரண்டு தடவை போனேன்.

*பெ.ம:-இதின் மொக்கத உநே?*
இதில் என்ன நடந்தது.

*சி.ம:-மம வெடகரபு அதிகரன அமாத்தியான்ஷயென் மகே படி வார்தாவ யவல நே.*
நான் வேலை செய்யும் அமைச்சிடமிருந்து எனக்கு சம்பள அறிக்கை அனுப்பப்படவில்லை.

*பெ.ம.:-கொஹாடத? ஏ எயி?*
எங்கே அனுப்ப வேண்டும்?

*சி.ம.:-விஸ்றாம வெடுப் தெபார்த்தமேன்துவட*
பென்ஷன் திணைக்களத்தில்

*பெ.ம:-இதின் ஒயா அபியாசனக் இதிரிபத் கலே நெத்த?*
இன்றும் நீங்க அப்பீல் கொடுக்கவில்லையா?

*சி.ம:-ஒக்கொம கரன்ன ஒனே தெவல் கரல ஆவா. தென் மாச துனக் கத வுனா*
கொடுத்திட்டேன் செய்யவேண்டிய எல்லாம் செய்து கொடுத்தாச்சு. இப்ப மூன்று மாதம் போய்விட்டது.

*பெ.ம:-ஒகெம தமா புரவல புரவல கொட கஹகென இன்னவ. வெடே கர கன்ன எதென்ட அபி யன்னம ஒனே.*
பத்திரிகை அங்கே வைத்திருக்கிறேன் ஆனால் நாங்கள் போனால் தான் வேலை செய்து தருவார்கள்.

*சி.ம:-ஒவ் மம ஹெட கொழும்ப யன்ன கியலா*
ஓம் நான் நாளை கொழும்புக்கு போறேன்.

*பெ.ம:-ஒயாகே அமாத்தயான்ஷயென் கன்ன ஒனே லிபி அரகென விஸ்றாம வெடுப் தெபார்த்தமேன்துவட அதேம கிஹின் தென்ன பலன்ன.*
நீங்கள் எல்லாக் கடிதங்களையும் எடுத்து பென்சன் திணைக்களத்தின் கையில் கொண்டுபோய் கொடுக்கலாமா எனப் பாருங்கள்.

சி.ம:- ஒவ்...ஒவ்...எஹெம தமா மமத் ஹித்துவெ
ஓம்... ஓம்... அப்படி தான் நானும் யோசித்திருக்கிறேன்.

சி.ம:- ஹொந்தயி மம கொழும்பட கிஹின் அவித் ஒயாவ முனகெஹென்ன என்னம்.
நான் கொழும்புக்கு போய் வந்து உங்களை திரும்பி வந்து சந்திக்கிறேன்.

பெ.ம:-ஹெந்தயி ஜயா வேவா
நல்லம் உங்களுக்கு வெற்றி கிடைக்கவேணும்.

## சிரிப்பின் இரகசியங்கள்

இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் -கோமாளி
இன்பத்தில் சிரிப்பவன் -ஏமாளி
கண்பார்த்து சிரிப்பவன் -காரியவாதி
காணாமல் சிரிப்பவன் -கஞ்சன்
கற்பனையில் சிரிப்பவன் -கவிஞன்
கோபத்தில் சிரிப்பவன் -சிந்தனையாளன்
மோகத்தில் சிரிப்பவன் -வெறியன்
கொடுக்கும்போது சிரிப்பவன் -சூழ்ச்சிக்காரன்
நீதியோடு சிரிப்பவன் -அறிஞன்
நிலைமறந்து சிரிப்பவன் -காதலன்
மகிழ்ச்சியில் சிரிப்பவன் -மன்னன்
அருளுக்குச் சிரிப்பவன் -ஆண்டி
குழைந்து சிரிப்பவன் -தந்திரவாதி
துன்பத்தில் சிரிப்பவன் தான் -மனிதன்

## பொது அறிவுப் போட்டி 03

1. கிரிக்கெட் உலக கிண்ண இறுதிப்போட்டி எந்த நாட்டில், எந்த திகதியில் நடைபெற்றது?
2. இலங்கையின் ஆட்சிபீடத்தை அலங்கரித்த இரு பெரிய கட்சிகளின் பெயர் என்ன?
3. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னனின் பெயர் என்ன?
4. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் என பலராலும் அழைக்கப்படுவது எது?
5. இயேசு நாதரின் பிறப்பை நினைவுகூரும் முகமாக கிறிஸ்தவர் கொண்டாடும் பண்டிகை எது?
6. தமிழ்நாட்டின் முதலமைச்சர்களான பிரபல நட்ஷத்திரங்கள் இருவர் யார்?
7. வடமாகாண ஆளுநரின் பெயர் என்ன?
8. தமிழ் அறிஞர்/ பேராசிரியர் ஒருவர் அண்மையில் காலமானார். அவர் யார்?
9. ஐ.நா. செயலாளரின் பெயர் என்ன?
10. ஐ.நா.வில் இலங்கைக்கு எதிராக அண்மையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்ன?

*பொது அறிவுப் போட்டி- 01க்கு சரியான விடை எழுதி அனுப்பியவர்களில் தெரிவுசெய்யப்பட்ட அதிஷ்டசாலிகள் விபரம் வருமாறு*

1. கலாதரன். இந்துஜா சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2. செ. நந்தகுமார் இல. 53 நாவலர் லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

3.ச. சிவசுதன் வல்லை வீதி, சங்கானை.

4.ஜெ. சிவராம் C/O நடராசா, சுழிபுரம் கிழக்கு சுழிபுரம்.

5. நே. வித்தியாசாகர் கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

### பொது அறிவுப்போட்டி -01 விடைகள்

1. எலிசபெத் மகாராணி
2. திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க
3.கிலாரி கிளிண்டன்
4. தந்தை- திரு.கு.ஸி.கீ.ஈ.பண்டாரநாயக்க
தாய்-திருமதி. சிறிமா பண்டாரநாயக்க
மகள். திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
5. திருமதி இந்திரா காந்தி
6. இந்தியா
தந்தை- ஜவகர்லால் நேரு
மகள்- திருமதி இந்திரா காந்தி
பேரன்- திரு.ராஜீவ் காந்தி
7.பெனாசிர் பூட்டோ
8. மார்க்கிரட் தட்கர்
9.இமெல்டா சுகுமார்
10.பூலான்தேவி

சரியான விடைகளை எழுதி அனுப்பும் முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளுக்கு மூன்று மாதத்துக்கான 'யாழ் ஓசை' வாரஇதழ் இலவசமாக வழங்கப்படும். சரியான விடைகள் அடுத்த வார யாழ் ஓசையில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை எதிர்வரும் 08 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

**வீரகேசரி/யாழ் ஓசை காரியாலயம்,**
**117 புகையிரத நிலைய வீதி யாழ்ப்பாணம்.**

# மீண்டும் இருளும் இரவுகள்

யாழ்.குடாநாட்டில் என்ன நடக்கின்றதென்பதே பெரும்பாலும் புரியாதிருக்கின்றது. ஒரு புறம் கிறீஸ் மனிதன் விவகாரம் சுற்றிச்சுழன்றுகொண்டிருக்கின்றது. பெரும்பாலும் இரவுநேர இயல்பு வாழ்க்கையென்பது யாழ்ப்பாணத்தில் கேள்விக்குறியாகிவிட்டது. இப்போது புதிதாக பகல் வேளைகளில் சிறுமிகள் காணாமல் போகும் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன. இவையும் கிறீஸ் மனிதன் விவகாரம் போன்றே மர்மக் கதையாக நீடிக்கப்போகின்றன.

நாளிதழ்களது அலுவலக தொலைபேசிகள் இரவு வேளைகளில், ஓய்வின்றி தொணதொணத்துக் கொண்டே இருக்கின்றன. கிறீஸ் மனிதன் வந்தான் மதில் பாய்ந்து ஓடினான் என சொல்வதற்கு பல கதைகள் பிரதேச செய்தியாளர்களிடமும் மக்களிடமும் இருக்கின்றன. அவை பற்றிய செய்திகள் சலிப்பூட்டுகின்றன. அவ்வாறான கதைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பிரசுரிப்பதை தவிர்க்கின்றேன் என்கிறார் ஒரு உள்ளூர் நாளிதழ் ஆசிரியரொருவர்.

கிறீஸ் மனிதர்களை இயக்குபவர்கள் தமது நோக்கத்தினில் பெரும்பாலும் வெற்றி கண்டேயுள்ளனர். பாதுகாப்பு தரப்பை மக்கள் அச்சத்துட னேயே பார்க்கின்றனர். இரவுவேளை நடமாட்டங்களை தவிர்க்கின்றனர். கூடிப்பேசுவதற்கு கூட எவரும் இரவில் வெளியே வருவதில்லை. மயான அமைதி எங்கும் பரவியுள்ளது. ஆயுதம் தாங்கியவர்களுக்கு மக்கள் மீண்டும் கௌரவம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

வடக்கு-கிழக்கை தொடர்ந்தும் இராணுவ நெருக்குவாரங்களில் வைத்திருக்கவே அரசு விரும்புகின்றது. இதேவேளை இவ்வாறான சூழலில் அரசுக்கு கிட்டிவந்த நலன்களை இழந்துவிடவும் அது இப்போதைக்கு தயாராகவும் இல்லை. மக்களை தொடர்ந்தும் அச்சமடைய வைப்பதன் ஊடாக, தமக்கு எதிராக சாதாரண அகிம்சை வழிப்போராட்ட முயற்சிகளில் கூட மக்கள் ஈடுபடாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவே அரசு முற்பட்டுள்ளது. தென்னிலங்கை ஊடகங்களூடாக நாவாந்துறை அசம்பாவிதம் அறிக்கையிடப்பட்ட விதம் அதை வெளிப்படுத்தியே நிற்கின்றது.

'பொங்கு தமிழ் பாணியில், படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக', அவை கூறிக் கொண்டன. சமாதான காலத்தில் அவ்வாறான போராட்டங்களை நடத்த புலிகள் ஊக்குவித்திருந்ததாகவும் விசேட பயிற்சி பெற்ற படையினர் அதனை முறியடித்ததாகவும், அந்நாளிதழ்கள் அறிக்கையீட்டிருந்தன. இரவோடிரவாக வீடுகளிலிருந்து பிடித்துச்செல்லப்பட்ட இளைஞர்கள் அடித்து நொருக்கப்பட்டிருந்தமை பற்றியோ, தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கோரி அங்கு சென்ற பெண் பிள்ளைகள் நிர்வாணமாக்கப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டமை பற்றியோ அவை பிரஸ்தாபித்திருக்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசுடனான பேச்சுக்களில் தோல்வியடைந்துள்ள நிலையில் அகிம்சைவழியிலேனும் தமிழ் மக்களை ஒன்று திரட்டிப் போராடவேண்டிய சூழல் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்ட மக்கள் போராட்டங்கள் ஏற்படவுள்ளதாக பேசிவருகின்றனர். முப்பது வருட கால ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டுள்ள நிலையில் அகிம்சை போராட்டங்களைத் தவிர வேறு எந்த தெரிவும் கூட்டமைப்பினருக்கு இல்லை. அண்மையில் வடக்கு-கிழக்கின் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றி ஆட்சியேறியிருக்கும் கூட்டமைப்பின் இளம் இரத்தங்களுக்கும் அதே மனப்பாங்கே காணப்படுகின்றது.



வன்முறைகள் வேண்டாமென வற்புறுத்தி வரும் மேற்குலக சமூகத்திற்கு தமிழ் மக்கள் அகிம்சை வழிப்போராட்டங்களில் குதிக்குமிடத்து கவனம் செலுத்தவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுள்ளது. அதனை இராணுவ அடக்குமுறைகளின் கீழ் முடிக்க முடியாதென்பதை அரசும் புரிந்து கொண்டுள்ளது. அவ்வகையிலே அரசு இவற்றை முன்கூட்டியே முடக்கி வைக்க, வகுத்த உத்தியாகவே கிறீஸ் மனிதன் விவகாரம் பார்க்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் பரவலாக விடுதலைப்புலிகளுக்கு இருந்து வந்த ஆதரவுப்புலத்தை சிதறடிக்கவே மாறிமாறி ஆட்சி பீடமேறிய அரசுகள் ஆட்கடத்தல்களையும், படுகொலைகளையும் ஊக்குவித்திருந்தன. வெள்ளை வான் கலாச்சாரமும் அதற்காகவே அறிமுகமாயிருந்தது. இரவு நேர ஆட்கடத்தல் மற்றும் படுகொலைகளால் முன்னைய காலங்களில் குடாநாடு முடங்கிப்போயிருந்தது. வீடுகளுள் முடங்கிப் பாதுகாப்பானதென்ற மனோநிலை மக்களிடம் விதைக்கப்பட்டுமிருந்தது.

அத்தகையதோர் இருண்ட சூழுவை கொண்டு வரவே மீண்டும் கிறீஸ் பூதம் வெளிவந்துள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. மக்களிடையே குழப்பங்களை தோற்றுவிப்பது, அவர்களை ஒன்று திரண்டு வீதிக்கு இறங்க அனுமதிப்பது, பின்னர் அடித்து நொருக்குவதென்ற உத்தியை பாதுகாப்புத்தரப்பு இம்முறையும் கையில் எடுத்துக் கொண்டுள்ளது. எதிர்வருங்காலங்களில் எவருமே போராட்டங்களென வீதிக்கு இறங்காத நிலையை உறுதிப்படுத்தும் வகையிலேயே தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன.

கிழக்கில் பொத்துவில் தொடக்கம் வடக்கில் பொலிகண்டி வரைக்கும், மலையகத்திலும் கிறீஸ் மனிதன் உலாவிக்கொண்டிருக்கிறான் தமிழ்பேசும் மக்கள் வாழுமிடமெங்கும் மட்டுமே கிறீஸ் பூதம் வந்துபோகின்றது. பெரும்பாலும் இலக்க தகடற்ற வெள்ளை வான்களிலோ, சிலவேளை பவள் கவசவாகனங்களிலோ அவன் இறக்கப்படுவதையும், ஏற்றிச்செல்லப்படுவதையும் சராசரி பொதுமக்கள் பலரும் நேரடியாகக் கண்டுள்ளனர்.

கிறீஸ் பூதத்தை, நண்பர்களுடன் சேர்ந்து துரத்தி பிடிக்க முடியாது கோட்டைவிட்ட பொதுமகனொருவர் இவ்வாறு விபரித்தார், 'அவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள். வேகமாக ஓடவும், மதில்களை தாவவும் அவர்களால் முடிகின்றது. ஆனாலும் அவர்களது முகங்கள் பெரும்பாலும் பரிச்சயமானவை. முன்னரும் அவர்கள் ஊருக்குள்ளும், வீடுகளுக்குள்ளும் வந்துபோவார்களே . இப்போது புதிய பெயரில் வந்துள்ளார்கள். அவ்வளவுதான்' என்றார்.

குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறுவரும் சிறார்கள் காணாமல் போதல் சம்பவங்களுக்கு இதே போன்ற பின்னணிகள் இருக்கலாமென்ற சந்தேகங்கள் மக்களிடம் உள்ளது. திட்டமிட்டே பொலிஸ் நிர்வாகம் முடக்கப்பட்டுள்ளது. பதில் சொல்லவேண்டிய அரசு அதிகாரிகள் மௌனம் காக்கிறார்கள். முன்கூட்டியே திட்டமிட்டலின்றி அவ்வாறு எதுவும் நடந்துவிடாது என்பது அனைவரும் புரிந்ததேயுள்ளனர்.

கடந்த கால இருண்ட யுகத்தை நோக்கி மீண்டும் யாழ்ப்பாணம் சென்று கொண்டிருக்கின்றது.மக்கள் மாலையானதும் வீடுகளுள் முடங்கிவிடவே விருப்பம்கொண்டுள்ளனர். இரவு நேர நடமாட்டங்கள் அபாயகரமானதென்ற மனநிலை அவர்களிடம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவலக்குரல் எழுப்பும் அயலவர் வீட்டிற்கு செல்வது கூட பாதுகாப்பற்றதெனவே அவர்கள் கருதுகிறார்கள்.

தீர்வொன்றிற்காக மக்களை வீதிக்கு இறக்கி போராடப்போவதாக கூறிக் கொள்பவர்கள் விழிப்படையவேண்டிய காலமிது. உண்மைகள் நோக்கங்கள் என்ன என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டிய தேவையும் அவர்களுக்கே உள்ளது. மக்கள் பங்களிப்பற்ற பேராட்டங்கள் இலக்குகளை எட்டியதாக வரலாறுகள் இல்லை.

- பாவலன்



'இஷ்டம்'

# ஸ்ரீ காந்துடன் இணையும் ஜனனி ஐயர்



ஸ்ரீகாந்த் துடன் ஜனனி ஐயர் புதிய படம் ஒன்றில் இணையவுள்ளார். இயக்குனர் பாலாவின் 'அவன் இவனில்' லேடி பொலிஸாக வந்த ஜனனி ஐயர் கொலிவுட் புது பட வாய்ப்புக்காக காத்திருந்தார்.

'எதிரி எண் மூன்று' படத்தில் நடித்து கொண்டிருக்கும் நாயகன் ஸ்ரீகாந்த் அடுத்து நடிக்க உள்ள படத்தில் நாயகியாக ஜனனி ஐயர் இணைந்து நடிக்கிறார்.

இந்த படத்தை டைரக்டர் அமீரின் உதவியாளர் இயக்குகிறார். படப்பிடிப்பு விரைவில் துவங்க உள்ளது.

இளம் இயக்குனர் அஸ்லாம் இந்த படத்துக்கு பொருத்தமான நன்றாக தமிழ் பேச தெரிந்த நாயகியை தேடினார்.

இறுதியில் நாயகி ரோலுக்கு பொருத்தமானவராக ஜனனி ஐயர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த படத்துக்காக இளமை பட்டாளம் ஒன்று முழு பலத்தோடு இறங்கியுள்ளது.



# ரசிகர்களை உற்சாக

நான் ஒரு தடவை முடிவு எடுத்துட்ட
மாற்றவும் முடியாது என்று கூறி ரசிகர
விஜய்.

மதுரையில் ரசிகர்கள் முன்னிலைய
பாடல்கள் வெளியீட்டு விழா நடந்தது
நிகழ்ச்சியில் நடிகர் விஜய் ஏழை
வழங்கி பேசினார். விஜய்யின் பேச்
மடைந்தனர். அதிலும் குறிப்பாக மத
பேச்சுக்கு பலத்த கைதட்டல் கிடைத்

விஜய் பேசுகையில் மற்ற ஊர்க
உண்டு. மற்ற ஊர்களில் பக்கத்து
நமக்கு ஏன் வம்பு என்று சென்றுவிடு

ஆனால் மதுரை மக்கள் அப்படிப்ப
காய்ச்சல் என்றால் கூட அதை
கொண்டுபோய் வைத்தியம் பார்க்கும்

பெரிய பெரிய மீசை வைத்துக்
வைத்துக்கொண்டு சுற்றுவார்கள். ஆ
ளத்தோடு இருப்பார்கள். நான் இந்த
போது ஏலே ஏலே என்று கூப்பிடுவா
பாசமும் கலந்து இருக்கும். இங்கு
மற்றும் எங்க அப்பா உள்ளிட்ட பலர்

ஆனால் நான் ஒரு தடவை முடி
மாட்டேன். மாற்றவும் முடியாது. அ
கொடுத்தது மதுரை மக்கள்தான் என்ற



'வேலாயுதம்'

# லாரன்ஸை மறுத்த தமன்னா



தெலுங்கில் தமன்னா மிகவும் பிரபலமான முன்னனி நடிகையாக வலம் வந்துக் கொண்டிருக்கின்றார்.

தமிழ் பட வாய்ப்பை ஏற்று நடிக்க தமன்னா தயங்குவதாக கூறுகிறார்கள்.

காஞ்சனா பட வெற்றிக்கு பிறகு ராகவா லாரன்ஸ் தனது புது படத்திற்காக தமன்னாவை இழுக்க முயற்சி செய்தாராம்.

அனுஸ்காவுடன் மோதல் ஏற்பட்டதால் லாரன்ஸ் பார்வை தமன்னா பக்கம் திரும்பியதாம்.

லாரன்சின் தெலுங்கு படத்தில் நடிக்க தமன்னாவை அணுகியதாக சொல்கிறார்கள்.

தமன்னா தனது 'தேதிகளை' ஏற்கனவே படப்பிடிப்பு களுக்கு வாரி வழங்கி விட்டதால் தற்போது தமிழ், தெலுங்கு படங்களை ஒப்புக்கொள்ள தயக்கம் காட்டுகிறாராம்.

ஆனாலும் தனக்கு பொருத்தமான வேடங்களில் மட்டுமே நடிக்க தமன்னா ஆர்வம் காட்டுவாராம்.

இந்நிலையில் லாரன்ஸ் எடுக்கும் படங்களில் நடிக்கும் நடிகைகள் பற்றிய விபரம் இனி வெளியாக வாய்ப்புள்ளதாக கூறுகிறது பட வட்டாரம்.

# விளம்பர படங்களில் ஆர்வம் காட்டும் அனுஷ்கா

'ரெண்டு' படத்தின் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி 'அருந்ததீ' படம் மூலம் பிரபலமானவர் நடிகை அனுஷ்கா.

தற்போது தமிழ் தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டு இருக்கிறார். இதுதவிர நிறைய விளம்பரங்களிலும் நடித்து வருகிறார். இந்நிலையில் தனது அழகிற்கான ரகசியத்தை கூறியிருக்கிறார்.

இதுகுறித்த அனுஷ்கா கூறியதாவது, நான் அழகாக இருப்பதாகவும் உங்கள் அழகின் ரகசியம் என்ன என்றும் நிறைய பேர் கேட்கின்றனர். அழகுக்கு என்று நான் பிரத்யேகமாக எதுவும் செய்வதில்லை. முதலில் அழகை விட ஆரோக்கியம் தான் சிறந்தது என்று அனைவரும் உணர வேண்டும்.

சினிமாவில் பிசியாக இருக்கும் நீங்கள் விளம்பர படத்தில் நடிப்பது தேவையா என்கின்றனர். வருடத்துக்கு 2 அல்லது மூன்று படங்களில் தான் நடிக்க முடியும். ஆனால் விளம்பர படங்கள் அடிக்கடி டெலிவிஷனில் வருவதால் தினமும் ரசிகர்களை நெருங்கலாம்.

விளம்பர படத்தில் நடிக்க நேரமும் குறைவு பணமும் கிடைக்கிறது. எனவேதான் விளம்பர படத்தில் நடிக்கிறேன். இவ்வாறு அனுஷ்கா கூறினார்.





'வெடி'

## ...ந்சாகப்படுத்திய விஜய்

...டுத்துட்டடா அந்த முடிவில் மாறமாட்டேன்,
...கூறி ரசிகர்களை உற்சாகப்படுத்தினார் நடிகர்

...னிலையில் நடிகர் விஜய்யின் வேலாயுதம்
... நடந்தது.
...ய் ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளை
...ன் பேச்சை கேட்க வந்த ரசிகர்கள் உற்சாக
...ப்பாக மதுரை மக்கள் பற்றி விஜய் பேசிய
... கிடைத்தது.
...ற ஊர்களுக்கும் மதுரைக்கும் வேறுபாடு
...க்கத்து வீட்டுக்காரன் அடிபட்டு கிடந்தால்
...ன்றுவிடுவார்கள்.
...அப்படிப்பட்டவர்கள் அல்ல. பசு மாட்டுக்கு
... அதை தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு
...பார்க்கும் நல்ல குணம் கொண்டவர்கள்.
...வைத்துக்கொண்டு, திருப்பாச்சி அரிவாள்
...ர்கள். ஆனால் பழகுவதற்கு குழந்தை உள்
...ன் இந்த ஏரியாவில் படப்பிடிப்புக்கு வந்த
...ப்பிடுவார்கள். அந்த குரலில் தான் அன்பும்
... இங்கு மாவட்ட மன்ற பொறுப்பாளர்கள்
...ட பலர் பேசினார்கள்.
...வ முடிவு எடுத்தால் அந்த முடிவில் மாற
...ாது. அந்த முடிவு மாற்றத்துக்கு தைரியம்
...ான் என்று கூறினார்.



'முரண்'

# சினி பிட்ஸ்



சினேகா

டைரக்டர் சுசீந்திரன் இயக்கும் 'ராஜபாட்டை' படத்துக்காக விகாரம் தீக்ஸா சேத் இருவரும் இணைந்துள்ளார்கள். நாயகி தீக்ஸாவுக்கு சரளமாக தமிழ் பேச தெரியாதாம். அதனால் டைரகடர் சுசீந்திரன் நாயகி தீக்ஸாவிடம் படத்தின் காட்சிகளை விவரிக்க திணறினாராம்.

தெலுங்கு திரையுலகில் நுழைய துடித்துக் கொண்டிருக்கும் நடிகை அமலா பாலுக்கு, நடிகை அனுஷ்கா அட்வைஸ் செய்து வருகிறாராம்.

கேரளாவை சேர்ந்தவர் அமலா பால். சிந்து சமவெளி என்ற கசமுசா படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகி, மைனா மூலம் வெற்றி நாயகியாக அவதரித்து, தெய்வத் திருமகள் மூலம் நல்ல நடிகையாக உயர்ந்திருக்கிறார்.

தெய்வத் திருமகள் படத்தில் அமலா பாலுடன் நடித்த இன்னொரு நாயகியான அனுஷ்கா தெலுங்கு திரையுலகில் இருந்து தமிழுக்கு வந்தவர்.

படப்பிடிப்பு நேரத்தில் இருவரும் பேசி பழகி நல்ல தோழிகளாகி விட்ட நிலையில், அனுஷ்கா கொடுத்த அட்வைஸ்படித்தான் தெலுங்கு திரையுலகில் நுழைய தீவிரமாக திட்டமிட்டுக் கொண்டிருக்கிறாராம் அமலா பால்.

இது சரித்திர காலம். வசந்தபாலன் அரவான் என்ற சரித்திரப் படத்தை எடுக்கிறார். விக்ரம் நடிக்கும் கரிகாலனும் சரித்திரப் படம்தான்.

ராணா கதை அனைவரும் அறிந்த சரித்திரம். 7ஆம் அறிவிலும் சரித்திரம் வருகிறது. எஸ்.பி.ஜனநாதன் அடுத்து ஜீவா, ஜெயம் ரவியை வைத்து எடுப்பதும் சரித்திரக் கதைதான்.


தனுஷ் மட்டும் விதிவிலக்கா என்ன. அவரும் சரித்திரப் படம் நடிக்கிறார். பெயர் மாரிசன்.

மும்பையின் பெருமைக்குரிய கடற்கரையான ஜூஹுவில் சொந்த பங்களா கட்டுகிறார் நடிகை சமீரா ரெட்டி.

வாரணம் ஆயிரம் படம் மூலம் தமிழில் நாயகியாக அறிமுகமானவர் சமீரா. தெலுங்கு, இந்தியிலும் பிஸியாக உள்ளார்.

அவர் மும்பையின் புகழ் மிக்க ஜூஹு கடற்கரையில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொகுசு பங்களா ஒன்றை கட்டிக் கொண்டிருக்கிறார்.

சிறுகதை



# எனக்குப் பயமாக்கிடக்கு

சிவராசா

'ஒருகாலத்திலை சரியெண்டு சொல்லப் பட்ட விசயம் இன்னொரு காலத்தில் பிழையாய் கேவலமானதாய் பேசப்பட்டிருக்குப் பிள்ளை. அஞ்சுபேருக்கு ஒருபொம்பிளை பெண்சாதியாய் இருந்ததைச் சரியெண்டு சொல்லியும் கதை வந்திருக்கு. ஒருத்தனுக்கு ஒருத்தி என்றும் ராமர்-சீதை கதை இருக்கு. இரண்டும் அந்தக்காலத்துக்குச் சரி. காலம் மாறமாற நியாயங்களும் மாறும். இதுதான் சரியெண்டு நிரந்தரமாய் ஒண்டும் இல்லைப் பிள்ளை. நீ ஒண் டைப் பற்றியும் யோசிக்காதை. இஞ்சை நாங்கள் உயிரோட இருக்கிறது தான் பெரிய விசயம்.''

நலன்புரிமுகாமில் இருந்து முதற் கட்டமாக அறுபது வயதுக்கு மேற்பட் டவர்கள் விடுவிக்கப்பட்டபோது விடுதலையாகிச் சென்ற இந்த தத்துவவரிகளுக்குச் சொந்தக்காரி யான மணியாச்சியின் நினைவு இப்போதெல்லாம் அடிக்கடி வருகிறது. படிப்பறிவு குறைவு என்றாலும் உலக அனுபவத்தில் கற்றுக்கொண்ட பாடத்தால் வாழ்க்கை பற்றி ஒரு தெளிவும் எந்தப் பிரச்சினைக்குமான தீர்வும் ஆச்சியிட மிருந்தது. அறுபது வயது தாண்டியும் ஆச்சியால் எல்லாவேளையிலும் தெளிவாக சிந்திக்க முடிந்தது. ஆச்சி எங்களைவிட்டுப்போய் ஏறக்குறைய ஒருவருடம் கடந்து விட்டது. இப்பொழுதும் கூட இருந்திருந்தால் இந்தப்பிரச்சினைகளுக்கெல்லாம் சரியான தீர்வு சொல்லியிருப்பார் என்று தோன்றுகிறது.

ஜெயபுரத்தில் தொடங்கி வட்டு வாகல்வரை நாங்கள் ஓடிய மரதன் ஓட்டத்தில் இடையில் இணைந்து கொண்டவர்தான் மணியாச்சி. இந்தப் பயணத்தில் இடை நடுவே பிரிந்தவர் களின் கதைகளையும் சொல்லாமல் விட்டுவிட முடியாது. ஜெயபுரத்திலி ருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்ட பயணத்தில் எனது கணவர் சரவணன் என்னையும் இரண்டு பிள்ளைகளையும் விட்டுவிட்டுப் போய்விட்டார். அவராகப் போகவில்லை. எங்கோ இருந்து வந்த எறிகணை கொண்டு போய்விட்டது. அந்த எறிகணைக்கு உரிமையாளர் யார் என்று விவாதம் நடத்தும் மன நிலையில் இப்போதும் நான் இல்லை. மரணங்கள் மலிந்த பூமியாய் மாறிப் போயிருந்த அந்தப்பிரதேசத்தின் அப்போதைய கணங்களில் பெரும் பாலும் மரத்துப் போன மனங்கள் மர ணத்திற்காக அதிகநேரம் அழுவதி ல்லை. அதற்கு நேரமும் இல்லை. எங்களுக்குப் பின்னால் நாய் கூட ஊரில் தங்காது என்ற நம்பிக்கையோடு மரணித்தவர்களை மணலில் புதைத்துவிட்டு கால்போன திசையில் பயணம் தொடர்ந்தது. அந்தக்கவலைக்கு ஆறுதல் சொன்ன யாரோ ஒரு மனுஷிதான் இந்த மணியாச்சி. என்னுடைய குடும்பம் மட்டுமல்ல என்னைப் போல பலரின் குடும்பங்களும் குறைந்தது ஒருவரை யாவது பாதையில் பலி கொடுத்து விட்டுத்தான் வரமுடிந்தது.

செட்டிக்குளம் முகாமிலிருந்து படிப் படியாக ஆட்கள் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். நாங்களும் வீட்டுக் குப்போகலாம் என்ற நம்பிக்கை வரத் தொடங்கியது. செட்டிக்குளத்திருந்து பஸ்ஸிலேற்றி ஜெயபுரத்தில் கொண் டுவந்து இறக்கியபோது இழந்தது எல்லாம் திரும்பக்கிடைத்துவிட்டது போன்ற உணர்வு சிலருக்கு.

'போகேக்கை நடந்து போனனாங்கள் இப்ப பஸ்ஸிலை கொண்டு வந்து விட்டிருக்கினம்' என்று முதியவர் ஒருவர் அந்த வேளையிலும் இட மறியாமல் பேசி வெறுப்பேற்றினார்.

இங்கிருந்து பயணத்தை ஆரம்பித்த போது 'எனக்கு என்ன நடந்தாலும் பர வாயில்லை என்ரை பிள்ளையளுக் கும்

உனக்கும் ஒண்டும் நடக்கக்கூடாது'

என்று சொன்னபடி பயணத்தை ஆரம்பித்த சரவணனை அவர் ஆசைப்பட்டபடியே எங்களுக்கு எதுவும் நடக்காமல் பாதையில் பறிகொடுத்து விட்டு கனத்த மனமும் வெறுங்கையுமாய் திரும்பி வந்திருக் கிறோம்.

மீள் குடியேற்றத்திற்காக ஜெயபுரத்திற்கு அழைத்து வந்தபோது வீட்டை போனால் காணும் எனும் மனநிலை இருந்தது. இங்கு வந்த பின்னர் இந்த வெறுமையின் வெம்மை தாங்க முடியவில்லை.

வீடு இருந்த இடத்தில் மேடு கூட இல்லை. தகரம், சீமெந்து, பிளாஸ்ரிக் தறப்பாள் ஒரு சைக்கிள் தந்தார்கள். வீட்டிற்கு வந்தபோது எங்களுக்கு முன்பாகவே பிரச்சினை வந்து வீட்டுவாசலில் காத்திருந்தது.

எங்கள் வீட்டுவாசலின் எதிர்புறமாக வீதியின் மறுகரையில் உயரமாக காவலரண் ஒன்று அமைக்கப்பட்டி ருந்தது. மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கி எங்களைப் பாதித்து விடாமல் இருப்பதற்காக இரண்டுபேர் அதில் எப்போதும் காவலிருந்தனர். நாங்கள் குடியேறிய ஆரம்ப நாட்களில் எங்களோடு எந்தவிதமான பேச்சு வார்த்தையும் இருக்கவில்லை.

'பாவம் புருசனில்லாத பிள்ளை சின்னப்பிள்ளையளோட கஷ்டம்'

என்ற உணர்வோடு உதவிய உறவுகளும் நண்பர்களும் எப்போதும் கூடவே இருக்கமுடியாதல்லவா? நானும் இரண்டு பிள்ளைகளும் தனித்த குடித்தனம். மரத்துப்போன மனம் என்பதால் பயவுணர்வுகள் அதிகம் நுழையமுடியவில்லை. போதாததற்கு வாசலில் காவலுக்கிருப்பவர்களுக்கு அடிக்கடி தண்ணீர், தீப்பெட்டி, வெங்காயம் போன்றவைகள் விநியோகம் செய்யும் உரிமையும் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஆறுவயதேயான எனது மகன் பவித்திரனும், அவனிலும் இரண்டு வயது குறைந்த தமிழ்வாசனும் பாஷை தெரியாமல் அவர்களோடு எப்படிக் கதைக்கிறார்கள்? என்ன கதைக்கிறார்கள்? என்று எனக்குப் புரியவேயில்லை. ஆனால் நாளாந்தம் கதைக்கிறார்கள். நான் வீட்டுவேலைகள் சமயல் வேலை களில் ஈடுபடும் நேரங்களில் எல்லாம் வாசலில் நிற்கிற சிப்பாய்கள் இரண்டு பேரும் அவர்களைக்கூப்பிட்டு வம்பளக்கிறார்கள்.

'எங்கடை குருவிக்கூட்டைக் கலை ச்சு வாழ்கையை சின்னாபின்னப்படுத் தினவங்கள். இப்ப குழந்தையளுக்கு செல்லம் காட்டிறாங்கள். இப்பிடி எத்தினை குருத்துகள் நாங்கள் ஓடின பாதையிலை கருகிப்போனதுகள்''.

சேகரண்ணாவின் மனைவி ஆனந் தியக்காவின் வார்த்தைகளில் என்னு டைய மனதில் கொழுந்துவிட்டெரிகிற கோபத்திற்கு சமமான உணர்வு இருந்ததால்.

''ஓமக்கா இதுகளும் போய் அவங்க ளோடை செல்லம் கொஞ்சுதுகள். இதிலை ஆகமோசம் அவங்களிலை மணக்கிற சிகரட் புகை நெடி இங்கினை தண்ணி,தீப்பெட்டி எண்டு வரேக்கை ஏனோ தெரியாது உந்தப்புகை மணத்திலை எனக்கு வயித்தைப் பிரட்டும்''

என்று ஆமோதித்தேன். உண்மையும் அதுதான். ஏனோ தெரியவில்லை இவங்களைக் காணுகிறபோதெல்லாம் சரவணனின் நினைப்புத்தான் வருகிறது. என்னுடைய எட்டு வருட கல்யாண வாழ்க்கையில் ஒருநாள்கூட சரவணன் குடித்ததில்லை, புகைத் ததில்லை. இந்த விடயங்களைப்பற்றி ஒருநாள் கூட நாங்கள் கதைக்க வில்லை.

'என்ர பிள்ளையளையும் தகப்ப னைப்போலை ஒழுக்கமான மனிச ராய், அன்பான மனிசராய் வளர்த்துப் போடவேணும்.'

(மிகுதி அடுத்த வாரம்)

# அதிக அரசியல் திருத்தங்கள் (பகுதி 16)

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தம் மேற்கண்டவாறு தமிழும் அரச கரும மொழியாதல் வேண்டும் என்றும் ஆங்கிலம் இணைப்பு மொழியாதல் வேண்டும் என்றும் சட்ட ஏற்பாடுகள் செய்யப்புட்டு அவற்றை நடைமுறைப்படுத்த சட்டவாக்க அதிகாரம் கொண்ட பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டபோதும் அவற்றை நடைமுறைப்படுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளான ஜே.ஆர் பிரேமதாஸா, டிங்கிரி பண்டாரா விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, மஹிந்த ராஜபக்ஷ என எந்தவொரு ஜனாதிபதியும் எந்தவொரு முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக ஜே.ஆர் இனக்கலவரங்களுக்குத் தூபமிட்டார். பிரேமதாஸாவோ கொச்சைத்தமிழில் ஈழம் (Eleam) தவிர எல்லாம் (Eleam) தருவோம் என்று முழங்கினார். டிபி விஜயதுங்காவோ பெரும்பாண்மையினர் மரம் என்றும் சிறுபான்மையினர் அதில் பற்றிப்படரும் கொடி என்றும் வேதாந்தம் பேசினார். சந்திரிகாவின் தீர்வுப் பொதிகளை 1998 இல் ரணில் தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சியினர் பாராளுமன்றத்தில் வைத்து தீயிட்டுக் கொழுத்தினார்கள். அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான நிபுணர் குழு அறிக்கையை மஹிந்த ராஜபக்ஷ பெட்டகத்தில் பூட்டி வைத்தார்.

## வடக்கு- கிழக்கு இணைப்பு பற்றிய ஏற்பாடுகள் (பகுதி 16)

அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் 154 ஆவது (உப பிரிவு 3) பின்வரும் சட்ட ஏற்பாட்டைக் கொண்டுள்ளது.


அருகருகாக உள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாணசபையையும் ஆளுநர் ஒருவரையும் பிரதான அமைச்சர் ஒருவரையும் அமைச்சர்கள் சபை ஒன்றையும் கொண்ட நிர்வாகப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கும் அத்தகைய மாகாணங்கள் ஒரு நிர்வாகப்பிரிவாகத் தொடர்ந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்கு பாராளுமன்றம் ஏதேனும் சட்டத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றலாம்.

இச்சட்ட ஏற்பாடு வேண்டுமென்றே பேரினவாதிகளால் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் புகுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைமுறைக்கு வந்த இச்சட்டம் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி எழுதப்பட்ட ராஜீவ் காந்தி- ஜே.ஆர் உடன்பாட்டின் படி வடக்கு- கிழக்கு இணைப்புப் பற்றி மக்கள் தீர்ப்பை வேண்டி நின்ற விதிகளை அப்படியே தூக்கிக் குப்பைக் கூடைக்குள் போட்டு விட்டது எனலாம். அதாவது ராஜீவ் காந்தியும் - ஜே.ஆர்- ஜெயவர்த்தனாவும் செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்து ஒரே மாகாணமாக இருக்க வேண்டுமா? இல்லையா? என்பதை கிழக்கு மாகாண மக்கள் தான் மக்கள் தீர்ப்பின் மூலம் தீர்மானிக்க வேண்டும் என்று எழுதப்பட்ட விதியை ஜே.ஆர் பறித்து எடுத்து அவ்வாறான தீர்மானம் எதையும் எடுக்கும் அதிகாரத்தை கிழக்கு மக்களிடம் கையளிக்காது பாராளுமன்றத்திடம் ஒப்படைத்தார். ஆனால் பாராளுமன்றத்தில் அத்தகைய சட்ட ஏற்பாடுகள் அவர் ஒரு போதும் கொண்டுவரவே இல்லை. இறுதியில் 2006 ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் பேரினவாதிகளான மூத்தசட்ட அறிஞர் ஏ.ஃ.ஈ சில்வா சட்டத்தரணி கோமின் தயாசிறி , சட்டத்தரணி கு.ஃ குணசேகரா போன்றோரும் இணைந்து ஜாதிக ஹெல உறுமய ஜே.வி.பி. போன்றோர் சார்பாக ஒரு வாழக்கைத் தாக்கல் செய்து நிரந்தரமாகவே வடக்கையும் கிழக்கையும் பிரித்தார்கள். அப்போது பிரதம நீதியராக பதவியில் இருந்த சரத் என். சில்வா என்பவர் இந்தத் தீர்ப்பை வழங்கினார். இவ்வாறான இன நெருக்கடியை உருவாக்கக் கூடிய தீர்ப்பை வழங்கிய பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள 'சம்பூர்' கிராமதிற்கு சரத் என். சில்வா படை பரிவாரங்களோடு விஜயம் செய்தார். அவரோடு 'தொல்லியல் சக்கரவர்த்தி' எல்லாவெல மெத்தானந்த தேரரும் சென்றார். கலிங்கப்போரில் வெற்றி பெற்ற அசோக சக்கரவர்த்தி தனது மகன் மகிந்தனையும் தனது மகள் சங்கமித்தையையும் வெள்ளரசு மரக்கிளையோடு இலங்கைக்கு அனுப்பி வைத்த போது அவர்கள் 'சம்புக்கோல்' என்ற சிங்களப் பெயரோடு விளங்கிய சம்பூர்க் கடற்கரையில் தான் வந்து இறங்கினார்கள் என்றும் தமிழர்கள் அதன் வரலாற்றுச் சிறப்பை உதாசீனம் செய்து ஆக்கிரமித்து 'சம்பூர்' எனப்பெயர் மாற்றம்செய்து கொண்டார்கள் என்றும் மெத்தானந்த தேரர் புதிய வரலாற்றுப் புனைகதையை அங்கே அவிழ்த்து விட்டார். சரத் என். சில்வாவோ மேலும் ஒரு படிமேல் சென்று கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணத்துடன் இணையக்கூடாது என்றும் தென் மாகாணத்துடன் தான் அது இணைக்கப்படவேண்டும் என்றும்

**(தொடரும்)**

## சட்டமும் சமூகமும் 41






சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி
யாழ் ஓசை
வீரகேசரி கிளைக் காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# சைவ மதம் காப்பற்றப்படுமா ?

வைசமும் தமிழும் தலைநிமிர்ந்து வாழும் சிவபூமியாம் ஈழத்திருநாட்டில் மதமாற்றம் மிகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை கண்டு சைவ உலகம் கண்ணீர் சிந்துகின்றது. ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியாக விளங்குகின்ற சிவன் முழுமுதற்கடவுளாவார். சிவனை வழிபடும் பழமையான சைவ சமயத்தின் அருமை பெருமைகளை உணராத சிலர் அற்ப சலுகைகளுக்காக இன்று மதம்மாறி வருகின்றார்கள். இது மிகவும் கவலைக்குரியது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இளமை பருவத்திலிருந்தே இறை சிந்தனைகளை அத்தோடு சைவசமயத்தின் சிறப்புக்களை ஊட்டிவளர்க்க வேண்டும். இன்று யுத்த அனர்த்தங்களால் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டு வறுமையில் சிக்குண்டு தவிக்கும் குடும்பங்களை பல மதத்தினரும் இனங்கண்டு அவர்களுக்கு உதவுவோர்கள் போல பாசாங்கு செய்து இலகுவில் மதமாற்றி வருகின்றார்கள். பசிவந்தால் பத்தும் பறந்து போகும் அல்லவா. சைவமதத்தில் ஒருபோதும் வேற்றுமதத்தவர்களை வலிந்து இழுத்து சேர்த்தது கிடையாது. சைவ சமயம் மிகவும் பழமைவாய்ந்தது. நம் முன்னோர் கட்டிக்காத்த சைவசமயத்தை நாம் அனைவரும் வளர்த்தெடுக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டில் உள்ள சைவ பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சைவ சமயத்தின் சிறப்புகளை சொல்லி கொடுக்க வேண்டும். அதோடு சைவசமய மாணவர்கள் அனைவரும் வீபூதி அணிந்து பாடசாலைக்கு சமூகம் கொடுக்கவேண்டும் என அதிபர் ஆசிரியர்கள் அறிவுறுத்த வேண்டும். இன்று யாழ்.குடாநாட்டிலுள்ள சைவபாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் விபூதி அணிந்து செல்வதை காணமுடிவதில்லை என முதியவர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். இந்த நிலையில் எம்மால் எப்படி சமயத்தை வளர்க்கமுடியும்.

நமது மத்தியில் எத்தனையோ சைவ நிறுவனங்கள் இருந்தும் இந்த மதமாற்றத்தை தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பது வேதனை தரும் செயலாகும். சைவ சமய நிறுவனங்கள் தாமாகவே முன்வந்து ஏழை மக்களின் உடனடித்தேவைகளை அறிந்து அவர்களுக்கு அவ்வப்போது உதவுவதன் மூலம் இந்த மதமாற்றத்தை தடுக்க முடியும். அப்போது சைவசமயத்தை காப்பாற்ற முடியும்.

அன்னியர் வருகையோடு எமது நாட்டில் ஆரம்பித்த மாதமாற்றம் இன்று வரை சங்கிலி போல தொடர்ந்து காணப்படுகின்றது. ஆகவே எதிர்காலத்திலாவது சைவத்தின் மேன்மையை மக்களிடத்தில் உணர்த்தும் வகையில் நடவடிக்கையை எடுக்கவேண்டும். இன்று சிலர் பணம் பதவிகளுக்கும் வீடு நிலம் போன்ற சொத்துக்களுக்கு அடிமைப்பட்டும் மண்டியிட்டும் மாறுகின்றார்கள். இந்த மாற்றத்திற்கு எதிராக நல்லை ஆதீனம் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் இந்துமாமன்றம் போன்ற முன்னணி சமய நிறுவனங்கள் குரல் கொடுக்கவேண்டும்.

குடாநாட்டில் இன்று குறைந்தது வீட்டுக்கு ஒருவர் வெளிநாடுகளில் தொழில் புரிந்து பணம் சம்பாதிக்கின்றார்கள். இவர்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை வறுமை பிடியில் சிக்கிய ஏழை குடும்பங்களுக்கு உதவ முன்வரலாம் அல்லவா?. வேற்று மதத்தவர்கள் செய்துவரும் தொண்டுகளை விட எமது சைவ மக்கள் அதிகளவு தொண்டுகள் செய்யலாம். ஏழைகளின் புன்னகையில் இறைவனை காணமுடியும்.


இன்று அனேகமானோர் விருந்தோம்பல் பண்பைவிட்டு விட்டார்கள். மருந்தே ஆயினும் விருந்து இட்டு உண் என்பார்கள். இதனால் வன்னியில் உணவுப்பஞ்சமே கிடையாது. இதே வேளை யாழ். குடாநாட்டில் சில இடங்களில் விருந்தோம்பல் பண்பை மருந்துக்கும் காண முடியாது என அன்பர் ஒருவர் வருத்தத்துடன் தெரிவித்தார்.

வீடுகளில் இடம்பெறும் சடங்குகளில் பிச்சைக்காரருக்கோ வறியவர்களுக்கு தானம் செய்யும் பண்பு இப்போது இல்லை.

என்-இராமச்சந்திரா.ஜே.பி

• வேலணை நிருபர்

# குறுக்கெழுத்துப் போட்டி 43



**இடமிருந்து வலம்**

1. அம்மன் விரதங்களில் ஒன்று
6. துறவிகளின் ஆடை
9. இரவு அல்ல (குழம்பியுள்ளது)
12. இறந்த பெரியவர்களை இவ்வடிவில் காணலாம்.
14.மிளகாய்ப் படி நிறம்
19. உயர்ந்திருப்பது (குழம்பியுள்ளது)
23. நீளமான புல்
26. சிறுநீர் (குழம்பியுள்ளது முதல் எழுத்து இல்லை)
28. காற்றோடு வரும் மழை
32. புகைபிடிக்கும் கருவி
36. தாண்டு
40. பிரதிஉபகாரம் இன்றிசெய்வது (திரும்பியுள்ளது)
43. இறைவனின் உருவம்

**மேலிருந்து கீழ்**

1. வெள்ளைப்பூச்சை இறுக வைப்பது
3. இரண்டையும் சேர்ப்பது (குழம்பியுள்ளது)
4. பூ (குழம்பியுள்ளது)
5. ஆலை
6. இந்தியாவின் புண்ணிய தலம்
7. விற்பனை அலகு
15. சிலம்புச் செல்வன்(குளம்பியுள்ளது)
18. உள்ளேயும் வெளியேயும் செல்லும் இடம் (திரும்பியுள்ளது)
24. எரித்தல் (திரும்பியுள்ளது)
25. தேகம்
28. மாசு
33. பொலிஸ் ஆடை
38. இரண்டு
40. பாத்திரம் மினிக்கி

*குறுக்கெழுத்துப் போட்டி 41க்கான விடைகள்*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஐ | ங் | க | ர | ன் | | ஓ | ம் |
| ந் | | கு | கா | அ | மை | | ட |
| து | ற | வி | | ன | தா | அ | வ |
| | ப் | | கா | ம் | ன | க | |
| சா | ப | ம் | | | ம் | ரா | க |
| த | ர் | ப் | பை | | | தி | ல் |
| க | | அ | ர | ச | ன் | | வா |
| ம் | ம் | ப | வி | | | ந | ரி |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

*1. விமலா பர்னாந்து,*
*127/4உ மேபீல்ட் லேன்,*
*கொட்டாஞ்சேனை.*


*2. செ.றோபட்,*
*நியூ நம் குயர்*
*கொழும்பு 13,*

*3. செல்வி அ.வாசவி*
*620, நாவலர் வீதி*
*அரியாலை.*


**குறுக்கெழுத்துப் போட்டி 43க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
**குறுக்கெழுத்துப் போட்டி**
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.**




" காதலன் நெஞ்சைத் தொடுகிற மாதிரி ஏதாவது சொல்லேன்..!
காதலி -பெனியன்!




யார் மீதாவது உங்களுக்கு சந்தேகம் இருக்கா? -நீதிபதி
என் கணவர்மீதும் வேலைக்காரி மீதும் சந்தேகமா இருக்கு! பெண்
"சரி வழக்கு சம்பந்தப்பட்ட விஷயத்தை மட்டும் சொல்லுங்க !
-நீதிபதி




" ஆண் எலும்புக் கூட்டுக்கும் பெண் எலும்புக்கூட்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன?"
" ஆண் எலும்புக் கூட்டின் வாய் மூடி இருக்கு. பெண் எலும்புக் கூட்டில் வாய் திறந்தே இருக்கும்




"உன் பெயர் மல்லிகாதானே?"
"ஆமாம் எப்படிகண்டு பிடிச்சீங்க?"
"மண்ணாங்கட்டி! இருபது வருஷத்துக்கு முன்பு உன்னுடைய தொந்தரவு தாங்காம வீட்டை விட்டு ஓடின உன் புருஷன் நான் தான்!"




" டாக்டர் இவுங்க என் மாமியார்!"
" புரியுது! புரியுது! மேஜர் ஆபரேஷன் ஏதாவது பண்ணணுமா?




"என்னப்பா நூறு ரூபாய் நோட்டை இப்படி விட்டெறியிறே?"
" இந்த ஓட்டலில் நூறு ரூபாய் நோட்டை விட்டெறிஞ்சா நல்ல சாப்பாட்டு கிடைக்குமாமில்லே! "

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

வன்னி மண் வீரம் விளைந்த பூமியாகத்தான் இருந்தது நேற்றுவரை. வீரம் செறிந்த போராட்டங்களையும் போற்றுதற்குரிய தியாகங்களையும் ஈந்த மண் அது. இரத்தமெனும் செந்நீரால் கழுவப்பட்டதனால் அதன் நிறமும் மணமும் இப்போதும் மாறவில்லை. அம்மண்ணுக்குரிய கலாசாரமும் உன்னத நிலையில் தான் இருந்தது. தமிழருக்கே உரிய தனித்துவமான பண்பாட்டு விழுமியக்கூறுகள் ஒவ்வொன்றையும் இறுக்கமான முறையில் மக்கள் கடைப்பிடித்து வந்தனர். யுத்தம், பேரழிவுகளை பேரிடர்களை அம்மக்களுக்கு பரிசாகக் கொடுத்திருந்தாலும் அதனை விரும்பியோ விரும்பாமலோ ஏற்று அதனோடிணைந்த வாழ்க்கை முறைகளையும் கட்டமைத்து சிறப்பான முறையில் வாழ்ந்துவந்தனர். இதனால் இவர்களது வாழ்வியல் நடைமுறைகளை உலகே வியந்து பார்த்தது.

ஆனால் இன்றுள்ள சூழமைவில் வன்னி மண் அதன் பசுமையை இழந்து வருகிறது. மக்கள் முன்னர் வாழ்ந்த வாழ்வியல் நிலையினின்றும் மாற்றமுற்றவர்களாக நெறிமுறை பிறழ்ந்து இருக்கின்றனர் என்பதை அண்மைக்காலமாக அங்கு இடம்பெறும் சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

போரியல் வரலாற்றில் பல்வேறு சாதனைகளையும் சோதனைகளையும் தாண்டிவந்த மக்கள் இன்று தமது சொந்த வாழ்வில் பல்வேறு விதமான இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன் கலாசார துர்நடத்தைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மை நாட்களில் வெளிவந்த பத்திரிகை செய்திகளை படிக்கும் போது முன்னர் வன்னி மக்கள் நிகழ்த்திய போராட்ட சாதனைகளையும் தியாகங்களையும் உயிர்க் கொடைகளையும் அப்படியே குழிதோண்டிப் புதைத்து யாவற்றையும் மறக்கடிக்கும், மழுங்கடிக்கும் நிலைதான் விஞ்சி வருவது தெரிகிறது. பத்து மாதம் கருவினில் சுமந்து மெய் வருந்தி பெற்றெடுத்த பிள்ளைகளைக்கூட துடிக்கத்துடிக்கக் கொல்லும் கறைபடிந்த கரங்கள் அதிகரித்து செல்கின்றன.

''தாயின் மடியில் தலைவைத்திருந்தால் வேதனை தெரிவதில்லை...'' என்பது ஒரு சினிமாப்பாடல் வரி. உண்மையில் உலகிலுள்ள இயற்கையின் படைப்புக்களில் தூய்மையானது எதுவெனக் கேட்டால் தாய்மை தான் மனதில் கூட தீங்கு நினைக்காத உன்னதப் பிறவி தாய். தாய்மைக்கே மாசுகற்பிக்க முயலும் இழுக்கை ஏற்படுத்தும் சம்பவங்கள் வன்னி மண்ணில் அரங்கேறிவருவது வேதனை தருகின்றது. அண்மைக்காலமாக வன்னிப்பகுதியில் கலாசார சீர்கேடான சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. போர் தந்த அழிவுகளால் ஏராளமான இளம் விதவைகள் வாழ்வில் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குரிய புனர்வாழ்வு, மறுசீரமைப்பு வசதிகளை உரியவர்கள் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. பெரும்பாலும் கணவனை நம்பியே சீவியம் நடத்திய குடும்பங்கள் போரின் முரட்டுக்கரங்களுக்குள் சிக்குப்பட்டு-குதறப்பட்டு தமது வாழ்வையே ஈகம் செய்தனர். ஆண்களை நம்பி வாழ்ந்த ஏராளமான இளம் பெண்கள் விதவைகளாக, ஏதிலிகளாக கைவிடப்பட்டுள்ளனர். அவர்களது பிஞ்சுக்குழந்தைகளையும் முறையாக கவனிக்கும் திராணியும் மனநிலையும் அவர்களிடத்தில் இல்லை. ஒரு சாண் வயிற்றுக்காக உடலையே விற்கவேண்டிய நிலைக்கு பல இளம் விதவைகள் இன்று தள்ளப்பட்டுள்ளனர். தமது குடும்பத்தை வாழவைப்பதற்கும் தமது பெற்றோர்களை பசிப்பிணியிலிருந்து காப்பாற்றுவதற்கும் அவர்களுக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை. இதனால் தப்பான வழிகளில் பணம் சம்பாதிக்கும் வழிமுறைகளை கையாண்டு வருகின்றனர். இவ்வாறு இடம்பெறும் தவறான உறவால் கருவுற்றால் சட்டவிரோதமாக கருக்கலைக்க முயல்கின்றனர். அப்படி முடியாத பட்சத்தில் பிறந்தவுடன் வீசியெறியவோ அல்லது கொல்லவோ முற்படுகின்றனர்.

'முன்னர் இருந்து வந்த இறுக்கமான சமூகக்கட்டமைப்புக்கள், வாழ்வியல் முறைகள் யாவும் தகர்த்தெறியப்பட்ட நிலையில் கலாசார பிறழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடையிலா சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சுதந்திர நடமாட்டம், மக்களின் மீள்குடியமர்வு(சில இடங்களில் மாத்திரம்) கருத்துச்சுதந்திரம் என மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான சுதந்திரங்கள் மறுக்கப்பட்ட நிலையில் கலாசார விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இச்சுதந்திரத்திற்கு அடிமைப்பட்டு பல பெண்கள் தமது வாழ்க்கையையே தொலைத்துள்ளனர்; தொலைத்து வருகின்றனர்.



தமிழ் கலாசார மரபின்படி திருமணம் என்பது ஒருவனுக்கு ஒருத்தி என்ற இறுக்கமான உறவு முறையே இருந்து வருகிறது. பலதார மணம் என்பது மறுக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இருந்தும் ஆணுக்கு இக்கட்டுப்பாடுகளில் தளர்வுப் போக்குகள் காணப்பட்டடுகின்றன. ஆனால் பெண்ணுக்கு அவ்வாறான ஒரு நிலமை இல்லை. கணவனை இழந்தால் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழும் வாழ்க்கை முறையே அவளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மங்களகரமான காரியங்களில் கூட விதவைகள் புறக்கணிக்கப்படுகின்றனர். இதனால் உளவியல் ரீதியாக பல பிரச்சினைகள் உருப்பெற வழிவகுக்கின்றது. தன்னால் இனி ஒரு பிரயோசனமும் இல்லை, நான் ஒரு அநாதை, தீண்டத்தகாதவள், மாசுபட்டவள், சமூகத்தில் இனி எனக்கு ஒரு அங்கீகாரமும் இல்லை. இப்படியான எதிர்மறையான சிந்தனைகள் அவர்கள் மனங்களில் தோற்றமெடுக்கின்றன. இத்தகைய எதிர்மறையான சிந்தனைகள் மனதிலே ஆழமாக பதிந்துவிட்டால் மனரீதியான பல்வேறு பாதிப்புக்களை சந்திக்க நேரிடும். இதன் ஒரு கட்டமாகவே தற்கொலை எண்ணம், விபச்சாரம், முறை தவறிப்பிறந்த பிள்ளைகளை கொலை செய்யும் வக்கிர எண்ணம், குடும்பத்தினருடனான உறவுச்சிக்கல் நிலை இவ்வாறு பல சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டப்படுகின்றனர். இந்நிலையை மாற்றுவதற்கு யுத்தத்தினால் இளம் வயதிலேயே விதவைகளாக்கப்பட்ட பெண்களை மறுமணம் புரிவதாக எத்தனை இளைஞர்கள் தயாராக இருக்கின்றனர்? தமது பாலியல் தேவைக்காக உடற்பசியைத் தீர்ப்பதற்காக மட்டுமே இந்த அபலைப் பெண்களை பயன்படுத்தி விட்டுப்போகும் இழிநிலையே இங்கு காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். வெறும் பணத்திற்காகவும் , பாலியல் உணர்ச்சிகளுக்காகவும் வடிகாலாக்க வேறு வழியின்றி தமது உடல்களை அபலைகள் காமப் பேய்களுக்கு தாரைவார்க்கின்றனர். இதன் மூலம் பின்னர் வரும் விளைவுகளை ஆபத்துக்களை உணராமல் அற்ப உணர்ச்சிகளுக்கும், பணத்திற்கும் ஆசைப்பட்டு கேவலமாக நடக்க முற்பட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வன்னிமண் பாரிய அவலங்களைச் சுமந்து நிற்கிறது. வார்த்தைகளால் வடிக்கமுடியாத துன்பங்களை மக்கள் அனுபவித்திருக்கிறார்கள். தற்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். தமிழர்களாகப் பிறந்ததே பாவம் எனும் அளவிற்கு கடந்த பல தசாப்தங்களாக தமிழர்கள் அனுபவித்த இன்னல்கள் சொல்லும் தரமன்று.

இருந்தும் கடந்த மூன்று தசாப்தங்களாக மக்களின் வாழ்வியலை சீர்குலைத்து வந்த போரின் கோரத்தாண்டவம் ஓய்ந்து அமைதிநிலை கருக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில் தமது வாழ்வியல் கட்டமைப்பை சீர்ப்படுத்தும் முயற்சியில் மக்கள் இறங்கியிருக்கும் நிலையில் தமிழினத்திற்கிருக்கும் தனித்துவமான பண்பாட்டுவிழுமியங்களை சிதைக்கும் செயற்பாடுகளில் குறிப்பாக விபசார நடவடிக்கைகளில் அதிகளவு பெண்கள் ஈடுபடுவது வேதனை தருகிறது. இது எம் மக்களின் எதிர்கால வாழ்வை மீண்டும் இருண்ட காலத்திற்குள் - அவலம் மிகுந்த சூழலுக்குள் கொண்டு போய் விட்டுவிடுமோ என்பதே சமூக ஆர்வலர்களின் ஆதங்கமும் வேதனையும் ஆகும்.

— உதிஷ்டிரன்


# மனித வாழ்க்கையில் முகாமைத்துவத்தின் அவசியம்

முகாமைத்துவம் என்பது எமது வாழ்க்கையில் நாம் அறியாத வண்ணம் பின்னிப்பிணைந்துள்ளது. சிலர் நினைப்பது போன்று முகாமைத்துவம் ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்யும் முகாமையாளர்களுக்கு மட்டுமே தேவையானதென்பது தவறான கருத்தாகும்.

ஆதிமனிதன் காடுகளில் வாழ்ந்தபோதும் அவனறியாமலே முகாமைத்துவம் வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருந்தது. அதிகாலையில் எழுந்து, வேட்டையாடி தனது உணவை தேடுதல் , பின்னர் இருப்பிடம் திரும்பி தனக்குரிய வேலைகளை கவனித்தல், இரவு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு நித்திரை செய்வது என்பன முகாமைத்துவமே. இந்த விதமான முகாமைத்துவம் ஆதிமனிதனின் வாழ்க்கையில் இணைந்திருந்தது.

நாகரீக உலகில் முகாமைத்துவம் மிகவும் இன்றியமையாததாகும். ஒரு குடும்பத்தில் முகாமைத்துவம் சிறப்பாக இருக்குமேயானால் அந்தக் குடும்பம் சிறப்பாக அமையும். உதாரணமாக தனக்கு கிடைக்கும் வருமானத்தை எப்படி சமாளிப்பது, அந்த மாதம் குடும்பத்தில் செய்யவேண்டியவை என்ன? பிள்ளைகளின் படிப்பு செலவுகளை எப்படி நிறைவேற்றுவது போன்ற செயல்கள் மறைமுகமாக முகாமைத்துவத்தின் சிறப்பை தெளிவுபடுத்துகின்றன. ஒரு நல்ல முகாமைத்துவம் கொண்ட கணவனோ மனைவியோ வாழ்க்கையைத் திறம்பட அமைத்துக் கொள்கிறார்கள்.

படிக்கும் பிள்ளைகள் கூட தங்கள் படிப்பில், பாடங்களில் ஒரு முகாமைத்துவத்தை கடைப்பிடிக்கும் போது அவர்கள் சிறப்பான பெறுபேறுகளை



பெற்றுக்கொள்கிறார்கள். ஒரு பாடசாலையில் முகாமைத்துவம் பல்வேறு கோணங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. வகுப்புக்களுக்கான நேர ஒதுக்கு முறை, ஆசிரியர்களுக்கான நேர ஒதுக்குமுறை(Time Table) ,பாடசாலை ஆரம்பிக்கும் நேரம், இடைவேளை, பாடசாலை முடிவடைதல், வைபவங்களை நடத்துதல், விளையாட்டுப்போட்டிகளை நடத்துதல் என்பன முகாமைத்துவத்தின் ஒரு வகையான நடவடிக்கைகளே. திறமையான முகாமைத்துவத்தை பேணுவதன்மூலம் சிறந்த பலாபலன்களை பெறமுடிகிறது.

பிரதானமாக தொழில் தாபனங்கள், வங்கிகள் போன்றவற்றுக்கு இது பிரதான காரணியாக அமைகின்றது. முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் முகாமையாளர் என்று அழைக்கப்படுகிறார். நல்ல முகாமையாளர், முகாமைத்துவம் கொண்ட தாபனங்கள் திறமையாக இயங்கி வருகின்றன. சில நிறுவனங்கள் முகாமைத்துவத்தில் திறமையானவர்களை ஆலோசகர்களை நியமிக்கின்றார்கள்.

கணக்கீடு முகாமையாளர், (Finance Manager/Account Manager) நிர்வாக முகாமையாளர் (Administrative Manager) வியாபார விஸ்தரிப்பு முகாமையாளர் (Business Develpement Manager) ஆளணி முகாமையாளர் (Human Resources Manager) கணனி முகாமையாளர் (IT Manager)கிளை முகாமையாளர் (Branch Manager) ஆக பல்வேறு வகையான சேவைகளை முகாமையாளர்கள் நிர்வகித்து வருகிறார்கள்.

இவர்கள் எல்லோரையும் நிர்வகிக்க பொது முகாமையாளர் (GENERAL MANAGER) நியமிக்கப்படுகிறார்.

முகாமையாளர் நிர்வகத்திறமை கொண்டவராகவும், தான் பொறுப்பேற்றுக்கொண்ட பொறுப்புகளின் தன்மைகள் தெளிவுற அறிந்தவராகவும் இருக்க வேண்டும். திறமையான முகாமையாளர்களின் நிர்வாகத்தில் அந்த ஸ்தாபனமும், அதன் வேலையாட்களும் மிகவும் பயன்பெறக்கூடியதாக இருக்கும்.

கருத்துப்பரிமாற்றம், (Communication skill ) வேலைகளை பகிர்ந்து கொள்வது (DELEGATION-AL OF WORK), திட்டமிடுதல் (PLANNING) என்பன சிறப்பான முகாமைத்துவத்துக்கான அம்சங்களாகும்.

முகாமைத்துவத்துக்காக எத்தனையோ பட்டப்படிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே எமது வாழ்க்கையில் முகாமைத்துவம் மிகவும் அவசியமான ஒன்றாகும்.


சித்தன்கேணியூர்
**செல்வரத்தினம் சௌந்தரராஜன்**
*(ASSM-UK,AUKAP-UK)*

# மூலிகை மருத்துவம்

## தாமரை

B.N Nelambo nucifera

மறுபெயர்:-ஆவிந்தம்
சூரியன்நட்பு,கதுமம்,நளினம்,அங்கோருகம்,
வனசம்,பங்கேருகம்,பங்கசம்



தாமரையில் 4 வகையுண்டு வெண்மை, செம்மை,நீலம்,மஞ்சள் என்பன.

உபயோகம்:-பூ,விதை,பூத்தாம், கிழங்கு

சுவை:-இனிப்பு,துவர்ப்பு

செய்கை:-குளிர்ச்சி உண்டாக்கி,கோழையகற்றி துவர்ப்பி,தாது வெப்பகற்றி,உரமாக்கி,உள்ளழல் ஆற்றி

குணம்:-பூவினால் வெப்பத்தினால் உண்டான கண் எரிச்சல் சுரம் நீர் வேட்கை ஆகியவற்றைப் போக்குவதுடன் வெப்ப மருந்துகளினால் ஏற்படும் உட்சூட்டையும் தணிக்கும்.

உபயோகம்:-பூவின் இரசத்தை செமியாக்கழிச்சல், ஈரல் நோய்களுக்கு கொடுக்க அவற்றைத் தணியச் செய்யும் அத்துடன் இதயத்தை வன்மைப்படுத்தும்.

பூவை மணப்பாகு செய்து 1/2 -1 பலம் வரை கொடுக்க இருமல் குருதிப போக்கு குருதி மூலம் சீதக் கழிச்சல் ஆகியவை தணியும்.

பூவை குடிநீர் செய்து கொடுக்க தீக்குற்றத்தினால் உண்டான சுரம் நீங்கும்.

விதையை பொடி செய்து 1/4 - 1/2 வராகநடை உள்ளுக்குக் கொடுத்துவர சுவையின்மை நீங்குவதுடன் உடலுக்கு வன்மையைக் கொடுக்கும் அதே வேளை ஆண்மையையும் பெருகச் செய்யும்.

விதையை தேன் விட்டரைத்து நாக்கில் தடவி வர வாந்தி விக்கல் நீங்கும்.

கிழங்கின் மேற்றோலை சீவி ஆவின்பால் விட்டரைத்து அப்பாலில் கலக்கி கொடுத்துவர மேக வெட்டை நீர்ச்சுருக்கு நீங்கும்.

**ரி. உமா** *(2 ஆம் வருடம்)*
லங்கா சித்த - ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.



# யோகாசனமும் ஆரோக்கிய வாழ்வும் 5

## சூரிய நமஸ்காரம்
(Power yoga)

யோகாசனத்தின் பிரதான பகுதியாக அமைவது சூரிய நமஸ்காரம் ஆகும். இதனால் உடல் உள ஆரோக்கியம், சுறுசுறுப்பு, அழகு, இளமை, தேஜஸ் என்பன மனித உடலில் ஏற்கப்படுகின்றது. யோகநிலையை அடைவதற்கு துணைபுரிகின்றது.

இதன் விளக்கம்

சூரிய நமஸ்காரம்- (சூரியனுக்கு வணக்கம் செலுத்துதல்) இது யோகாசனத்தையும் (ஹடயோகம்) பிரணாமம் எனப்படும் மூச்சையும் ஒன்றிணைக்கின்றது. அதாவது உடலை நன்கு வளையக்கூடிய தன்மையடையச் செய்து தொடர்ந்து செய்யப்போகும் ஆசனங்களுக்கும் (ஹடயோகம்) பிரணாயாமப் பயிற்சிகளுக்கும்(சுவாசப் பயிற்சி) தியானத்திற்கும் நம்மைத் தயார்ப்படுத்துகின்றது. இது பொதுவாக சூரிய உதயத்தின் போதே செய்யப்படல் வேண்டும். இதன்மூலம் அதிக நன்மைகளை பெறமுடியும். என்றாலும் சூரிய அஸ்தமனத்தின் போது இதைச் செய்வதுடன் வயிறு வெறுமையாக இருக்கும் போதும் செய்யலாம். ஆகக்குறைந்தது ஒரு நிமிடத்தில் 4 தடவைகள் செய்யவேண்டும்.

குறிப்பு:-சாப்பிட்டவுடனும் தேநீர் போன்ற பானங்களை அருந்தியவுடனும் இதைச் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

செய்முறை:-சூரிய நமஸ்காரத்தில் பொதுவாக 12 படிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றை எவ்வாறு செய்வது மற்றும் அவற்றிற்குரிய பெயர்கள்,விளக்கங்கள் என்பவற்றைப் பார்ப்போம்.

படி1.பிறையாசனம்

கால்களை சேர்த்து நேராக நின்று இரு கைகளையும் கூப்பி நெஞ்சுடன் சேர்த்து வைக்கவும். பின் கைகளை தலைக்கு மேல் உயர்த்தி காதுடன் அணைத்தபடி உடம்பை பின் வளைக்கவும். இப்படி செய்யும்போது மூச்சை உள்ளிழுக்கவேண்டும்.

படி.2 பாதகஸ்தானம்

உடம்பை முன்னுக்கு வளைத்து(கைகளை காதுடன் அணைத்தபடி) நெற்றியினால் முழங்காலைத் தொடவும். கைகள் தரையை தொட்டபடி இருக்க வேண்டும். இப்படிச் செய்யும் போது மூச்சை வெளிவிட்டபடி செய்யவேண்டும்.

**படி.3.ஏகபாதாசனம்**

(வலக்கால் பின்புறத்தில்)

இந்நிலையில் வலக்கால் பின்புறமும் இடக்காலை படத்திலுள்ளவாறு மடித்து முன்புறமும் வைத்து முழங்காலை இடக்கையில் அக்குளின் கீழ் வைத்திருக்கவேண்டும். இப்படிச் செய்யும் போது மூச்சை உள்ளிழுத்த வண்ணம் செய்யவும். முதுகை வளைத்து தலையை உயர்த்த வேண்டும்.

**படி.4.அர்த்த கம்சாசனம்**

படத்தில் உள்ளவாறு இருகால்களையும் நீட்டி கால்நுனி விரல்களாலும் உள்ளங்கால்களாலும் தரையைத் தொட்டவாறு நிற்கவும். உடம்பை வளைக்காமல் நேராக வைத்த தரையிலிருந்து 30 பாகை வரை உடலை முழுவதுமாக வெளியேற்றவும்.

படி.5.சசாங்காசனம்

படத்திலுள்ளவாறு முழங்காலுக்குக் கீழ்ப்பகுதி தரையில் பதித்தவாறு குதிக்கால்கள் புட்டத்தில் முட்டியவாறு கைகளை நீட்டி காதுகளுடன் முட்டியவாறு கைகளை நீட்டி காதுகளுடன் அணைத்தவண்ணம் நெற்றியால் நிலத்தைத் தொடல்வேண்டும். இப்பயிற்சியைச் செய்யும் போது மூச்சை உள்ளிளுக்கவும். பின்னர் இந்தநிலையில் நின்று கொண்டு சுவாசித்தல்வேண்டும்.

**படி.6.சாஷ்டாங்காசனம்**

கைகால்களை அசைக்காமல் அப்படியே மார்பை முன்தள்ளிக்கொண்டு இடுப்பை உயர்த்தியவண்ணம்(நிலத்தில் முட்டலாகாது) நாடியால் நிலத்தைத் தொடல்வேண்டும். மூச்சை வெளியே விட்டபடி செய்யவும்.

எஸ்.நதிபரன்

## HOME டிப்ஸ்

★ முட்டைக்கோஸ், பசலைக்கீரை போன்றவற்றைச் சமைக்கும் போது அது முழுவதுமாக வெந்த பிறகு (வெந்தவுடன் அளவு குறையும்) உப்பு போடவும். இதனால் உப்பு அதிகமாகாமல் தடுக்க முடியும்.

★ நல்ல வட்டமான பட்டூரா - தயாரிக்க உருண்டைகளை சிறிய பூரிகளாக இட்டு ஈரத்துணியில் சுற்றி வைக்கவும். பட்டூரா பொரிப்பதற்கு முன் இவற்றைப் பெரிய அளவில் இடுவது எளிதாக இருக்கும்.

★ மிருதுவான உப்பிய ஆம்லெட் செய்ய முட்டைக் கலவையோடு வெண்ணெய் சேர்த்து நான்ஸ்டிக் பாத்திரத்தில் முள் கரண்டியால் இறக்கவும். காற்றுப்புக வசதி செய்வதால் ஆம்லெட் லேசானதாக உப்பியதாக செய்ய முடியும்.



★ பொரிக்கும்போது எண்ணெய் காய்ந்து விடாமல் இருக்க கோலி உருண்டை அளவு புளி/வெற்றிலையை எண்ணெயில் போடவும்.

★ கோஃப்தா கறி/மட்டர் பன்னீர் செய்யும் போது கடலை மாவை லேசாக வறுத்துச் சேர்க்கவும். நல்ல ருசியாகவும் ஊட்டச்சத்து கூடுதலாக இருக்கும்.

★ வொயிட் சாஸ்(white sauce) தயாரிக்க மைதாவுக்குப் பதிலாக கோதுமை மா சேர்க்கலாம். நார்ச்சத்து அதிகம் கிடைக்கும். சுவை கூடும்.

★ அரிசி போடுவதற்கு முன்னால் கொதிக்கும் தண்ணீரில் சில துளிகள் நல்லெண்ணெய் விட்டால் சாதம் குழையாமல் பொலபொல வென்று உதிரி உதிரியான சாதம் ரெடி.

★ பிரியாணி தயாரிக்கும் பாத்திரத்தில் முதலில் பிரிஞ்சி இலை (bay leaf) ஒரு லேயர் போட்டு அதன் மீது மற்ற உணவுப் பொருட்களை போட்டால் பாத்திரத்தில் அடி பிடிக்காது.

★ உறைந்த மீனை பக்குவம் செய்வதற்கு முன் 1/2 தேக்கரண்டி உப்போடு எலுமிச்சை சாறு கலந்து அதன் மீது தடவவும். 1 மணி நேரத்திற்கு பிறகு மீனை கழுவி எடுத்து சமைக்கவும்.

★ உழுந்து வடை மிருதுவாக இருக்க அரைத்த மாவுடன் 1 மேசைக்கரண்டி தயிர்,1 சிட்டிகை பேக்கிங் பவுடர் சேர்க்கவும்.

★ கோதுமை மாவுடன் தண்ணீர் சேர்க்காமல் பால் சேர்த்துப் பிசைந்து சப்பாத்தி தயாரித்தால் மிருதுவாக, புதியதாக இருக்கும். நீண்ட தூரம் பயணத்தின் போதும் கெடாமல் இருக்கும்.

# ஏஏஏ மூவிஸ் குறும்பட விருது வழங்கும் விழா




அமைதியான ஓர் மாலைப் பொழுது. சுபகாரியங்கள் நடப்பதற்கு ஏற்ற நன்னாள். இந்நாளில் மாலைப் பொழுதில் வீரசிங்கம் மண்டபத்தில் வளர்ந்துவரும் இளம் கலைஞர்கள் பலர் ஒன்றுகூடியுள்ளார்கள். அரங்கினுள்ளே வட்டவட்டமாகப் போடப்பட்டிருக்கும் அழகிய மேசைகளைச்சுற்றி இளம் திரைப்படக் கலைஞர்கள். மேடையில் நான்கு பனைமரங்கள், அடிக்கிவைக்கப்பட்டுள்ள மட்பானைகள், சில மேடையின் மேலும் தொங்கிக்கொண்டிருந்தன. அரங்கைச்சூழ'பனைமரக்காடு' கட்டவுட்டுக்கள். யாழ்.மண் இதுவரை கண்டிராத ஓர் புதுமையான புது வகையான கொண்டாட்டத்தை இப்போது கண்டுள்ளது.

இந்திய தொலைக்காட்சிகளில் மட்டுமே திரைப்பாடல் வெளியீடுகளையும் விருது வழங்கும் விழாக்களையும் பார்த்துவந்த எமது தமிழ் சமூகம் முதல்முறையாக ஏஏஏ மூவிஸ்ஸின் 2011 ஆம் ஆண்டுக்கான குறும்படவிருது விழாவையும், பனைமரக்காடு திரைப்பட பாடல்கள் வெளியீட்டையும் நேரில் கண்டு கழித்துள்ளது. அந்தளவுக்கு இவ்விழா படுநேர்த்தியாக உள்ளூர் கலைஞர்களாலும், தொழில்நுட்பக் கலைஞர்களாலும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளது.

மாலை 5.30 க்கு சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ காரியவம்ஷவின் வருகையுடன் ஆரம்பமானது விழா. கிளிநொச்சி பாரதிவித்தியால மாணவிகள் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். வாகீசன், ஹிமாலயா நடனக்குழுவினரால் நிகழ்த்தப்பட்ட கலாசார வரவேற்பு நிகழ்வு அனைவரையும் கவர்ந்தது.

அதனைத்தொடர்ந்து ஏஏஏ மூவிஸ்ஸினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் குறுந்திரைப்படங்களுக்கான விருது வழங்கும் விழா ஆரம்பமானது. இந்நிறுவனம் இலங்கையில் திரைப்படத்துறையை ஊக்குவிக்கவேண்டும் என்ற நோக்குடன் வருடந்தோறும் குறும்படப்போட்டிகளை நடத்தி விருது வழங்கி வருகிறது. அந்த வகையில் சென்ற ஆண்டு இதே போல் ஓர் விருது வழங்கும் விழாவை யாழ்ப்பாணத்தில் நடாத்தி வெற்றிகண்டுள்ளது. இவ் நிறுவனம். சினிமாத்துறையில் ஆர்வமிக்க இளம் படைப்பாளிகள் இலங்கைத் தமிழ் மண்ணிலும் இவ்வளவு உள்ளார்களா என எண்ணி ஆச்சரியம். அந்தளவுக்கு வந்து குவிந்த குறும்படங்களின் எண்ணிக்கை 55. இதுவே இந்நிறுவனம் எதிர்பார்க்கும் நோக்கத்தில் முதல் வெற்றிப்படியாக அமைந்தது.




விழாமேடையில் அறிவிப்பாளர்கள் கலிஸீம் நிஷாகரனும் மிக சுவார்ஷயமாக விழாவை ஒழுங்கமைத்துச் சென்றார். குறும்படப்போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. ஒவ்வொரு துறைக்கான விருதும் அறிவிக்கும் போது அதற்கான தெரிவு செய்யப்பட்ட குறும்படங்களிலிருந்து காட்சிகள் மேடையில் அமைக்கப்பட்டிருந்த அகலத்திரையில் ஒளிபரப்பப்பட்டன. உண்மையில் இதனைப் பார்க்கும் போது தென்னிந்தியாவில் நடைபெறும் பிலிம்பயர் விருது விழா, விஜய் விருது விழா போன்ற விழாக்களில் கலந்து கொண்டது போன்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது. தெரிவுக்காக மூன்று குறும்படங்களின் காட்சிகள் காட்சிப்படுத்தப்பட்டு அத்துறை சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை குறிப்பிடும்போது கூடியிருந்த குறும்பட கலைஞர்கள் தொழில்நுட்பவியலாளர்களின் மனங்களில் மட்டற்ற ஓர் மகிழ்ச்சி புரையோடியதைக் காணக்கூடியதாகவிருந்தது. விருது கிடைக்கப்பெற்றவரோடு விருது கிடைக்காது தவறிப்போன கலைஞர்களும் சிறந்த தெரிவிக்குள் வந்துள்ளோமே என சந்தோஷப்பட்டார்கள். இதுவே தான் இனிவரும் காலங்களிலும் இவர்கள் ஓர் நம்பிக்கையோடு விடாமுயற்சிகளோடு இத்துறையில் மேலும் வளர ஊக்குவிக்கப்போகின்றது. சிறந்ததாக தெரிவுசெய்யப்பட்ட அனைத்து குறும்படங்களுக்குமே ஒவ்வொரு துறைக்குமாக விருதுகள் கிடைக்கப்பெற்றன. இலங்கையர்களால் தயாரிக்கப்பட்ட இக்குறும்படங்களைத் தெரிவு செய்யும் குழுவில் தென்னிந்தியாவின் பிரபல இயக்குநர்கள், சினிமா தொழில்நுட்ப கலைஞர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இவ்விழாவின் போது பனைமரக்காடு திரைப்படத்தின் பாடல்கள் வெளியீடும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தயாரிப்பாளர் சுபாசெவ்வேள் இயக்குநர் கேசவராஜன், கதாநாயகன் ஜெகதீஸ், கதாநாயகி அக்ஷரா என அப்படத்தில் பணியாற்றும் தொழில்நுட்பக்கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். தென்னிந்தியாவில் நடைபெறும் இது போன்ற விழாக்களை யாழ்ப்பாணத்திலும் செய்யமுடியுமென இங்குள்ள வளர்ந்துவரும் இளம் தொழில்நுட்பக்கலைஞர்கள் செய்து காட்டியுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

## ஒளிக் கீற்றுகள்

தொகுப்பு: அஸ்வின்











சிறந்த நடிகருக்கான விருதை சேர்சிங் றோசும் (படம் -காவோலை) சிறந்த நடிகைக்கான விருதை தர்சிகாவும் (படம் -கண்ணே என் கண்ணே) சிறந்த இசையமைப்பாளருக்கான விருதை ஜெறி ஸ்ராலினும் (படம் -தண்ணீர்) சிறந்த கதை, வசனத்திற்கான விருதை அ நிசாந்தனும் (படம் -வல்லூறு) சிறந்த இயக்கம், படம் என்பற்றுக்கான விருதை அ. ஜசிதரனும் (படம் -வல்லூறு) பெற்றுக்கொள்வதை படங்களில் காணலாம்.

(படங்கள் -தெல்லிப்பழை நிருபர்)



# பெண்களை வீட்டிலும் நாட்டிலும் மதிக்கும் ஆரோக்கியமான சமூகம் உருவாகவேண்டும்

**போரின் பின்னர் வடமாகாண பகுதியிலுள்ள பெண்கள் சமூக ரீதியாக பல பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்றனர். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதிலும் அவர்களை அரசியல் மட்டத்தில் மேம்படுத்துவதிலும் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் மகளிர் அபிவிருத்தி நிலையம் அளப்பெரும் சேவையினைச் செய்து வருகின்றது. இந்நிறுவனத்தின் பணிப்பாளரான திருமதி சரோஜா சிவசந்திரனை யாழ்ஓசைக்காக நேர்கண்ட போது....**

**கேள்வி:- நீங்கள் இவ்வாறானதொரு நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நடத்துவதன் நோக்கம் என்ன?**

***பதில் :-*** *மகளிர் அபிவிருத்தி நிலையம் 1988 இல் யாழ்ப்பாணத்தில் தொடக்கப்பட்டது. தேசிய மட்டத்தில் தனது செயற்பாடுகளை பரவலாக்கி பலம்வாய்ந்த ஓர் நிறுவனமாக இன்று இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்தை ஆரம்பித்ததன் நோக்கம் பெண்களின் சமமான உரிமைகளை நியாயத்தோடு போராடி வலியுறுத்தி வருவதற்காகவும் அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவுமே இந்நிறுவனம் சேவை நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*போரின் முன்னரான காலம், போர்க்காலம், போரின் பின்னரான காலப்பகுதி என்ற வரையறையுள் வடமாகாணத்தில் மக்களின் சமூக கட்டமைப்புக்கள் சிதைவடைந்து பெண்களின் வாழ்வாதார அடிநிலைகளில் தளம்பல் ஏற்பட்டு, குடும்பங்கள் பிரிவடைந்து, வாழ்வைத் தொலைத்துள்ளது... மீண்டும் வாழத்துடிக்கும் குடும்பங்களில், பெண்களின் அயராத ஓட்டம் இதுவரை ஓயவில்லை. ,*

*பெண்களின் உரிமை, சமவாய்ப்பு பெண்கள் உரிமை மீறல்கள், பெண்களின் அரசியல் பிரவேசம் போன்ற செயற்பாடுகள் போன்றவை நியாயப்படுத்தப்படவேண்டும். சமூகத்தில் பெண்கள் வலுவான தன்னம்பிக்கை உடைய பிரஜைகளாக சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் சமமான பங்களிப்பை செலுத்தவேண்டும் என்ற பலமான நோக்கங்களை நிலை நிறுத்தி செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் எமது நிலையத்தின் சேவைகளோடு, போரின் பின்னரான சிதைவடைந்த குடும்பங்களின் பல்வேறுபட்ட குறைநிரப்பு சேவைகளும் காலத்தின் தேவைக்கேற்ப செயற்படுத்தி வருகின்றோம்.*

**கேள்வி: - இந்நிறுவனத்தின் மூலம் பெண்கள் மத்தியில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து செல்கிறீர்கள்?**

***பதில்:*** *மகளிர் தொடர்பான பிரச்சினைகளை, நிறுவனமயப்படுத்தப்பட்ட ஓர்அமைப்பு மூலம் தெரியப்படுத்துவதன் மூலம் அப்பிரச்சினைகள் சமூகத்தால் விரைவில் உள்வாங்கப்படும். மகளிருக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை கிராமியமட்டத்தில் நடத்துதல், விழிப்புணர்வு கருத்தரங்குகளில் வீட்டு வன்முறை தொடர்பான விளக்கங்கள் மகளிர் உரிமை சம்பந்தமான சட்ட நுணுக்கங்கள், திட்டங்கள், அறிக்கைகள் பற்றிய விளக்கங்கள் போன்றவற்றோடு, கிராமிய மகளிர் குழுக்களை அமைத்து அப்பகுதிகளில் பெண்கள் மத்தியில் எழும் வன்முறை சம்பவங்களை இலவச சட்ட ஆலோசனை மூலம் மற்றும் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்வதன் மூலம் தீர்வு காணமுயற்சித்தல்,*

**நேர்கண்டவர்:- ப. அஸ்வின்**

*வன்முறைச்சட்டத்தின் கீழ் பெண்கள் எதிர்கொள்ளும் வீட்டு வன்முறை சம்பவங்களை பதிவு செய்து, வழக்கு தாக்கல் செய்தல், காணாமற்போனோர், போரில் இறந்தவர்களை மனிதஉரிமை மீறல் அடிப்படையில் பதிவு செய்தல், காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்கல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இயன்றளவு உதவிகளைப் பெற்று வாழ்வாதார உதவிகளை வழங்குதல் என்பன அடங்கும்.*

*வாழ்வாதார உதவிகளில் நலிவுற்ற குடும்பங்களுக்கு, மலசலகூடம் அமைத்து கொடுத்தல், நீர்பம்பிகள் வழங்கல், மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கல், கணவனை இழந்த பெண்களுக்கு சிறுதொழில்களை ஆரம்பிப்பதற்கு உதவிகளை வழங்கல், வீட்டு தோட்டம் செய்வதற்காக விவசாய விதைகள் வழங்குதல், ஆடு, மாடு, கோழி, வழங்கியமை, இளம் பெண்கள் வருமான ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பற்றிக் பிறண்டிங், சேலை அலங்காரம், போன்ற தொழில்களை ஊக்கப்படுத்தல் மட்டுமன்றி கல்வி கற்கும் மாணவர்கட்டு துவிச்சக்கர வண்டிகள் கற்றல் உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கி வருகின்றோம்.*

*சிறுவர் மற்றும் கர்ப்பிணி பெண்களின் போசாக்கு மேம்பாட்டிற்காக நமது நிறுவனம் தாயாரித்து வழங்கும் 'சக்தி' என்னும் போசாக்கு நிறையாகாரணிமும் எமது நிறுவனத்தின் பாரிய சேவைகளுள் அடங்கும். இவை மட்டுமன்றி பாதிக்கப்படும் பெண்களின் அவல நிலைமைகளை பத்திரிகை செய்திகள் மூலம் அவர்கள் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் வெளியிட்டு வருவதும் எமது பணிகள் ஆகும். 'நங்கை' என்னும் எமது சஞ்சிகை பெண்களுக்கு தேவையான பல அறிவுறுத்தல்களை பரவலாக்கும் சேவை வழங்கி வருகின்றது.*

**கேள்வி: - போரின் பின்னரான வாழ்வில் தமிழ் பெண்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் என்ன என்பதை நீங்கள் இனங்கண்டுள்ளீர்களா?**

***பதில்:*** *-போரின் பின்னரான காலப்பகுதி என்பது பெண்களுக்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்குமே ஓர் சவாலாக உள்ளது.*

*பெண்கள் சமூகத்தில் தனித்து விடப்பட்டவர்களாகவே உணர்கின்றனர். உதவி செய்கின்றோம் என்று அவர்களை நாடி வருபவர்கள் அவர்களுக்கு மேலும் உபத்திரபமாகவே அமைந்து விடுகின்றனர். இதனால் இன்று இளவயதுப்பெண்கள் கர்ப்பம் பதிவுகளற்ற திருமணங்கள், பிறந்த குழந்தைகளை தெருக்களில் வீசுதல்,புதைத்தல், குப்பையில் போட்டு எரித்தல் போன்ற சம்பவங்கள் என எமது சமூகத்தில் என்றுமே நடந்திராத சம்பவங்கள் இன்று நடந்துவருகின்றன. அவற்றை நாம் கேள்விப்படும் அளவிற்கு சமூகம் போய்விட்டதா? அல்லது பெண்கள் மாறிவிட்டனரா? இவை எல்லாம் சமூகத்தின் கட்டுப்பாடற்ற, கட்டவிழ்த்து விடப்பட்ட சமூக அநீதிகளாகும். தற்போது யாழில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இளம்வயது கர்ப்பமாதல் எல்லோரையும் கேள்விக்குறியாக்கும் சம்பவமாக உள்ளது. பத்திரிகைகள் மட்டுமல்ல, எமது இலவச சட்ட ஆலோசனைப்பிரிவுக்கும் வந்து சேரும் முறைப்பாடுகளில் இவ்விடயம் முதலிடத்தை வகிக்கின்றது.*

*சடுதியாக கிடைத்த சுதந்திரத்தின் பின்னணியில் வழி தடுமாறும் இளம் சமுதாயத்தினரை வழிதடுமாற வைக்கும் சக்திகளும் முனைப்போடு செயற்பட்டு வருகிறது. விடுதிகளை நடத்துவோர் பணத்திற்காக மட்டும் நடத்தாது சமூகப்பொறுப்புடனும் செயற்படுவது அவர்கள் சமூகத்திற்கு செய்யும் ஓர்வகை நன்மையாக அமையும்.*

*பெண்களை தமது காம சேஷ்டைகளுக்கு ஆளாக்க நினைப்பவர்கள் இன்று பலவிதமான முயற்சிகளை கையாளுகின்றனர். ஒன்றைத் தடுக்க முயலும் போது வேறோரு வகையில் இச் செயற்பாட்டிற்கு உருவம் கொடுக்கப்படுகின்றது. உலகமயமாதல் செயற்பாட்டில் இதுவும் ஓர் வடிவமா என்று அங்கலாய்க்க வேண்டியுள்ளது.*

**கேள்வி : - சமூகம் இன்று எதிர்நோக்கிவரும் இளம் வயது கர்ப்பம் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பிரச்சினைகளை கட்டுப்படுத்த எவ்வாறான முயற்சிகளை நீங்கள் முன்னெடுத்துள்ளீர்கள்?**

***பதில்:*** *-இக்காரணிகளை தடுத்து நிறுத்தும் வகையில் இன்று பொறுப்பாக செயற்படும்*

**(தொடர்ச்சி 30 ஆம் பக்கம்)**



# இலக்கிய இன்பம்

உலகில் உள்ள பிறப்புக்களில் ஈடு இணையற்ற பிறவி மனிதப் பிறவி. அதிலும் பெண் என்பவள் காத்திரமான இடத்தை வகிக்கிறாள். அதில் இருவிதமான பங்குகள் சிறப்பிடம் பெறுகின்றன. ஒன்று தாய் மற்றையது மனைவி. குழந்தைகளுக்குப் பாசமிகு தாயாகவும் கணவனுக்கு நல்ல மனைவியாகவும் விளங்குகின்றாள். இதனால் சமூகத்தில் பெண்ணுக்குரிய பொறுப்புகள் அதிகம். இதனால் பண்டைய தமிழிலக்கியங்கள் பெண்களின் பெருமைபற்றி சிலாகித்துரைக்கின்றன.

மனைவியே ஒருவனுக்கு நெருங்கிய உறவு. ஒரு ஆணின் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னாலும் அவனது மரணபரியந்தம் வரை மனைவியின் பங்கும் பணியும் முக்கியமானவை. கணவனது நலத்தில் அக்கறை கொண்ட அன்பின் வடிவமாக திகழ்பவள் மனைவி. மகாபாரதத்தில் சிறந்த துணை யார்? என்ற கேள்வி வருகிறது. அதற்கு தருமர் சிறந்த துணை மனைவியே என்கிறார். கணவனிடத்தில் மனைவி எப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள் என்பது பற்றி பண்டைய புலவர்கள் புகழ்வதைச் சற்றுச் சிந்திப்போம்.

கம்பராமயணத்தில் ஒரு காட்சி. இராமர் தனது தம்பி இலக்குமணனுடனும் விசுவாமித்திர முனிவருடனும் மிதிலாபுரிக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். அரச வீதியை நெருங்கியதும் கன்னி மாடத்தின் மீது தோழியருடன் இருந்த சீதை இராமன் அழகைக் கண்டு வியந்து பார்க்கிறாள். அவள் நாணம், கற்பு அறிந்து மெய் சிலிர்த்து நிற்கிறாள். அகங்குழைந்து சொக்கி இமை கொட்டாது அவன் அழகில் மயங்கி நிற்கின்றாள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் அழிந்தவளாகத் தன்னை மறந்து நிற்கிறாள்.

சீதை சிந்திக்கிறாள், என்னுடைய நாற்குணங்களும் என்னிடமிருந்து விலகிவிட்டன. இதோ! இத்தெருவில் சென்ற இவர்தான் காரணம். என் கண்வழி நுழைந்த கள்வர் இவர்தான். பார்ப்பதற்குச் சிறந்த வீரனாக திகழ்கின்றார். அன்றியும் இவருக்கு குதிரை, தேர் முதலிய வாகனங்கள் இல்லையா? தாமரை மலர் போன்ற மென்மையான பாதங்கள் பதிய வெறுங்கால்களுடன் நடந்து வருகிறாரே! அவரது அடிகள் வருந்தாதா? என்றெண்ணி கவலையுற்றாள். வருங்காலக் கணவன் இவன் தான் என்று குறிப்பறிந்து எனது கணவனின் வருத்தத்தை தனது வருத்தமாக எண்ணி ஏங்கும் பரிவு மனைவியிடத்தே தான் உண்டு என்ற கம்பனின் கற்பனை சிந்தனைக்குரியது.

'பெண் வழி நலனோடும்
பிறந்த நாணோடும்
எண்வழி நிறைவோடும் எங்
கும் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப்
போனவன்
கண்வழி நுழையுமோர் கள்
வனே கொலாம்'

என்று கம்பர் பாடுகிறார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பின்வரும் சம்பவத்தினூடாக மனைவியின் மகிமை பற்றி புகழ்ந்துரைக்கிறார்.

கண்ணபிரான் இளவயதில் யசோதை வீட்டில் வளர்ந்து வருகிறார். கோபிகைகளுக்கு அருள் புரிவதற்காக அவர்களது வீடுகளுக்குச் சென்று தயிர் திருடி உண்டு வந்தார். இறைவன் பக்தர்களுக்கு தனது அருட்கடாட்சத்தை கொடுக்கத் திருவுளம் கொண்டால் நேரடியாகக் கொடுக்கமாட்டார். பல சோதனைகளை நிகழ்த்தி மறைமுகமாகவே தனது அருட்பிரவாகத்தை நிகழ்த்துவார். இச்சம்பவமும் அப்படியே. திருமாலின் அவதாரத்தின் நோக்கமும் அது போலதான் என்பதை ஈண்டு சிந்திக்கற்பாலது.

சரி விடயத்திற்கு வருவோம். நாள் தோறும் தயிர், பால் காணமாற் போவதை அவதானித்த கோபிகைகள் யாரின் வேலையாக இருக்குமோ என நினைத்தனர். இது கண்ணனின் வேலையாகத்தான் இருக்கும் எனக்கருதி ஒரு நாள் தயிர் திருடும் வேளை கண்ணனைக் கண்டு பிடித்தனர். உடனே யசோதையிடம் சென்று முறையிட, யசோதை கண்ணனைப் பிடித்து விசாரித் தாள். அதற்கு கண்ணன் அம்மா! இவர்கள் சொல்லுவது முழுப்பொய் இத்தனை பேர் வீடுகளுக்கும் சென்று ஒரே நேரத்தில் சிறுவனாகிய நான் திருடி உண்பேனா? எனது வயிறு கொள்ளுமா? என வினாவி இவர்கள் கணவனை வஞ்சித்து அவர்களுக்காக வைத்திருந்த பாலையும் தயிரையும் இவர்கள்தான் குடித்துவிட்டு என்மீது பழியை போட்டுவிட்டனர் எனக் கூறினான். அவனது பேச்சிலும் வாத த்திலும் நியாயம் இருப்பதைப் புரிந்து கொண்டு தனது மகன் தவறிழைத்திருக்க மாட்டான் என்று கூறி கோபிகைகளை அன்னை யசோதை கண்டித்தாள். இதனால் அவமானமுற்ற கோபிகைகள் திருட்டுக் கண்ணனுக்கு பாடம் படிப்பிக்க எண்ணி அவன் வரும் வேளையில் மறைந்திருந்து கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்கு காத்திருந்தனர்.

வழக்கம் போலவே கண்ணன் அவர்கள் வீடுகள் தோறும் சென்று பாலும் தயிரையும் பருகும் வேளையில் கோபிகைகள் கையும் மெய்யுமாகப் பிடித்து திருட்டுக் கிருஷ்ணா! உன் அன்னைக்கு முன்னால் எங்களை அவமானப்படுத்தினாய் என்று ஏசியபடி முதுகில் மத்தால் அடித்தனர். இவ்வாறு மத்தினால் கோபிகைகள் அடிப்பதை பொறு க்காத கண்ணனின் மனைவியாகிய இலக்குமி கண்டு வருந்துவதாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகிறார்.

இலக்குமி கூறுகிறார் பெருமானே இப்படி வாருங்கள் உங்களுக்கு என்ன தலையெழுத்து? இப்படி இந்த பெண்களிடம் மத்தடிபடுகிறீர்களே? நான் பிறந்த இடம் பாற்கடல் எனவே எனது தாயார் வீட்டிலேயே சுகமாகப் படுத்துறங்குங்கள். கண்விழிக்கின்ற போதெல்லாம் வயிராற பாலைக்குடியுங்கள் என இலக்குமி கூறுவதாக மீனாட்சி சுந்தரனார் பின்வரும் பாடல் மூலம் விளக்குகிறார்.

'முத்த நகை விதுமுகப் பொது
வியர் கடப்பான்
முழுக்க வன் தாழ் வலித்து
மூடுங் கவாடந் திறந்து மனை
புக்குண
முனிந்தவர் பிடித்தடிக்கும்
மத்தடி பொறுத்து வரு துணை
முகிலை யுண்டுகண்
வளர்த் துறைதி என்று
வயிறுளைந் தீன்ற வொரு
பாற்கடல் குடியாக்கும்
மடமானை அஞ்சலிப்போம்'

என்கிறார்.

எஸ்.நதிபரன்

# உளர்ப் புதினம்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மிக அண்மையில் நடந்து முடிவடைந்தது. இதற்கான தயார்ப்படுத்தலில் மாணவர்களின் பெற்றோர்கள் இரு வருடங்கள் பெரும்பாடு பட்டதனை நீங்களும் பார்த்திருப்பீர்கள்.கேட்டிருப்பீர்கள் இப்பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் கூறிய கருத்துக்கள் ஏனையோருக்கும் வழிகாட்டுதல்களாக உள்ளன.

தொலைக்காட்சி பார்ப்பதில் வரையறை ஒன்று பின்பற்றப்படல் வேண்டும். குறிப்பாக இரவில் அன்றாடம் படித்தவற்றை மீளப்படிக்கவேண்டும். பெற்றோரும் சகோதரர்களும் தொலைக்காட்சி பார்ப்பதை விடுத்து கிடைக்கும் பொன்னான நேரங்களில் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவ வேண்டும்.

சூழல் பொருட்களை, சூழலில் நடப்பவற்றை அவதானிக்கும் திறன்களை பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டும். சூழல் சம்பவங்களைப் பார்த்து அதிலிருந்து விடயங்களைக் கற்றல் வேண்டும். செய்திப் பத்திரிகைகளை அன்றாடம் வாசித்து அதில் உள்ள தகவல்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றலை பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டும். செய்திகளை வாசித்து அவற்றை விளங்கிக்கொள்ளும் தன்மையால் கிரகித்தல் உருவாகும். இது பரீட்சையில் கேட்கப்படும் வினாக்களை விளங்கிக்கொண்டு சரியாக விடையளிக்க உதவும்.

பரீட்சைகள் யாவற்றிற்கும் மேலேயுள்ள விடயங்கள் பொருந்தும் நீங்களும் முயற்சி செய்து பாருங்கள்.

● சிவகாமி -

அந்தரங்கம் இங்கே
அடிக் கொருதடவை
மேடை ஏறுகிறது
இப்போதைய
சினிமாவில்

கெட்ட பழக்கங்கள்
சமுதாயத்தினை
சீரழிக்கிறது
அடைத்த
பஸ்களின் ஊடே
அநியாய
சீரழிவுகள்
தொடர்கிறது

*மருதங்கேணியூர்*
*வே.வே.அகிலேஸ்வரன்*

## "சும்மா இரு"

பழக்க வழக்கம் அத்தனையும்
பாதை மாறிப் போகிறது
பதவிகளும் பேராசை கூடி
போர்வைகளாய் வளர்கிறது
கிழக்கு இன்னும் விடியவில்லை
கொதிக்கிறது கொஞ்சம் பொறு
கோடி இலட்சம் விடு காரென்று
குமரா நீ கேட்டனையோ?
கொழுக்க நல்ல சாப்பாடு-கிளினிக்
கொப்பியிலே தெரிகிறது
கோயிலிலே 'சும்மா இரு'-என்னைக்
குழப்பாதே, நீ குழம்பாதே!
அழுத்தமாகச் சொல்கிறேன் கேள்
உன்கையே உனக்குச் சொந்தம்
அழுத கண்ணீர் தோற்பதில்லை முருகா!
எழுந்து வா தேரில் அப்போது சொல்வேன்!

*கே.எஸ்.சிவஞானராஜா,*
*கொக்குவில்*

## புதுமனிதராகிப் புவிக்குழைப்போம்

சொத்து சுகம் வீடு வாசலிழந்தவர்
செத்து நலிந்திங்கே மீண்டும் வாறார்
இத்தகையயோர்க் குதவுவதற் கலுவலர்
மெத்த விழிப்போடு இருக்க வேண்டும்

படித்தவனுக்கு (தம்மோடு) ஒரு பார்வை அந்தப்
பாமரனுக்கு ஒரு பார்வை
கடிதத்தைக் கொண்டு அலுவலகஞ் சென்றால்
கதிரையில் இல்லை ஐயா கன்ரீனிலாம்

பதவியிலுள்ளோர்க்கு அனுசரிப்பு-அந்தக்
கதிரை போனவர்க்கு கண்டதுடைப்பு
எதிர் காலம் உமக்கும் இது தானே- இதை
இன்றே உணர்ந்து செயற்படுவீர்

குட்டி ஆடுதான் கொழுத்தாலும்-அதன்
வழு வழுப்புத் தீராதது போல
பட்டங்கள் பதவிகள் வந்தாலும்- சிலர்க்கு
பண்பு வளருது இல்லை ஐயா(யோ)

இன்றையதேட்டி தான் நாளைய நைன்ரி
இன்றிதைச் சிந்தித்துச் செயற்படுவீர்
அதிகாரிகள் இவற்றை ஆழ்ந்து கவனித்தால்
பதிவாகும் உடம்பணி பாரினிலே

சேவைக்குத் தான் உங்கள் கதிரைகளே-வெறும்
சோ(ண்டணிதி)வுக்கு அல்ல என்றுணர்ந்து
மக்களின் சேவை மகேசன் சேவையென
எக்கணமும் ஏற்ற மாய் உழைப்பீர்

உவை யொன்றும் பெரிய விசயமல்ல-இந்த
ஊரே அறிந்த விடயங்கள் தான்
எது எப்படியோ எல்லாமே போச்சு-இனி
புது மனிதராகிப் புவிக்குழைப்போம்

*கவிமணி அன்னைதாஸன்*

## எப்போது மலரும்...

நெருக்கடியான நெருடல்களுடன்
ஓர் வாழ்க்கை
சமுதாயம் இவளுக்கு
சாக்கடையானதின்று
ஏனிந்த தடம்மாறியவாழ்வு
இவள் கார்கூந்தல்
கனகாம்பரம் எதிரியானதேன்
பூசு மஞ்சள் வாசமுனக்கு
மோசமானதேன்
நாவெனும் ரணங்களை
சுமந்தபடி ஓர் போராட்டம்
பெண்ணே!
உன் கண்ணீர் கொண்டு
ஓவியம் தீட்டும் இவர்கள்
கண்கள் இருந்தும்
குருடர்களே
தேவியென்று போற்றப்பட்டவள்
பாவியாகி நிற்பதேனோ
எதிர்பார்ப்புகள் அத்தனையும்
கானல் நீராக
நிதம் கண்ணீரில் தன்
கதை எழுதும்-இவள்
கையில் ஓர் மலர்மாலை
இறைவா உனக்காக...
இவள் கூந்தலுக்கு மட்டும்
ஏன் மலரவில்லை மலர்கள்
விடைதான் புரியவில்லை...

*ஜனகன் கிஷா*
*அல்வாய் வடக்கு*

## கவிதைகள் மாதிரி

நினைவைக்
கம்பளியால்-நீ
என்னை
போர்க்கும் வரை
காதல்
குளிரிலே-நான்
நடுங்கிக்
கொண்டிருந்தேன் !

மழையில்
நனையாதே !
காய்ச்சல் - என்
கவிதைகளுக்கும்
வந்துவிடும் !

விமர்சனத்திலே
... என்
மரணத்தையும்
கலந்திருந்ததால்...
என்னால்
அழக்கூட
முடியவில்லை !

என்னையும்
நினைத்துப் பார்...!
உனக்கும்
இதயம் இருப்பது
சிலவேளை
தெரியவரும்.

செருப்புக்கும்
காதலுக்கும்
ஒற்றுமை இருக்கிறது
!
தேய்ந்து
போவதாலா...?...
மாற்றிக்
கொள்வதாலுமே....!

ஒரு தரம்
புன்னகைத்ததற்கே
எழுதிக்கிழிக்கும்
நன்றிக்
கடிதங்கள்
ஏராளம்...

என்னையே
கண்டு கொள்ளும்
கண்ணாடியாய்-நீ
இருந்தாய்....
இருக்கிறாய்...

என் சாயலில்
யாரையாவது
பார்த்தால்...
அவ்வப்போது
சிலுவைப் பாடுகளை
நானும்
அனுபவிப்பேன்...

கடந்துபோன
பின்பு
தொங்கவிடப்பட்ட
விளம்பரப்
பலகையாய்....
தனித்துப்
போகிறேன் !

உன்காய்....
வாங்கிய
பட்டுப்புடவைக்குள்
உமிழ்நீரும்
கண்ணீரும்
இரட்டைக்
குழந்தைகளாய் !



நெடுந்தீவு
முகிலன்

# இளைஞர்களின் இணைவை வலியுறுத்திய அகில இலங்கை சைவ மாநாடு 2011

சைவமும் தமிழும் வளர்க்கும் உயர் நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் சைவபரிபாலன சபையானது சைவ தமிழ் சமுதாயத்தின் தேவைகருதி அகில இலங்கைச் சைவமாநாடு 2011 நிகழ்வை நீராவியடி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆவணித் திங்கள் வெள்ளி (5) சனி (6) ஞாயிறு(7) தினங்களில்

''சைவ சமயமே சமயம் சமயாதீதப் பரம் பொருளை கைவந்திடவே மன்னுள் வெளிக்காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப் பொய் வந்துழலுஞ் சமயநெறிபுகுத வேண்டா முத்தி தரு தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர்வாருஞ் செகத்தீரே''என்ற சிந்தனை பொருளில் சிறப்புற நடந்தேறியது.




சைவசமயத்தை வளர்த்தலும் கல்வியறிவும் ஒழுக்கமும் உடைய பெரியோர்களைக் கொண்டு சைவ சமய விருத்தி கருதிப் பிரச்சினைகளைச் செய்தல் வேண்டும் எனும் சைவபரிபாலன சபையின் நோக்கம் கருதி தலைவர் சிவநெறிப்புலவர் த. சண்முகலிங்கத்தின் வழிநடத்தலில் சைவ மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்றுள்ளது. நாவலர் பெருமானின் சிந்தனைகளுக்கு உயிரூட்டும் நிறுவனமாக விளங்கும் சைவபரிபாலன சபையின் காலந்தோறும் செயற்படுத்தும் பணிகளானது சமயத்தின் உயர் வளர்ச்சி நிலைக்கும் அவற்றின் பேணுகைக்குமான உயிர்ப்பு மையங்களாக விளங்குகின்றது. காலந்தோறும் சைவத்தமிழ் சமூகத்தினை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி வழிப்படுத்துகின்ற பணியினை செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

இவற்றினுடைய தொடர்நிலை இயக்கமாக நீண்ட தசாப்தங்களின் பின் அகில இலங்கைச் சைவமாநாட்டினை ஒழுங்கு செய்து இந்திய இலங்கை அறிஞர்களின் சங்கமிப்பினூடாக சிறந்ததோர் செயற்பாட்டினை ஆற்றியுள்ளது.

மூன்று தினங்களாக நடைபெற்ற நிகழ்வானது பல்வேறு அரிய கருத்துக்களினையும் சிந்தனைகளையும் எமக்கு வழங்கிச் சென்றுள்ளது.

முதல் நாள் அரங்கானது மாலை அரங்காக இந்திய நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் நல்லூர் சா. சரவணன் தலைமையில் ஆரம்பமாகியது. இந்நிகழ்விற்குரிய திருமுறை ஓதலினை அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகமும் பண்ணிசையினை ஆதீன திருமுறைத் தோன்றல் தேவார இசைமணி பண்ணிசைச் செல்வர் இராசையா திருஞானசம்பந்தனும் வரவேற்புரையினை சைவபரிபாலன சபையினுடைய சமயப்பிரசார தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும் அருளுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தர் பரமசாரிய சுவாமிகளும் வழங்கினார்கள். சிறப்பு நிகழ்வாக தலைமையுரையினை ''அன்பே சிவமயம் '' எனும் பொருளில் சா. சரவணபவன் நிகழ்த்தினார்.

இரண்டாம் நாள் நிகழ்வானது காலை மாலை நிகழ்வுகளாக இடம்பெற்றது. காலை நிகழ்விற்கான தலைமையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் ஏற்றுவழிப்படுத்தினார். அன்றையதினம் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய குரு பூசைதினமாகையால் குருபூசை நிகழ்வுகளைத் தொடர்ந்து திருமுறையினை அகில இலங்கை திருமுறை மன்றத்தைச் சேர்ந்த சி.கிருஸ்ணமூர்த்தியும் வரவேற்புரையை சபை உறுப்பினர் இராசையா குகதாசனும் நிகழ்த்தினார்.

மகளிர் கருத்தரங்காக நடைபெற்ற நிகழ்வில் சமூக வாழ்வியலில் சைவமும் பெண்மையும் எனும் தலைப்பில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் மனோன்மணி சண்முகதாஸும், நாளாந்த வாழ்வியலில் சைவமும் பெண்மையும் எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகமும், கல்வி வாழ்வியலில் சைவமும் பெண்மையும் எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் சுகந்தினி ஸ்ரீ முரளிதரனும் நிகழ்த்தினார்கள். சிறப்புரையினை சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்று வாய்மை எனும் தலைப்பில் முனைவர் நல்லூர் சா. சரவணன் அவர்கள் அரிய சிந்தனைக் கருத்துகளுடன் உரையை நிகழ்த்தினார்.

மாலை அரங்கானது சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. திருமுறையினை அகில இலங்கைத் திருமுறை மன்றத்தைச் சேர்ந்த செ. தவராசா ஓதினார். செந்தமிழ் பாடு எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் உரையைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சிறப்புரையினை முனைவர் நல்லூர் சா. சரவணன் நிகழ்த்தினார்.

மூன்றாம் நாள் நிகழ்வின் கலை அரங்கானது பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது. வரவேற்புரையினை சைவபரிபாலன சபை நிர்வாக உறுப்பினர் சைவப்புலவர் கா.கமலநாதன் நிகழ்த்தினார். சைவ நெறிகாட்டும் வாழ்வியல் எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் எஸ். முகுந்தன் ''உடல் உள மேம்பாட்டுக்கு'' எனும் தலைப்பிலும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மு. கௌரிநாதன் ஆன்ம ஈடேற்றத்துக்கு எனும் தலைப்பில் சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு. பாலசண்முகன் மனித நேயத்திற்கு எனும் தலைப்பிலும் உரையாற்றினார்கள். சிறப்புரையாக முனைவர் நல்லூர் சா. சரவணன் ''தமை உடையதன் உணர்வார்'' எனும் தலைப்பில் சிறப்புரையினை நிகழ்த்தினார்.

மாலை நேர அரங்கானது சைவபரிபாலன சபைத்தலைவர் த. சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ''சைவமும் நாமும்'' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் சைவசித்தாந்த மேம்பாட்டிற்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு எனும் தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

சிறப்புரையினை சா. சரவணன் ''பொய் காட்டா மெய்'' தலைப்பில் சிறப்புரையாற்றினார். சைவமாநாட்டு நிகழ்விற்கான நன்றியுரையை சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலர் பொ. கமலநாதன் நிகழ்த்தினார்.

அகில இலங்கைச் சைவமாநாடானது சமூகத்தின் தேவையுணர்ந்து நடத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் நல்லூர் சா. சரவணனின் சித்தாந்த சிந்தனைக்கருத்துக்களாக சைவ மாநாட்டில் கலந்து கொண்டோருக்கு பயன்மிக்கதாகவும் சிந்தனையைத்தூண்டுவதாகவும் இந்தியப் பேராசிரியருடைய தரிசனங்களும் அறிமுகமும் கிடைத்தது. இதனூடாக சைவசித்தாந்த துறைசார் அறிஞருடைய உறவு நிலையானது இச் சைவ மாநாட்டினூடாக பலருக்குகிட்டியமை சிறந்த இறையியல் பேறாக நாம் கருதுகின்றோம்.

இச் சைவ மாநாடானது பயனுள்ள வகையிலும் சைவசமயம் சார் கருத்துக்களையும் உயர்பெறுமானங்களையும் வாழ்வியலிற் கடைப்பிடிக்கவேண்டிய நோக்கங்களையும் சைவவாழ்வின் முழுமைப்பயனையும் அதன் நோக்குநிலையையும் எம்மிடையே சிந்திக்க தூண்டியுள்ளது. இம்மாநாட்டினூடாக ஓங்கி ஒலித்த குரலாக இளைஞர்களின் பங்களிப்பு எதிர்கால எமது சமய வாழ்வியலிற்கும் நிலைபேற்றுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததும் அவசியமானதுமாகும் எனும் சிந்தனையானது மாநாட்டில் கலந்து கொண்டோரால் முன்வைக்கப்பட்டது. இளைஞர்களின் இணைவையும் சமயம் மீது கொண்ட பற்றுதலையும் இவர்களூடாக வளர்த்தெடுக்க வேண்டும் எனும் சிந்தனைச் செயற்பாட்டை வலியுறுத்திய மாநாட்டு நிகழ்வாக அகில இலங்கைச் சைவ மாநாடு விளங்கியமை குறிப்பிடத்தக்க விடயமாகின்றது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட அகில இலங்கைச் சைவ மாநாடானது சைவத்தமிழ்ச் சமுதாயத்தின் மீது கொண்ட பற்றுறுதியின் காரணமாகவும் காலத்தின் தேவைகருதியும் சைவசமய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமெனும் நோக்குடனும் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்டுள்ளமை அவர்களின் பணிச்சிறப்பின் மீது கொண்ட பற்றுறுதியையும் உயர்வையும் எமக்கு காட்டிநிற்கின்றது எனலாம்.

**சைவப்புலவர் எஸ்.ரி. குமரன்.**



# ஆயிரம் பேரை பலி வாங்கும் ஆவிகள்

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்து உள்ளது திருமூர்த்தி அணை. வனங்களால் சூழப்பட்டு கண்ணுக்கு அழகாக காட்சி அளிக்கும் அணையில் 'ஆபத்தும்' இருப்பதாக சொல்லப்படுகிறது. வனங்களுக்கு இடையே பஞ்சலிங்க அருவி இருக்கிறது. இது ஓடையாக வழிந்தோடி அணையில் சங்கமிக்கிறது. பஞ்சலிங்க அருவியிலும் அணை கரையிலும் மக்கள் குளிப்பது வழக்கம். இங்கு குளிப்பவர்கள் நீரில் மூழ்கி சாகும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதாகவும் இதற்கு நிராசையுடன் இறந்தவர்களின் ஆவிதான் காரணம் என்றும் அப்பகுதி மக்கள் அச்சத்தோடு சொல்கிறார்கள்.

அணை கட்டி 53 ஆண்டுகள் ஆகிறது. இதுவரை அருவியிலும் அணையிலும் மூழ்கி மூச்சு திணறி பலியானவர்கள் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டிவிட்டது. 'அணையில் உள்ள யானைகஜம் காளியம்மன் கோயில் பரையங்காடு பள்ளம் ஆகிய இடங்களில் குளிப்பவர்கள் அநியாயமாக பலியாகின்றனர். இங்கு நீச்சல் தெரியாதவர்கள் மட்டுமல்ல நன்றாக நீச்சல் தெரிந்தவர்கள்கூட இறக்கின்றனர். இதற்கு கெட்ட ஆவிகளின் நடமாட்டம்தான் காரணம். இந்த ஆவிகள்தான் அணையில் குளிப்பவர்களின் உயிரை பலி வாங்குகின்றன? என்று திகிலுடன் கூறுகின்றனர் இப்பகுதி மக்கள்.

அணை கட்டுவதற்கு முன்பு மலையில் இருந்து ஓடி வரும் நீர் பாசனத்துக்கு நேரடியாக பயன்படுத்தப்பட்டதாகவும் பாலாற்றை தடுத்து அணை கட்டியதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிலர் உயிரை விட்டதாகவும் அவர்களின் ஆவிதான் நிராசையுடன் அணையை சுற்றி வருவதாகவும் கூறப்படுகிறது. மேலும் சிலரோ 'அணையில் மூழ்கி பலியாவோர் பெரும்பாலும் வெளியூர்களை சேர்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு உறவினர்கள் தங்கள் பகுதியிலேயே திதி கொடுக்கின்றனர். இதனால் மனம் சாந்தி அடையாமல் ஆவிகள் அணையிலேயே திரிந்து பலரை பலி வாங்குகின்றன? என்றும் கூறுகின்றனர். 'குளித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று தண்ணீருக்குள் யாரோ இழுத்தது போன்று மூழ்குகின்றனர். உயிருக்கு போராடுபவரை காப்பாற்ற செல்பவரும் பலியாகி விடுகிறார். சடலங்களையும் அவ்வளவு எளிதில் கண்டுபிடித்து விட முடியாது?? என்று சொல்லும் மக்களின் பேச்சில் பயத்துக்கு குறைவில்லை.

அணையில் மேல் உள்ள பஞ்சலிங்க அருவியிலும் இதே ஆவி கதைகள் உலா வருகின்றன. இதற்கு காரணம் இங்கும் அடிக்கடி பலிகள் நேர்வதுதான். பரிகார பு??ஜைகள் செய்து ஆவிகளை சாந்தம் அடைய செய்தால் தான் இறப்புகளை தவிர்க்க முடியும் என்று சிலர் சொல்கின்றனர். அதே போல் பஞ்சலிங்க அருவியில் ஏற்படும் பலி சம்பவங்களுக்கு காரணம் அருவியில் திடீரென்று பெருக்கெடுக்கும் வெள்ளம். குளிக்கும்போது சாதாரணமாக கொட்டும் நீர் திடீரென்று பெருக்கெடுக்கும்போது அருவியில் குளிப்பவர்கள் தாங்க முடியாமல் தப்பி விடுகிறார்கள். அருவிக்கு செல்லும் வழியில் உள்ள ஓடைகளில் ஆங்காங்கு குளிப்பவர்கள்தான் வெள்ளத்தில் தப்பிக்க வழியில்லாமல் அடித்துச்செல்லப்படுகின்றனர். அங்குள்ள ஒட்டப்பாறை ஏழுமுக்கு மாமரத்து கஜம் ஆகிய இடங்களில் உள்ள பொந்துகளில் சிக்கி உயிரை விடுகின்றனர்.


அணையில் குளிக்கவும் அருவிக்கு செல்லும் ஓடை வழித்தடங்களில் குளிப்பதையும் வனத்துறை பொதுப்பணித்துறை அறநிலையத்துறை கடுமையாக தடுத்து நிறுத்தினால் உயிர்ப்பலியாவது நிற்கும்.

அது வரை ஆவி பலி வாங்கல் என்று கூறுவது மர்மமாக தான் இருக்கும் என்றும் சிலர் கூறுகின்றனர். 'பேயும் இல்லை. பிசாசும் இல்லை. அணையில் ஆங்காங்கே பெரிய பள்ளங்கள் உள்ளன. இந்த பள்ளங்களில் சிக்குபவர்கள் தண்ணீரில் மூழ்கி இறக்கிறார்கள் என்று வேறு சிலர் சொல்கிறார்கள். இருப்பினும் ஆவி பயம் மக்களை விட்டு இன்னும் அகவில்லை.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்


## (02.09.11 முதல் 08.09.11 வரை)

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### ★ மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு சிறு சிறு சுகயீனங்கள் ஏற்படும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் அமையும். சிறு மனச் சஞ்சலங்கள். குடும்ப உறவினர் மூலமாக தொல்லைகள் என்பன ஏற்படும் நிலையுண்டு. பணவரவு ஓரளவிற்கு அனுகூலமானதாக அமையும். கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு சுப பலன் உண்டு. மானவர்கள் வெற்றி பெறலாம்.



### ★ இடபம்

இடபராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். தொழில் நிலைகளில் முன்னேற்றம் இருக்கும். முயற்சிகளில் சற்று இழுபறி தாமத நிலை அமையும். சகோதரர் வழியில் சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்படும். பணவரவு ஓரளவிற்கு அனுகூலமாய் அமையும். நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலன் ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.




### ★ மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன் ஏற்படும். தொழில் நிலையில் மேன்மை ஏற்படும் குடும்பத்தில் சிறப்பான அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். எடுக்கின்ற முயச்சியில் அனுகூலமான வெற்றி ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு வெற்றியுண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.




### ★ கடகம்

கடகராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன் அமையும். எடுக்கும் முயற்சியில் அனுகூலமான வெற்றி அமையும். தொழில் நிலையில் மேன்மையான பலாபலன் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையே அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய பலன்களும் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.




### ★ சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திம்மான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சியில் நிதானம் தேவை. தேவைற்ற வீண் அலைச்சல் நிலைகள் இருக்கும். பணவரவு சற்று சுமாரான மத்திமமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். உடல் நிலை சுகவீனம், மருத்துவ செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.



### ★ கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சியில் சற்று மத்திமான பலனே அமையும். தொழில் நிலைகளில் நிதானமான செயற்பாடு மேற் கொள்ள வேண்டும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். கடன் நிலைகளில் சற்று இழுபறி தாமத நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு முயற்சி அமையும்.



### ★ துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலாபலன்கள் அமையும் நிலை உண்டு. தொழில் நிலையில் முன்னேற்றகரமான பலன்கள் ஏற்படும் பலனுண்டு. குடும்பத்தில் அனுகூலமான நற்பலாபலன்கள் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்தி கரமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### ★ விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலா பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் அனுகூலமான பலாபலன்கள் அமையும். குடும்பத்தில் சிறப்பான நற்பலாபலன்கள் அமைகின்ற நிலையுண்டு. பணவரவு ஓரளவிற்கு அனுகூலமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### ★ தனுசு

தனுசுராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான நற்பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமைகின்ற பலனுண்டு. குடும்பத்தில் அனுகூலமான திருப்திகரமான பலன் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### ★ மகரம்

மகரராசி அன்பர்களுக்கு மத்திம மான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான பலன்களுக்கு இடமில்லை. தொழில் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் தொடரும் பலனுண்டு. பணவரவு சுமாரான மத்திமமான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் மத்திமமான இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திமமான பலனே ஏற்படும். மாணவர்கட்கு நன்மையுண்டு.



### ★ கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூல பலனுண்டு. தொழில் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் நிலை இருக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலா பலன்கள் அமையும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும். எடுக்கின்ற முயற்ச்சிகளில் ஓரளவிற்கு வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் சற்று சுமாரான பலனே அமையும். பெண்களுக்கு அனுகூல முண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### ★ மீனம்

மீனராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான பலன்களே அமையும். குடும்பத்தில் மத்திமமான பலன்களே அமையும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும். எடுக்கும் முயற்சியில் நிதானமான செயற்பாடுகளுக்கும் தொழில் நிலைகளில் இழுபறி தாமதங்கள் இருக்கும். கடன் நிலைகளில் மந்த நிலைகள் தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.

# தேசிய கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலைகள்

அச்சுவேலி,

தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் கபடிப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் வடக்கு மாகாண பாடசாலைகளின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியமட்டத்தில் கபடிப்போட்டிகள் இந்த மாதம் நடுப்பகுதியில் ஹொரணை தக்சிலா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள வடக்குமாகாண பாடசாலைகளின் விபரம் வருமாறு.

ஆண்கள் பிரிவில்

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி


வடமராட்சி வேலாயுதம் மகாவித்தியாலம், முல்லைத்தீவு மகாவித்தியாலம்

பெண்கள் பிரிவில்

இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலம்

வவுனியா தெற்கு கணேஸ்வரா மகாவித்தியாலயம்




# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் ம.வி.கழகம் சம்பியன்

அரியாலை,

புத்தூர் கிழக்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகமானது அமரர் சின்னவன் சின்னத்தம்பி ஞாபகர்த்தமாக நடத்திய மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

புத்தூர் கிழக்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் அமரர் சின்னவன் சின்னத்தம்பி ஞாபகர்த்மாக யாழ்.மாவட்ட ரீதியல் நடத்திய மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வாதரவத்தை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பிரதீப் குமாரா கலந்து சிறப்பித்தனர்.

இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. போட்டி தொடங்கியதில் இருந்து ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழகத்தினர் அதிரடியாக விளையாடி மத்திய விளையாட்டுக் கழகத்தினரை நிலை குழையச் செய்தனர் முதல் இரண்டு சுற்றுக்களையும் இலகுவாக 25:21, 25:16 என இலகுவாக வெற்றி கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற மூன்று சுற்றுக்களையும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமானது தனது சிறப்பான விளையாட்டு நுட்பத்தின் மூலம் 25:15, 25:17, 15:11 என்ற புள்ளிகளில் வெற்றி கொண்டு சம்பியனாகியது. சிறந்த வீரராக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியின் கமலக்குமரன் தெரிவு செய்யப் பட்டார்.



கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக் கழகமானது தனது 56ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்திய யாழ். மாவட்ட ரீதியிலான மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினருக்கான பரிசளிப்பு விழாவில் வெற்றி பெற்ற அணித் தலைவர் வெற்றிக் கிண்ணத்தினை தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர். எஸ்.பற்குணராஜாவிடமிருந்து பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

(படம் -அரியாலை நிருபர்)

# 20-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு பற்றீசியன் அணி தெரிவானது

அரியாலை,

ஜெலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் பி.எஸ்.குமாரசாமி ஞாபகர்த்த 20 -20 கிரிக்கட் சுற்றுப் போட்டியின் கால் இறுதி யாட்டம் ஒன்றில் பற்றீசியன் விளையாட் டுக் கழகம் ஓல்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணியினை 64 ஓட்டங்களினால் வெற்றி கொண்டது.

கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ் இந்துக் கல்லூரி மைதானத் தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணியானது 20 ஓவர்களில் 9 விக்கட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. பற் றீசியன் அணி சார்பாக எரிக் பிரதாபன் 56 ஓட்டங்களையும் கிளின்றன் 20 ஓட்டங் களையும் சஜீந்திரன் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஓல்கோல்ஸ் அணியின் ஜெயசுதன் 4 ஓவர் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 02 விக்கட் டினையும் குகன் 03 ஓவர் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையம் சிறிகுகன் மற்றும் திலீபன் ஆகியோர் தலா இரண்டு விக்கட்டுக்களையும் வீழ்த் தினர்.

146 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என களமிறங்கிய ஓல்கோல்ஸ் விளை யாட்டுக்கழகமானது 86 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியினை தழுவிக்கொண்டது. இவ் வணி சார்பாக அதிகபட்ச ஓட்டமாக குகன் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் சுஜீவன் 03 ஓவர் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 04 விக்கட்டினையும் அஜித் டார்வின் 03 ஓவர் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 03 விக்கட்டினையும் வீழ்தினார்கள். இதன் மூலம் பற்றீசியன் அணியானது அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

---

*(25 ஆம் பக்கம் தொடர்ச்சி )*

*அறிவாளிகள் சமூக அமைப்புக்கள் யாவும் அயராது பாடுபட்டு*

*தம்மாலான சேவைகளை வழங்கி வருவது பாராட்டத்தக்கதாகும். பாடசாலைகளில் கட்டிளம் பருவத்தினரை இலக்காக கொண்டு வழிகாட்டல் கருத்தரங்குகளை மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தி வருகின்றது. இக்கருத்தரங்குகளை வடமாகாணத்தில் 104 பாடசாலைகளில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். ஏற்கனவே 12 பாடசாலைகளில் இவ்வாறான செயலமர்வுககளை நடத்தி முடிந்துள்ளோம். வளவாளர்களாக பிரபலமான வைத்திய அதிகாரிகள், ஊடகத்துறை சாந்தோர், சட்டத்தரணிகள் பங்கு கொண்டு இளம்பராயத்தினரின் தற்போதைய பிரச்சினைகளுக்கு அவர்கள் ஏன் ணிகம் கொடுக்கின்றனர் என்பதையும், அதனால் ஏற்படும் விளைவுக்களையும் தெளிவுபடுத்தி வருகின்றனர். இக்கருத்தரங்குகள் மூலம் மாணவர்கள் மத்தியில் குழுக்கள் அமைத்து, பாடசாலைகளில் முறையீட்டுப் பெட்டி ஒன்றினையும் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றோம்.*

*இதைதவிர பெற்றோருக்கும் அவர்கள் பொறுப்புக்களை வலியுறுத்தி செயலமர்வுகளை நடத்தி வருகின்றோம்.*

*போரின் பின் இளம் பெண்கள் பல வகையில் பாதிப்படைந்துள்ளனர். பெற்றோரை இழந்த பெண்கள் இன்னொருவரின் பராமரிப்பில் உள்ளவர் போரில் பங்கு பற்றியோர் என்று இன்னோர் வகையினர் தடுப்பு முகாம்களில் விசாரணைகளின் பின் விடுவிக்கப்பட்ட இளம் பெண்கள், வேலைக்காக தென் மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, வன்முறைக்குள்ளாகி மீண்டும் விடுபட்ட பெண்கள்.*

*மீள்குடியேற்றம் என்றும் தற்காலிக குடிசைகளில், தகுந்த பாதுகாப்பற்ற சூழலில், இராணுவ முகாம்கள் சூழவாழ்ந்து வரும் பெண்கள், இளம் பெண்கள் கணவனை, ஆண்பிள்ளைகளை இழந்து வருமானம் இன்றி தனித்து வாழும் பெண்கள்*

*இப்படியாக வாழ்ந்து வரும் பெண்கள் மத்தியில் - பாதுகாப்பு என்பது மீண்டும் ஒரு சவாலாக உள்ளது. தனித்து இருக்கும் பெண்களுக்கு இன்று வீடும் பாதுகாப்பு இல்லை சமூகமும் பாதுகாப்பு இல்லை*

**கேள்வி: - சமூகம் எப்படியான விழிப்புணர்வை கொண்டிருக்கவேண்டும் மென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?**

***பதில்:*** *-சமூகத்தில் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வோடு செயற்படும் போது இளம்பெண்கள் நெருக்கீடுகளின்றி சமூகத்தில் நிதானமாக வாழமுடியும். வீட்டில் தனித்திருந்தால் பிரச்சினை, பஸ்ஸில் சென்றால் பிரச்சினை, வேலைத்தளத்தில் பிரச்சினை, நேரம்கடந்தால் பிரச்சினை இவையெல்லாம் ஏன் நடக்கின்றது என்பதற்கு, சமூகம்தான் காரணம் என்பதை எமது சமூகம் ஏற்க மறுக்கின்றதே...*

*யாழ் பிரதேசத்தில் 40,000 விதவைகள் உள்ளனர். இவர்களுக்காக சங்கங்கள் உள்ளன. ஆனால் அவர்கள் வாழ்வில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை. இளம்பெண்கள் எத்தனை பேர் மறுமணத்திற்காக காத்திருக்கின்றனர். ஆனால்இவர்களை ஏற்றுக்கொள்ள யாருமே முன்வருவதில்லை. வெளிநாடுகளில் வசிப்பவர்கள் கூட சமூக மாற்றத்திற்குட்படவில்லை என்பது வேதனைக்குரியது.*

*சமூகத்தின் ஒவ்வொரு தளத்திலும், வாழும் ஒவ்வொருவரும் பெண்களை, சிறுமிகளை மதித்து அவர்களின் வாழ்வோடு விளையாடாது தம்மை நேர்மையாக பொறுப்பான சமூக கட்டுப்பாடு உள்ளவர்களாக மாற்றிக் கொள்ளும் போது சமூகத்தில் நிச்சயமாக பெண்கள் பாதுகாக்கப்படுவர். பெண்களை வீட்டிலும் நாட்டிலும் மதிக்கும் சமூகமே ஆரோக்கியமான ஓர் சமூகம் என்பதை யாரும் மறந்து விடலாகாது.*

# இன்னும் சில ஆண்டுகளில் டெஸ்ட் கிரிக்கெட் ...?



விளையாட்டு உலகில் தற்போது ஆதிக்கம் செலுத்துகின்ற விளையாட்டுக்களில் ஒன்றாக கிரிக்கெட் இருந்து வருகின்றமை அனைவரும் அறிந்ததொரு உண்மை. மேல்தர வர்க்கத்தினரால் மட்டுமே அதாவது பணக்கார வர்க்கத்தினருக்கு மட்டுமே உரிய விளையாட்டாக ஆரம்பத்தில் இருந்து வந்த இவ்விளையாட்டு இப்போது அதன் கட்டுக்களிலிருந்த அவிழ்ந்து எங்கு பார்த்தாலும் அதன் ஆதிக்கத்துக்கு குறைவேயில்லை.

அந்தளவிற்கு பெரு வளர்ச்சி கண்டுள்ள கிரிக்கெட்டில் தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டின் எதிர் காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. இன்னும் அடுத்த சில ஆண்டுகளில் டெஸ்ட் கிரிக்கெட்டின் முக்கியத்துவம் ஏன் அவ்வாறானதொரு விளையாட்டு இல்லாமல் போவதற்கான அபாயமே ஏற்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் 2000 ஆவது டெஸ்ட் போட்டி என்ற பெரும் மைல்கல்லை கண்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட் தற்போது ஆட்டம் கண்டுள்ளமை அதன் எதிர்காலம் குறித்த சந்தேகத்தினையே உண்டுபண்ணியுள்ளது.

கிரிக்கெட் உலகில் பெரும் எதிர் பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4 போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடர் எதிர் பாராத பல மாற்றங்களுடன் முடிவடைந்துள்ளது. இதுவே முடிவாக அமையும் என்ற தீர்மானங்களை பொய்யாக்கும் வகையில் இத்தொடர் நிறைவடைந்துள்ளது.

சுமார் 20 மாதங்களாக டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்த இந்திய அணி இங்கிலாந்து மண்ணில் தொடரின் 4 போட்டிகளையும் மிக மோசமாக பறிகொடுத்து தொடரை 0-4 என இழந்ததுடன் முதலிடத்தையும் அவ்வணியிடம் தாரைவார்த்து தரப்படுத்தலில் 3 ஆவது இடத்துக்கு சரிந்தது.

இது கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்துக்கு பெருமையும் இந்திய அணிக்கு காயத்தையும் ஏற்படுத்தியிருக்கின்ற வேளையில் மறு பக்கத்தில் எதிர் கால டெஸ்ட் கிரிக்கெட் குறித்த கேள்வியையும் ஆபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது இந்திய அணியைப் பின்னியே கிரிக்கெட் உலகு நகர்ந்து கொண்டிருக்கின்றது. கிரிக்கெட் உலகில் பணக்கார அணியாகவும் அதிகம் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற அணியாகவும் இவ்வணியே உள்ளது. இந்நிலையில் அணியின் இப்போதைய வீழ்ச்சிப்போக்கானது இன்னும் சில ஆண்டுகளில் டெஸ்ட்டின் முக்கியத்துவத்தினை குறைத்து விடும் என்ற அளவிற்கு உள்ளது.

முன்னர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் போது மைதானம் நிறைந்து வழியும் அளவிற்கு ரசிகர்களின் கூட்டம் காணப்படும். ஆனால் தற்போது இருபது-20 மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளின் ஆதிக்கத்தினால் டெஸ்ட் போட்டிகளின் போது மைதானத்தில் ஆங்காங்கே ரசிகர்கள் இருக்கின்ற அளவிற்கு வந்து விட்டது. உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் இந்திய- மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது இதனை நன்கு அவதானிக்க முடிந்தது.

இதேவேளை இந்திய அணியின் போட்டிகளின் போது விளம்பரதார்களிடையேயும் போட்டி அதிகரித்து காணப்படும். இந்திய அணி எந்த நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடினாலும் அப்போட்டியினை ஒளிபரப்பும் உரிமையைப்பெறுவதற்கு தொலைக்காட்சி நிறுவனங்கள் சில போட்டி போடுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் தற்போது இந்திய அணியின் இந்த வீழ்ச்சியானது விளம்பர உலகிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதாவது இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் பிரகாசிக்கத் தவறுகின்றமையினால் போட்டியைப் பார்க்கின்ற ரசிகர்களின் அளவு குறைவடையும். இதனால் விளம்பரங்களும் கைநழுவிப்போகும்.

இதனிடையே இந்திய கிரிக்கெட் அணியில் தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டுக்குரிய வீரர்கள் குறைவடைந்தே செல்கின்றனர். அணியில் அதிகமானோர் இந்த நீண்ட போட்டியை விரும்பாது இருபது-20 கிரிக்கெட் போட்டி மீதே அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் இப்போட்டிகளில் இவர்களது கவனம் குறைந்து கொண்டு செல்கின்றது.

இதனை இவ்வருடம் நடைபெற்ற 4 ஆவது ஐ.பி.எல். இருபது-20 போட்டியில் நன்கு அவதானிக்க முடிந்தது. அத் தொடரின் போது இந்திய வீரர்கள் சில உபாதைக்கு உள்ளாகினர். ஆயினும் பணம் கொழிக்கும் அப்போட்டியினை கைவிடுவதற்கு விரும்பாத அவ்வீரர்கள் காயத்தினையும் பொருட்படுத்தாது அத்தொடரில் முழுமையாக விளையாடி முடித்தனர்.

தவிர, வெளிநாட்டு வீரர்களும் இந்த அதிரடி மிகுந்த இருபது-20 போட்டி மிதே அதிக ஈடுபாட்டினைக் காட்டி வருகின்றனர். இத்தொடரினால் பல வீரர்கள் தமது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொண்டுள்ளனர். குறிப்பாக இம்முறை நடைபெற்ற தொடரின் போது இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தனது டெஸ்ட் கிரிக்கெட்டின் ஓய்வினை அறிவித்தார்.

தொடரின் தனது அபாரமான பந்து வீச்சினால் அதிக விக்கெட்டுக்களை சாய்த்து பந்து வீச்சாளர்கள் வரிசையில் முதலிடத்தினைப்பெற்ற மலிங்க தொடரின் பாதியிலே இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரில் விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டதனால் தனது டெஸ்ட் ஓய்வினை அறிவித்தார்.

இந்நிலையில் டெஸ்ட் போட்டிமீது இந்திய அணியின் ஆதிக்கம் குறைந்து வருவது ஒட்டுமொத்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்துவிடும் என்பது மறுப்பதுக்கில்லை.

இதனிடையே சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) போட்டி அட்டவணையில் டெஸ்ட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் குறைந்து வருகின்றது. ஒரு நாள் மற்றும் இருபது-20 போட்டிகளுக்கே அப்பட்டியல் நீண்டு காணப்படுகின்றது. இதுவும் டெஸ்ட் கிரிக்கெட்டை மறைத்து விடுகின்றனவாகவே அமைந்து விடுகின்றது.

எனவே, இவ்வாறான நிலைகள் தற்போது கிரிக்கெட் உலகில் தொடருமானால் இன்னும் சில ஆண்டுகளில் டெஸ்ட் கிரிக்கெட் இல்லாது ஒழிந்து விடுகின்ற அபாயம் ஏற்படும் என்பது மறுப்பதுக்கில்லை.

ப.சுகிர்தன்



# பனைமரக்காடு திரைப்பட பாடல் வெளியீட்டு





யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக பனைமரக்காடு எனும் முழுநீள திரைப்படத்தின் பாடல்கள் வெளியீட்டுவிழா மிககோலாகலமாக அண்மையில் நடைபெற்றது. இப்பாடல்கள் வெளியீட்டில் தயாரிப்பாளர் சுபா செவ்வேள் இயக்குநர் கேசவராஜன் படத்தின் கதாநாயகன் ஜெகதீஸ் கதாநாயகி அக்ஷரா ஆகியோர் வெளியிட்டு வைக்க அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் தென்னிந்திய திரைப்பட இயக்குநர் மித்திரன் ஆர் ஜவகர் ஆகியோர் வெற்றுக்கொண்டனர். பேசாதகண்ணும் பேசுமே ,காதல் டொட்கொம் கோடம்பாக்கம் ஆகிய திரைப்படங்களை த் தயாரித்த ஏஏஏ மூவிஸ் நிறுவனம் பனைமரக்காடு என்னும் திரைப்படத்தையும் தயாரித்து வருகின்றது.



கிளிநொச்சி மகாதேவா சைவசிறார் இல்லத்திற்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி அண்மையில் விஜயம் செய்தபோது மகாதேவா ஆச்சிரம கணேசாணந்த சுவாமிகள் ஆளுநருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பதையும் அருகில் வடக்கு மாகாண பொதுநிர்வாக பிரதம செயலாளரும் மகாதேவா ஆச்சிரம தலைவருமான தி. இராசநாயகம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் -யாழ்.மத்திநிருபர்)



ஏழாலை மயிலங்காடு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கர உற்சவ காலத்தில் மகாபரதம் பற்றி தொடர் சொற்பொழிவாற்றிய சிவ ஸ்ரீ சி.வை. நித்தியாநந்தசர்மா ஆலயக்குருக்களாக சிவ ஸ்ரீ சோமபாலகுருக்களால் கௌரவிக்கப்பட்டதை படத்தில் காணலாம். (படம் -நல்லூர் நிருபர்)



கிளிநொச்சி மகாதேவா சைவசிறார் இல்லத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மகாதேவா சைவசிறார் இல்ல பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரி. இரட்ணசிங்கம் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்- யாழ்.மத்திநிருபர்)



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய உயர்தர மாணவர்கள் மேற்கொண்ட கல்விச்சுற்றுலாவின்போது அதிபர் ச.தியாகராசா பிரதி அதிபர் கி.குகநாதன் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (படம் -வடமராட்சி)

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday September 02, 2011